# மஞ்சரி

கர - புரட்டாசி

சைகிளின் கதை

குரைக்காத நாய்

டான்ஸில் பயம்

உலகத்தில் பெரியவர் யார்?

பாடம் கேட்ட கிளி (சிறுகதை)

உத்தமி (நாவல் சுருக்கம்)

-6-

அணா

## வாழும் வகை

நீர்க்கோழியைப்போல் உலகத்தில் வாழுங்கள். அந்தப் பறவையின்மீது நீர் ஓட்டிக்கொள்கிறது; ஆனால் அது நீரை உதறித் தள்ளுகிறது. மண்ணுக்குள் வாழும் ஒருவகை மீனைப் போல் வாழுங்கள். அது மண்ணுக்குள் வாழ்ந்தாலும் அதன் தோல் எப்போதும் பிரகாசமாக இருக்கிறது.

—ராமகிருஷ்ண பரமஹம்ஸர்


## மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன் — கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனுபதி — 'குமுதினி'
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி — கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி — 'ஆர்வி'
கௌரி அம்மாள் — மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, சங்கர், மகான், சுசி.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.



மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 4] [இதழ் 10

# மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

# ஊரும் உலகமும்

★

எடுத்ததற்கெல்லாம், நினைத்தவர்களெல்லாம், யாருக்கு விரோதமாக வேண்டுமானாலும் உபவாசம் கிடப்பதென்றால், அப்புறம் இந்த முறைக்கு அர்த்தமே இல்லாமல் போய்விடும். ஆழ்ந்து கவனித்தால், மகாத்மா காந்தியின் உபவாசங்கள் அத்தனையும் எவருக்கும் விரோதமாக மேற்கொண்டவை அல்ல, ஆத்ம பரிசுத்தமான தூய விரதமே என்று புலனாகும். ஆந்திர மாகாணம் உடனே வேண்டும் என்பதற்காக ஸ்வாமி சீதாராம் முதலிய சில சிறந்த ஆந்திர தேசபக்தர்கள் உபவாசம் கிடக்கிறார்களே, இதை நம்மால் சற்றும் ஆதரிக்க முடியவில்லை. இந்த உபவாசத்தில் யாரிடமும் குரோதம் இல்லை என்று சொல்ல முடியாது. இதுமாதிரி நோக்கங்களை உன்னதமான ஆத்ம பரிசுத்தத்துக்குரியவை என்று மதிக்க முடியாது. உபவாசம் கிடப்பவர்கள் நேரு, ராஜேன் பாபு போன்ற தலைவர்களின் கடிதங்களை எண்ணியாவது உபவாசத்தை நிறுத்திக்கொள்வதே அழகு.

* * *

பாகிஸ்தானின் போக்கே விநோதமாயிருக்கிறது. எல்லைப்புறத்தில் கான் சகோதரர்களைச் சிறையிலேயே இன்னமும் அடைத்து வைத்திருப்பதுபற்றி நேரு இரண்டு பேச்சுக்களில் வருத்தம் தெரிவித்தார். அதெப்படி வருத்தம் தெரிவிக்கலாம் என்று ஆட்சேபித்துச் சீறியது பாகிஸ்தான் சர்க்கார். பாகிஸ்தானின் இந்த ஆட்சேபத்தை நிராகரித்துவிட்டது இந்திய சர்க்கார். கான் சகோதரர்கள் இந்திய சுதந்தரத்துக்காகப் போராடிய மகாதீரர்கள்; மகாத்மாவின் அத்தியந்த நண்பர்கள்; நேருவின் பழைய தோழர்கள். பாகிஸ்தான் உள்ளிட்ட இந்திய விடுதலையில் பெரும்பங்கு சேவை அவர்களுடையது. அவர்கள் கோரிய விடுதலை இந்த உபகண்டத்துக்குக் கிடைத்துவிட்டது; ஆனால், அவர்களுக்கு இன்னமும் சிறைவாசந்தான்! இது என்ன விசித்திரம்! இதுபற்றித் தன் உள்ளத்தினுள்ளே புழுங்கும் வருத்தத்தை வெளியிடும் உரிமை இந்தியாவுக்குப் பரிபூர்ணமாக உண்டு. அதை இந்தப் பூமியிலுள்ள யாரும் மறுக்க முடியாது.

* * *

தமிழ் நாட்டின் ஒரு மேதையைச் சமீபத்தில் நாம் இழந்துவிட்டோம். வ. ரா., ஓர் அபூர்வ புருஷர். அவருடன் மிக நெருங்கிப்

பழகிய பல அறிவாளிகளுக்கு இது தெரியும். அவர் சிறந்த எழுத்தாளர்; இலக்கியக் கலைஞர்; சிந்தனையாளர்; சம்பாஷணை நிபுணர்; சமூக ஊழல்களையெல்லாம் உடனே சுட்டெரித்துத் தூய்மையும் வலிமையும் பெற்றதாக இந்து சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்ற துடிப்பு நிறைந்தவர். இவைகளுக்கு அவர் எழுத்துக்களிலும் வாழ்க்கையிலும் பல ருசுக்கள் உண்டு. ஆனால் இவைகளையெல்லாம் அவரிடம் அறிந்து பாராட்டுவோர் பலர் இல்லை. இது நாட்டின் துர்ப்பாக்கியம். அவருக்கு யாரிடமும் மனக் கசப்புக் கிடையாது. ஆயினும் வெட்டொன்றும் துண்டிரண்டுமாக அவர் பேசும்போது, பலருக்கு உள்ளூற ஓர் ஆதங்கம் ஏற்படும். என்றாலும் அவரிடம் எல்லாருக்கும் சிறந்த மதிப்பு. எழுத்துப் பலத்தால் இந்த நாட்டில் எவனும் கீர்த்தியும் செல்வாக்கும் பெறமுடியவில்லையே என்பதில் அவருக்கு அளவற்ற வருத்தம். தம் எழுத்துப் பலத்தை விட்டு, தீரமான சம்பாஷணை வலிமையையும் புருஷாதிகாரத்தையும் கொண்டே ஆண்டி முதல் ஆண்டான் வரை எல்லார் நட்பையும் அவர் பெற்றார். எழுத்தாளனும் சமூகத்தின் இதர கலைஞர்களையும் அரசியல்வாதி முதலிய தலைவர்களையும் போல், செல்வமும் செல்வாக்கும் பெற எப்படியாவது வழி தேடவேண்டும் என்று அவர் பாடுபட்டவர். பாரதியின் தோழரான அவர் பாரதிக்குப் பிறகு பல தமிழ் எழுத்தாளர்களின் தலைவரும் வழிகாட்டியுமாயிருந்தார். அவர் காலமானதற்கு அவருடைய மனைவிக்கும் எண்ணற்ற நண்பர்களுக்கும் நம் உள்ளம் தோய்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

* * *

பிஹாரில் பட்டினிச் சாவுகள் அதிகம் என்று அடிக்கடி செய்தி வருகிறது. இருந்தாலும் அங்கேயும் ஓர் ஆச்சரிய மனிதன் இருக்கிறான் என்பதைக் கேட்டு நாம் சந்தோஷம் அடையத்தான் வேண்டும். உலகத்தின் தற்கால பீமசேனன் என்று அவனைச் சொல்லலாம். அவன் உயரம் ஜாதியடியால் ஏழடி; நிறை ஆறரை மணங்கு—இம்பீரியல் மணங்கு. அதாவது 500 சொச்சம் பவுண்டு. தினமும் அவன் தன் நிலத்தைத் தானே உழுகிறானாம். அவனுடைய இந்தப் பலத்தின் ரகசியம் என்னவாம் தெரியுமோ? ஒவ்வொரு நாளும் அவன் பத்துச் சேர் பால் குடிக்கிறானாம். பேஷ்! அதிகாரிகளின் 'அதிகப் பால் குடியுங்கள்' என்ற பிரசாரத்துக்கு நல்ல ஆதரவு கிடைத்துவிட்டது. அவர்கள் இந்தப் பீமசேனனைச் சுட்டிக் காட்டலாம். ஆனால், 'பால் எங்கே?' என்று ஒருவன் கேட்டால் என்ன செய்வது என்கிறீர்களா? "அதை நீதான் கண்டு பிடிக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டால்போகிறது!

# சைகிளின் கதை

★



**இன்று எங்கே பார்த்தாலும் நாம் காணும் சைகிள் தோன்றிய வரலாறு ரசமானது. இங்கே உள்ள சித்திரத்தைப் பார்த்தால் நமக்குச் சிரிக்கத் தான் தோன்றும். ஆனால் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன் இந்த மாதிரி சைகிள் சர்வ சகஜமாக உபயோகத்தில் இருந்து வந்தது. 'சர்க்கிள் ஆரேரீடேலர்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளி வந்த தகவல்களை ஆதாரமாகக் கொண்டது இந்தக் கட்டுரை.**

இன்று நாம் உபயோகிக்கும் சைகிளுக்கும் முதல் முதல் கண்டுபிடித்த சைகிளுக்கும் கொஞ்சங்கூட ஒற்றுமையே இல்லை. இரண்டு சக்கரங்களும் அவற்றை இணைக்கும் ஒரு சட்டமும் இருந்தாலும் மற்ற விதத்தில் இரண்டுக்கும் சம்பந்தமேயில்லை.

1816-இல் ஜெர்மனி தேசத்தில் பாரன் வான் டிரெய்ஸ் என்பவர் தான் முதல் முதலில் சைகிளைக் கண்டுபிடித்தவர். அதை 'விளையாட்டுக் குதிரை' என்றே வழங்கினார்கள். முழுவதும் மரத்தினால் ஆனது அது. வேகமாக நடக்க உதவும்படி அதை அவர் அமைத்திருந்தார். காலால் உதைத்துத்தான் அதையும் மிதிக்கவேண்டும்.

இதேபோல் ஒரு சைகிளை மூன்று வருஷங் கழித்து அமெரிக்காவில் செய்யத் தொடங்கினார்கள். ஆனால் இவர்களெல்லாரும் தம் கடைகளைச் சீக்கிரமே மூடிவிட வேண்டியதாயிற்று. ஜனங்களுடைய ஆதரவு கிடைக்காததுதான் இதற்குக் காரணம். சில டாக்டர்கள் இந்தச் சைகிள்களினால் காலில் ஒருவித நோய் உண்டாகிறது என்று வேறு பயமுறுத்திவிட்டார்கள்.

பிறகு ஸ்காட்லாந்துக்காரன் ஒருவன் இதில் சிறிது அபிவிருத்தி செய்தான்; 70 மைல் தூரம் சவாரி செய்து ஜனங்களைப் பிரமிக்க வைத்துவிட்டான். ஜனங்களிடையே இப்படி வீண் பரபரப்பு உண்டுபண்ணினதற்காகப் போலீஸார் இவன் பிரயாணம் முடிந்ததுமே இவனைக் கைது செய்து சிறையில் தள்ளிவிட்டார்கள். சைகிளைப்பற்றிய வரலாற்றில் இவன் ஒருவன்தான் இப்படித் தியாகி என்று பெயர் எடுத்தான் என்று தெரிகிறது.

1869-இல் மறுபடியும் அமெரிக்காவில் சைகிள் உற்பத்தியைத் தொடங்கினார்கள். உற்சாகமுள்ள சிலர் சேர்ந்து உருவாக்கிய இதை 'எலும்பு குலுக்கி' என்று எல்லாரும் அழைத்தார்கள். பாரிஸில் பிற்பாடு தயாரித்த இதே போன்ற சைகிள், முழுவதும் மரத்தினாலேயே செய்தது. 'எலும்பு

குலுக்கி' என்ற பெயர் இதற்கு முற்றும் பொருந்தும். ஸ்பிரிங்கோ, உருளையோ இதற்குக் கிடையாது. யாராவது சரளைக்கல் போட்ட தெருவில் சவாரி செய்ய முன்வந்து விட்டால் போதும். அவன் உயிரே போய்விடும்போல அவனைக் குலுக்கி எடுத்துவிடும்.

இந்த விதமான சைகிள்களில் முன் சக்கரம் பின் சக்கரத்தை விடக் கொஞ்சம் பெரிதாகவே இருக்கும். இந்தக் காலத்துச் சைகிள்களைப்போல் இல்லாமல் பெடலும் கிராங்கும் முன் சக்கர அச்சோடு பொருந்தியிருந்தன. அமெரிக்காவில் அநேகம் பேர் இந்த 'எலும்பு குலுக்கி'களை அங்கங்கே தயாரிக்க ஆரம்பித்தார்கள். ஆதியில் கண்டுபிடித்த 'விளையாட்டுக் குதிரை'யைவிட இது எவ்வளவோ தேவலை. இருந்தாலும் இதற்கு ஜனங்களிடையே போதிய செல்வாக்கும் மதிப்பும் ஏற்படவில்லை. இந்தச் சமயத்தில் கர்னல் போப் என்பவர் சைகிள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை நிறுவினார். இங்கே உயரமான சக்கரங்கள் உடைய புது வகைச் சைகிள்களைத் தயாரித்தார்.

ஜனங்களிடையே இதற்கு ஆதரவு இருப்பதை உணர்ந்த கர்னல் போப்பும் இன்னும் சிலரும் அமெரிக்காவின் கிழக்குப் பாகங்களில் உள்ள பல சிறு நகரங்களில் சிறு தொழிற்சாலைகளை ஆரம்பித்தார்கள். அந்தச் சைகிள் 70 பவுண்டு நிறையுள்ளது. அதன் விலை 313 டாலர். வருஷத்துக்கு இவ்விதம் ஒரு லட்சம் சைகிள்களை அவர்கள் தயாரித்தார்கள். எந்தக் கம்பெனியார் முன் சக்கரங்களைப் பெரிதாகச் செய்கிறார்கள் என்றே அப்போது போட்டா போட்டி. 1886-ஆம் வருஷத்தில் முன் பக்கத்துச் சக்கரத்தின் உயரம் 5 அடி. பின் சக்கரத்தின் உயரம் 16 அங்குலம். சவாரி செய்பவன் கீழே விழுந்தானே ஆள் பாடு ஆபத்துத்தான்!

அதே சமயத்தில் இங்கிலாந்தில் லாஸன் என்பவர் 'ஸேப்டி' சைகிள் செய்ய ஆரம்பித்தார். இதன் பின் சக்கரமும் முன் சக்கரமும் சமஉயரமுள்ளவை. பின் சக்கரத்தைப் பெடலுடன் ஒரு சங்கிலியால் இணைத்தார். பெடலை மிதித்தால் பின் சக்கரம் சுற்றும். உட்காரும் இடமும் தணிவாக, சவாரி செய்பவனுக்கு அபாயமில்லாதபடி அமைந்திருந்தது.

இவ்விதம் ஒருசைகிள் தயாரானதும் போப்பின் சைகிள்களை மூலையில் போடவேண்டியதாயிற்று. போப் இதைப் பார்த்துவிட்டு இதே போல அமெரிக்காவிலும் செய்யத்தொடங்கினர். 'ரெயிலுக்கு அடுத்தபடி வேகமாகப் போகக் கூடியது' என்று இதை விளம்பரம் செய்தார்கள். இது ஜனங்களுடைய மதிப்பைப் பெரிதும் கவர்ந்து விட்டது.

10 மைல் வேகந்தான் போகலாம் என்ற கட்டுப்பாட்டை மீறிக் கூட இளைஞர்கள் சவாரி செய்தார்கள். லிலியன் ரஸ்ஸல் என்ற ஒரு பெண் இதில் தங்க முலாமிட்ட சக்கரங்களை உடைய சைகிளில் சவாரி செய்து போக்குவரத்தையே ஒரு தடவை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டாளாம். இதற்குப் பின் விளையாட்டுப் பந்தய உலகில் பல 'முடிசூடா மன்னர்'கள் தோன்றினர்கள். ஒரு சர்க்கஸ் காட்சியில் மாரிஸ் பார்டோ என்பவர் 25 பேர்களைச் சுமந்து கொண்டு சைகிளில் சவாரி செய்து காட்டினர்.

1900 - ஆம் வருஷத்தில் கிட்டத் தட்ட 11 லட்சம் சைகிள்கள் அமெரிக்காவில் 300 தொழிற்சாலைகளில் தயாராயின. எல்லாப் பாகங்களும் கையால் தயாரானவை. (இப்பொழுதோ பன்னிரண்டே பெரிய கம்பெனிகள் சுமார் 2 கோடி சைகிள்களைத் தயாரிக்கின்றன). அப்போது அமெரிக்காவில் மற்ற வியாபாரிகளின்பாடு சங்கடமாகிவிட்டது. அவர்கள், "சைகிள் வாங்குவதற்காகப் பணத்தைச் செலவழித்துவிட்டு, ஜனங்கள் வேறு ஒன்றுமே வாங்குவதில்லை" என்று குறைப்பட்டுக்கொண்டார்கள். அதிலும் செருப்புக் கடைக்காரர்கள் செருப்புகளுக்குக் கிராக்கியே குறைந்துவிட்டது என்று முணுமுணுத்தார்கள். தொப்பிக் கடைக்காரர்கள், சைகிள் சவாரி செய்யும் ஒவ்வொருவனும் இரண்டு தொப்பியேனும் வாங்கவேண்டும் என்று ஒரு மசோதாவையே கொண்டுவர முயன்றார்கள்.

1900 - ஆம் வருஷத்துக்குப் பிறகு சைகிள் உற்பத்தி கொஞ்சம் மட்டுப்பட்டுவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். தொழிலையெல்லெல்லாம் யந்திர மூலம் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்துக்குச் சைகிள் வெறியே தூண்டுதலாக இருந்தது. அதற்கு முன் அங்கங்கே கொஞ்சம் பேரே யந்திர மூலம் செய்யும் சில சில்லறைத் தொழில்களில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். ஆனால் சைகிள் உற்பத்தியாளர்கள் யந்திர பாகங்களைத் தயாரிக்கப் புது வகைச் சாதனங்களைக் கண்டுபிடித்து நிர்மாணித்துவிட்டார்கள். இதனால் உலோகத் தொழிலும் ரப்பர்த் தொழிலும் விரைவில் அபிவிருத்தியடைந்தன.

ஆகாய விமானம் கண்டுபிடித்த ரைட் சகோதரர் போன்றவர்கள், இப்படிச் சைகிள் வியாபாரம் நடத்தினவர்கள்தான். சைகிளில் உபயோகித்த சில முறைகளையே முதலில் மோட்டார்களிலும் விமானங்களிலும் கடைப்பிடித்தார்கள். இல்லாவிட்டால் அவ்வளவு விரைவில் மோட்டார்த் தொழிலிலும் விமானத் தொழிலிலும் அபிவிருத்தி ஏற்பட்டிராது. பின்னால் வியாபார மந்தம் நேர்ந்தபோது கூடச் சைகிள் உற்பத்திமட்டும் தடைப்படவில்லை; பெருகவே ஆரம்பித்தது. இதற்குப் பல காரணம் உண்டு. கொடுத்த பணத்துக்குப் போதுமான பிரயோஜனம் இருந்தால் ஏராளமான சைகிள் தயாரிக்கலாம் என்று உணர்ந்தார்கள் சைகிள் கம்பெனியார். மோட்டார் வாகனங்கள் கண்டுபிடிக்கச் சைகிள்தான் பெரிதும் பயன் பட்டது. ஆனாலும் மோட்டாரில் அபிவிருத்தி ஏற்பட ஏற்பட அதிலிருந்து பல புதுவிஷயங்களைச் சைக்கிள் கம்பெனியார் தெரிந்துகொண்டார்கள். முன்னை விட இப்போது ஏராளமான சிறுவர்களும் சிறுமியரும் சைகிளை உபயோகிக்கிறார்கள். சைகிள் சவாரி தமாஷாக இருக்கிறது, உடலுக்கும் வலி ஊட்டுகிறது என்பதால் வயதானவர்களும் இதை உபயோகித்து வருகிறார்கள்.

இப்பொழுதும் வருஷம் ஒன்றுக்கு 20 லட்சம் சைகிள்கள் உற்பத்தியாகின்றன—1900 - ஆம் வருஷத்தில் தயாரானதுபோல இரண்டு மடங்கு!

# சீதையின் தருமோபதேசம்

ராமன் சித்திரகூடத்தை விட்டுத் தண்டகாரணியத்துக்குப் புறப்பட்டான். அத்திரி முனிவரின் ஆசிரமத்துக்குச் சென்றபோது அவரும் அவர் மனைவி அநசூயையும் ராமனைச் சிறப்பாக உபசரித்தார்கள். ஒருநாள் விராதன் என்ற ராட்சசன் அவர்களை வழி மறித்தான்; சீதையை மடியில் எடுத்துவைத்துக் கொண்டு ராம லட்சுமணர்களைக் கொல்ல முயன்றான். ஆனால் அவர்கள் அவனைக் கொன்று காட்டின் ஒரு புறத்தில் புதைத்தார்கள்.

பிறகு ராமன் சரபங்கரின் ஆசிரமத்துக்குச் சென்று அவரைப் பிரம்மலோகத்துக்கு அனுப்பினான். அப்போது பல முனிவர் ஒன்றுகூடி ராமனிடம் தங்கள் உடம்பைக் காட்டி ராட்சசர்கள் தங்களுக்குத் தீங்கு செய்வதாகத் தெரிவித்தார்கள்; "எங்களைக் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள். ராமனும் ராட்சசர்களைக் கொன்று அவர்களின் துயரத்தை அகற்றுவதாக வாக்களித்தான்.

பிறகு ராமன் சுதீட்சிண முனிவரின் ஆசிரமம் சென்றான். வழியில் சீதை ராமனை நோக்கி அன்போடு சில வார்த்தைகளைச் சொல்லலானாள்:

"நாம் அறிய முடியாதபடி நுணுக்கமான விதத்தில்கூடப் பாவம் நம்மைப் பற்றிக்கொண்டுவிடுகிறது. ஆசையை அடக்கியவனால் மட்டுமே அதைத் தடுக்க முடியும். பொய் சொல்லுவதும் பிறர் மனைவியை விரும்புவதும் காரணமில்லாமல் கொடுமை செலுத்துவதும் ஆசையால் ஏற்படும் தீச்செயல்கள் ஆகும். இவற்றில் பொய் பேசுவது உங்களிடம் இல்லை. ஏற்படவும் ஏற்படாது. நீங்கள் மனைவி

யிடமே மனம் செலுத்தியவர்; தர்மிஷ்டர்; சத்தியசந்தர்; தந்தையின் வார்த்தையைக் காப்பவர்; புலன்களை அடக்கியவர். ஜீவஹிம்சை செய்வதே மிகவும் கொடியது. நமக்குத் தீங்கிழைக்காத பிராணிகளுக்குத் துன்பம் விளைப்பானேன்? பகுத்தறிவில்லாமல் செய்யும் காரியம் இது. இதைத்தான் இப்போது நீங்கள் செய்துவருகிறீர்கள். முனிவர்களைக் காப்பதற்காகத் தண்டகாரணியத்தில் வாழும் ராட்சசர்களைக் கொல்வதாகப் பிரதிக்ஞை செய்திருக்கிறீர்கள். இதுதான் எனக்குப் பெருங்கவலையாக இருக்கிறது. நீங்கள் தண்டகாரணியம் போவது எனக்குப் பிடிக்கவில்லை. க்ஷத்திரியர்களுக்கு வில்லும் அக்கினிக்கு விறகும் அருகில் இருக்குமானால் அவை அவர்களுடைய சக்தியை வளர்க்கும்.

"முன் ஒரு காலத்தில் ஒரு காட்டில் பெரிய தவசி ஒருவர் இருந்தார். அவருடைய தவத்தைக் கெடுக்க எண்ணி இந்திரன் போர் வீரன் வேஷம் பூண்டு கையில் கத்தியுடன் அந்த ஆசிரமத்துக்கு வந்தான். அந்தக் கத்தியை அவரிடம் ஒப்படைத்துவிட்டுப் போனான். முனிவர் காட்டில் சுற்றும்போதெல்லாம் கூடவே அதையும் பத்திரமாக எடுத்து வைத்துக்கொள்வார். கிழங்கு, பழம், வேர் எதை எடுத்து வரச் சென்றாலும் அந்தக் கத்தி இல்லாமல் போவதில்லை. நாளடைவில் முனிவர் தவத்தில் சிரத்தை இழந்து கொடிய வழிகளில் ஈடுபட்டார். இதன் பயனாக அவர் நரகத்துக்குப் போய்ச் சேர்ந்தார். அக்கினியின் சேர்க்கையைப் போன்றது ஆயுதத்தின் சேர்க்கை.

"நீங்கள் அந்த முனிவரின் நிலையை அடையக் கூடாது. வில்லைக் கையில் வைத்திருப்பதால் தான் தண்டகாரணியத்தில் வாழும் ராட்சசர்களைக் கொல்ல உங்களுக்குப் புத்தி தோன்றியிருக்கிறது. நமக்குத் தீங்கு இழைக்காத மக்களைக் கொல்வது எனக்கென்னவோ பிடிக்கவில்லை. துன்புற்றவர்களைக் காப்பதற்கே ஆயுதம் ஏற்பட்டது. கொடிய ஆயுதம் எங்கே? அமைதியான காடு எங்கே? க்ஷத்திரியத்தன்மை எங்கே? தவம் எங்கே? நாம் முனிவர் இருக்கும் காட்டுக்கு வந்திருக்கிறோம். இந்த இடத்துக்கேற்ற தருமத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டும். ஆயுதம் தரிப்பதால், புத்தி கெட்டுவிடும். நீங்கள் அயோத்திக்குப் போய் மீண்டும் ஆயுதத்தை எடுக்கலாம். அப்போது என் மாமிமார்கள் திருப்தி அடைவார்கள். ராஜ்யத்தை விட்டு இங்கே இருப்பதால் தர்மத்தைக் கடைப்பிடிப்பதே உசிதம். தர்மத்தால் எல்லாம் பெற முடியும். நீங்கள் பரிசுத்தமான மனம் உடையவர்; தர்மத்தைக் கடைப்பிடியுங்கள். என்னவோ, பெண்களுக்கு இயற்கையான சபல குணத்தால் இதைச் சொன்னேன். தம்பியுடன் யோசித்து எது உசிதமோ அதைச் செய்யுங்கள்" என்றாள்.

தன்னிடம் பக்தியால் சீதை சொன்னதைக் கேட்ட ராமன் அவளைப் பார்த்துச் சொல்வான்: "தேவி, என் நன்மைக்காகவே இதெல்லாம் சொல்கிறாய். கஷ்டப்பட்டவர்களைக் காப்பதுதான் ஆயுதத்துக்கு உபயோகம் என்று நீ சொன்னாயே; நான் அதற்காகவே தான் ஆயுதத்தைத் தாங்கியிருக்கிறேன். இங்கே வாழும் முனிவர்கள் தர்மத்தையே செய்து கொண்டு, கிழங்கு, வேர், பழம் இவைகளை உண்டு காலங்கழித்து வருபவர்கள். கொடிய ராட்சசர்கள் அவர்களைத் துன்புறுத்துகிறார்கள். சில சமயம் அந்த ராட்சசர்கள் முனிவர்களையே கூடத் தின்றுவிடுகிறார்கள். முனிவர்கள் இதை என்னிடம் சொல்லி முறையிட்டார்கள். 'எங்கள் தவவலிமையால் நாங்கள் அந்த ராட்சசர்களை அழிக்க முடியும். ஆனால் தவப்பயன் வீணாகிவிடுமே என்றுதான் அப்படிச் செய்யாமல் இருக்கிறோம். நீங்கள் தான் எங்களைக் காக்க வேண்டும்' என்றார்கள். நான் அவர்களைக் காப்பதாக வாக்களித்துவிட்டேன். உயிரை விட்டாலும் விடுவேன்; உன்னையும் லட்சுமணனையுங்கூட விட்டாலும் விடுவேன்; கொடுத்த வாக்கை மீற மாட்டேன். அவர்கள் முறையிடாமலே இப்படி அவர்களைக் காப்பாற்ற வேண்டியது என் கடமை. அப்படி இருக்கும்போது நான் எப்படிச் சும்மா இருப்பது? சீதா, என் பேரில் அன்பினால் நீ சொன்னதைக் கேட்டுச் சந்தோஷப்படுகிறேன். நீ என் தருமத்தில் பங்கு கொண்டவள். உன் குலத்துக்கும் அறிவுக்கும் ஏற்றபடியே சொன்னாய்."

இவ்விதம் சொல்லி ராமன் வில்லைக் கையில் பிடித்துக்கொண்டு சீதாலட்சுமணர்களுடன் அழகிய காட்டு வழியே செல்லலானான்.

**முதலில் தோன்றும் உறுப்பு**

மனிதக் கருவில் கண்கள்தான் முதல் முதலாக உருவாகின்றன. ஆரம்பத்தில் அவை இரண்டு குழிகள்போல் தோன்றும்.

—பெட்டர் விஷன் இன்ஸ்டிட்யூட்

# க்விஸ்

**[இதோ சில கேள்விகள்: எங்கே உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு 17-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]**

1. சம்வத், சகம் என்ற ஆண்டுகள் தோன்றக் காரணமாக இருந்த இந்திய அரசர் யார் யார்? அவைகளை இன்று எப்படி வழங்குகிறோம்?

2. உலகத்திலுள்ள மிகப் பெரிய நதிகளில் ஒன்று அமேஜான். இது எந்த நாட்டில் இருக்கிறது? இதன் உற்பத்தி ஸ்தானம் எது? இந்த நதியின் நீளம் எவ்வளவு?

3. இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரே தேதியில் சுதந்தரம் பெற்றன. இதேபோல் உலகில் வேறு இரண்டு நாடுகள் ஒரே தேதியில் சுதந்தரம் பெற்றன? அவை எவை? அந்த நாள் எது?

4. பாரசீகம், அமெரிக்கா, ஜப்பான், அயர், இத்தாலி, ஜெர்மனி இந்த நாடுகளில் பார்லிமெண்டைப் போல் அரசியல் பிரதிநிதிகள் அடங்கிய சபைக்குத் தனித் தனிப் பெயர்கள் வழங்குகின்றன. அவை எவை?

5. சர்வாதிகாரிகளுக்குள்ளே இன்று அதிக மக்களை ஆண்டு வருபவர் யார்?

6. வட இந்தியாவிலே சிற்ப வேலைக்கும், தென்னிந்தியாவிலே பழமைக்கும் பெருமைக்கும் பெயர் போன ஜைனக் கோயில் சில உண்டு. அவை எவை? பின்னதிலுள்ள விசேஷம் என்ன?

7. உலகப் பிரசித்தி பெற்ற இரண்டு இலக்கிய மேதைகள் சமீபத்தில் காலமானார்கள்; அவர்கள் யார் யார்? அவர்களைப்பற்றிய விசேஷம் என்ன?

8. புலி இனத்தில் வெள்ளை நிறம் உள்ளவை நம் நாட்டில் உண்டு. அவை எங்கே இருக்கின்றன?

9. உஷ்ணத்தை அளக்க மூன்று விதத் தெர்மாமீட்டர்கள் உண்டு; அவை எவை? எங்கெங்கே உபயோகப்படுத்தி வருகிறார்கள்? உடலின் சாதாரண உஷ்ண நிலை அவை ஒவ்வொன்றிலும் எவ்வளவு எவ்வளவு?

10. 'கிரிராஜசுத'; 'மாமவ பட்டாபிராம', 'ஓ ஜகதம்பா', 'அம்ப நீலாயதாட்சி' இந்தச் சம்ஸ்கிருத சாகித்தியங்களை இயற்றியவர் யார் யார்?

11. இந்து ஐதிகப்படி ஐந்து முகம் கொண்ட முக்கியமான தெய்வங்கள் எவை?

12. சூரியன், புதன், குரு இந்தக் கிரகங்களுக்குரிய கற்கள் எவை?

13. பருந்து, ராஜாளி, புறா இந்த மூன்று பறவைகளும் ஒரு மணிக்குச் சுமார் எவ்வளவு தூரம் பறக்கும்?

# குடியரசு

## —பிளேட்டோ கண்ட லட்சியம்—

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

**'குடியரசு' என்று சொன்னதும், கிரேக்க வேதாந்தி பிளேட்டோவின் நூல் உடனே எவருக்கும் ஞாபகம் வரும். ஆனால், அது சாதாரண அர்த்தத்தில் குடியரசு முறைகளை விளக்குவதல்ல; தர்மம், அரசியல், சமயம், கல்வி, மனத்தத்துவம், வேதாந்தம், கலை இப்படிப் பல விஷயங்களைப்பற்றியும் வினா விடையாக விவரிக்கும் புராதன நூலே. அவைகளிலிருந்து பிளேட்டோவின் லட்சியக் குடியரசை நாம் கண்டுகொள்ளலாம். இந்த நூலையே பிளேட்டோவின் மிகச் சிறந்த நூல் என்று போற்றுகிறார்கள். கற்பனை உலகங்களைப்பற்றி 'மஞ்சரி'யில் தொடர்ச்சியாக விவரித்துவரும் ரா. ஸ்ரீ. தேசிகன் இங்கே இந்த நூலின் சாராம்சத்தைத் தருகிறார்.**

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கிரேக்க நாட்டுச் சரித்திரத்தை நாம் ஆராயும்போது மூன்று மாபெரும் உருவங்கள் காலப்பனி மூட்டத்தைக் கிழித்துக்கொண்டு நம் நயன கோசரத்துக்குள் மிதந்து வருகின்றன. ஞானமே வடிவாய் நின்ற சாக்ரடீஸ், சதா சலிக்குஞ் சாயா உலகத்தின் அழியா அசலை நாடும் பிளேட்டோ, உலகின் உண்மை நிலையை நோக்கி இலக்கியத்தைப் போற்றும் அரிஸ்டாடில் இந்தச் சான்றோர்களின் வடிவங்கள் நம் உள்ளத்தைக் கவராமல் போகா.

சாக்ரடீஸின் சிஷ்யர் பிளேட்டோ; பிளேட்டோவின் சிஷ்யர் அரிஸ்டாடில். ஆனால் சிஷ்யர்கள் தம் தம் குருமார்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றவில்லை. சாக்ரடீஸின் பழுத்த ஞானத்தைப் பிளேட்டோ வியந்தாலும் தமக்கென்றே ஒரு தனித்த கொள்கையை அவர் வகுத்துக்கொண்டார் என்ற விஷயம் அவர் இயற்றிய நூல்களை ஆராய்பவர்களுக்குப் புலனாகாமல் போகாது. அரிஸ்டாடிலோ தமக்குக் குருவாயுள்ள பிளேட்டோ கொண்ட கருத்தைத் தாக்கியே பேசுகிறார்.

கி. மு. 427-இல் பிளேட்டோ ஏதன்ஸ் நகரத்துக்கு அருகிலுள்ள ஏஜினா (Aegina) என்ற தீவில் பிறந்தார். அவருடைய தகப்பனார் அரிஸ்டன் (Ariston) வேந்தர் பரம்பரையைச் சார்ந்தவர். தாய் பெரிக்டியானி (Perictione) என்பவள் மிகவும் புகழ்பெற்ற குலத்தில் தோன்றியவள். பெருங்குடியின் தூய ரத்தம் பிளேட்டோவின் நரம்பில் ஓடியது. குலப்பெருமையும் இனச்செருக்கும் பிளேட்டோவை விட்டபாடில்லை. எகிப்து, இத்தாலி, சிஸிலி இந்த நாடுகளுக்குச் சென்று அங்குள்ள சமயாசாரியர்

களைக் கண்டு தத்துவங்களைத் துருவி ஆராய்ந்தார். பற்பல அநுபவம் நிரம்பிய பிளேட்டோ ஒரு கழகத்தை நிறுவினர். அந்தக் கழகத்தைக் கிரேக்க நாட்டின் எல்லாப் பாகங்களிலுள்ள வாலிபர்களும் அலங்கரித்தார்கள். அவர்கள் நடை உடை பாவனை எல்லாம் சாதாரண ஜனங்களிடத்தில் காணமுடியாத படி தனித்து நின்றன. அந்தக் காரணங்கொண்டே நகைச் சுவையெழுத்தாளர் அவைகளை எள்ளிப் பேசினதுமுண்டு. ஆனல் இந்தக் கழகத்தில் விளைந்தவை பிளேட்டோவின் ஞான முத்திரை பெற்று விளங்குகின்றன.

பிளேட்டோ கொண்ட கருத்துக்களின் மூலங்களை ஆராய்வோம். இவர் தம் உயிரைப்போல் போற்றி வந்த சாக்ரடீஸை ஏதன்ஸ் குடியரசு விஷம் வைத்துக் கொன்று விட்டது. அதனல் ஒரு புதிய குடியரசை இவர் உள்ளம் கற்பனை செய்தது. ஸ்பார்டாவிலுள்ள அரசியலைத் தமக்கு ஓர் அடிப்படையாக வைத்துக்கொண்டு அதன் மீது தம் கற்பனை உலகை எழுப்பினர் என்ருல், இதில் ஒரு வியப்பில்லை. ஸ்பார்டாவின் அரசியல் பிளேட்டோவின் மனத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது.

நிலமெல்லாம் ஸ்பார்டர்களுக்குரியது. நிலத்தைப் பல துண்டு போட்டுவிட்டார்கள். வென்றவர்களை அவர்கள் அடிமைகளாக்கிக் கொண்டுவிட்டார்கள். அந்த அடிமைகளுக்கு ஹெலட் (Helot) என்று பெயர். அவர்கள் அந்த அந்தத் துண்டு நிலத்தோடு சேர்ந்தே, தகப்பனிடமிருந்து பிள்ளைக்குப் பரம்பரையாய்க் கை மாறவேண்டும். நிலத்தை ஸ்பார்டர்கள் உழுவதில்லை. அந்தத் தொழிலைத் தங்கள் பெருமைக்குக் குறைவென்று நினைத்தார்கள். ராணுவத்துக்கே தம்மை அர்ப்பணம் செய்துவிட்டார்கள். இழிவுத் தொழிலை ஹெலட்களே செய்து வந்தார்கள். இந்தத் துண்டு நிலம் அரசாங்கத்தார் ஒவ்வொருவருக்கும் அளித்தது. ஆனல் பிரபுக்களுக்குத் தனித்த நிலங்களும் உண்டு. போர் புரிவதையே முக்கிய நோக்கமாக இவர்கள் கொண்டார்கள். நோய் வாய்ப்பட்ட குழந்தைகளைக் கடுங் குளிரில் வைத்துக் கொன்றுவிடுவார்கள். நாட்டுக்குத் தகுதியான குழந்தைகளையே வளர்ப்பார்கள். இருபது ஆண்டு வரையில் ஒரு பள்ளியில் வளரவேண்டும். அறிவு வளர்ச்சி, பௌதிக மனப் பண்பு இந்தக் கதையெல்லாம் அந்த நாட்டில் இல்லை. போர் வீரர்களாய் அவர்கள் திகழவேண்டும். அது தான் அவர்கள் முக்கிய நோக்கம். இருபது வயதுக்குமேல் மணம் புரிந்துகொள்ளலாம். ஆனல் முப்பது ஆண்டு வரையில் தனி விடுதியிலே காலத்தைக் கழிக்கவேண்டும். எல்லாம் பொதுச் சாப்பாடுதான். தனக்குரிய துண்டு நிலத்தில் விளைவதிலிருந்து வேண்டியவற்றைக் கொடுக்கவேண்டும். வறுமையும் தோன்றக்கூடாது; பணச்செருக்கும் தலையெடுக்கக்கூடாது. பொன் வெள்ளியை வைத்துக்கொள்ளக் கூடாது. நாணயம் இரும்பு நாணயமே. எளிய வாழ்க்கைக்கு லட்சியமாய் அந்த நாடு தோன்றிற்று. பெண்களும் தேகப்பயிற்சி செய்து வந்தார்கள். ஆண்களும் பெண்களும் ஆடையின்றிச் சேர்ந்தே பயின்ருர்கள். பெண்கள் வீரத் தாய்மார்களாய்த் திகழவேண்டும்; மணம் புரிந்துகொள்ள வேண்டும். பிள்ளைப் பேற்றை அடைந்தவர்க

ளுக்குத் தகுந்த உரிமைகளும் உண்டு. கணவன் மூலமாய்ப் பிள்ளை பிறக்காத நிலையில் அரசாங்கத் தாரின் கட்டளையின் பேரில் வேறு மனிதனை நண்ணி மகவைப் பெற லாம். அதற்கு அவர்கள் இணங் கினார்கள். இத்தகைய நிலையைப் பிளேட்டோவின் ஜனநாயகத்திலும் பார்க்கலாம். பிளேட்டோவின் ஜனநாயகத்துக்கு ஸ்பார்டா தந்த வளம் இதுதான். பைத்தாகரஸ் (Pythagoras), பார்மினிடீஸ் (Parmenides), ஹெராகிளிட்டஸ் (Heraclitus), சாக்ரடீஸ் இந்த நால்வரும் பிளேட்டோவின் மனத் தைப் பண்படுத்தினார்கள்.

ஞானி பைத்தாகரஸிடமிருந்து இவர் கற்றுக்கொண்டதை நோக்கு வோம். மதப்பற்று, பாரமார்த்திக நோக்கம், அமரத்துவத்தில் நம் பிக்கை, கணிதத்தில் ஓர் ஆர்வம் இவை யாவும் பைத்தாகரஸிட மிருந்து இவர் பெற்றார்.

பார்மினிடீஸ் உலகம் ஒரு மாயை என்ற கொள்கையை உடையவர். சங்கரர் கண்ட தத்துவமே இது. காலங் கடந்த, அழிவற்ற, மாறுதல் இல்லாத ஒரு தத்துவந்தான் உண்மை; மற்றது எதுவும் பொய்யே. இந்தத் தத்துவத்தில் பிளேட்டோ திளைத்தார்.

'உலகத்தில் ஒன்றும் நிலை இல்லை. எல்லாம் பிரவாகம்போல் மாறி மாறி வருகின்றன' என்று ஹெரா கிளிட்டஸ் மொழிந்த தத்துவமும் இவர் மனத்தை இழுத்திருக்கிறது. மாறுகிற ஐம்பொறிகளால் ஒரு வனுக்கு ஞானம் வருவதில்லை. இவைகளுக்கு வேறாயுள்ள பேரறி வாலேயே ஞானம் வருகிறது.

இது அறமா இல்லையா என்ற சர்ச்சையில் சாக்ரடீஸ் ஈடுபட்டார். அவர் அடிச்சுவட்டை இவர் பின் பற்றுகிறார்.

அறமும் இவர் கொண்ட தத்து வமும் காலங் கடந்து நிற்கின்றன. ஆதலால், "அதிக மாறுதல் இல்லாத ஓர் அரசியலைப் படைக்க வேண்டும். இந்த அரசியல் விண்ணிலுள்ள அசலின் நகலா யிருத்தல் வேண்டும். எத்தனைக்கு எத்தனை அசலும் நகலும் ஒன்று படுகின்றனவோ அத்தனைக்கு அத்தனை நல்ல அரசியலாய் அது அமையும். போதுமான அறிவும் அதற்கேற்ற அநுபவமும் இல்லாத வர்கள் அரசியலில் புகுந்தால் அரசியல் சீர் குலைந்துவிடும். அர சியலை நடத்துபவர்கள் ஞானிகளாக விளங்கவேண்டும். ஆள்பவன் ஒரு ஞான வேந்தனாய் இருக்கவேண் டும்" என்று பிளேட்டோ கூறுகிறார். நம் நாட்டில் ஜனகன் முதலியோர் இருக்கக் கண்டிருக்கிறோம்.

பிளேட்டோவின் குடியரசு ஒரு குடியரசன்று; சில அறிவாளிகள் நடத்தும் ஒரு பிரபுவர்க்க அரசிய லாய்த் திகழ்கிறது. அறிவு வளர்ச் சிக்கு ஓய்வு வேண்டும். வயிற்றுக்குப் பாடுபடுபவர்களிடையே அறிவு தோன்றாது. வயிற்றுப்பாட்டுக் கவலையை ஆள்பவர்களிடமிருந்து அகற்றிவிடவேண்டும். இவர்க ளுக்காக மற்றவர்கள் பாடுபடு கிறார்கள்.

பிளேட்டோ இந்த நோக்கங் கொண்டே நாட்டு மக்களை மூன்று வகுப்பினராகப் பிரித்திருக்கிறார்: (1) சாதாரண மக்கள்; (2) போர் வீரர்கள்; (3) நாட்டை நல்ல அறிவு வழியில் செலுத்தக் கூடிய சான்றோர்கள். சான்றோர்களைச் சட்டம் வகுப்போர் தேர்ந்தெடுப்பார் கள். பிறகு அவரவர் வம்சத் தொழில் பரம்பரையாகவே

தொடர்ந்து வரும். கீழ் இனத்தி லிருந்து சில பேர் தங்கள் அறிவின் ஆற்றல் மிகுதியால் மேல் இனத் துக்கும் வரலாம். மேல் இனத்தி லுள்ளோர் தீய நடத்தையால் மேற் பதவிகளிலிருந்து கீழே தள்ளப்பட லாம். நம் நாட்டு நான்கு வருணம் போல் பிளேட்டோ வகுத்த இனப் பிரிவினை காட்சி அளிக்கிறது. க்ஷத்திரியர் குலத்தில் தோன்றிய விசுவாமித்திரர் தம் தவவலியால் அந்தணர் குலத்தவர் ஆன செய்தி நாம் அறிந்ததே.

அரசியலில் அறிவு, வீரம், அடக் கம், நியாயம் இத்தகைய குணங் கள் ஓங்கி வளர வேண்டும். நியாயம் என்பது தம்தம் இனத்துக்கு ஏற்ற வற்றைச் செய்து முடிப்பதே. அடக் கம் என்பது தம் தம் இனத்தில் இன்புற்றிருப்பதே. தனித்த வாழ்க்கைக்கு அங்கே இடமில்லை. எல்லாம் பொதுவே; அதற்கேற்ற வாறு படிப்பும் அரசாங்கம் அமைத் ததுதான். மக்களைப் பெறுவது கூட அரசியல் நன்மையின் பொருட்டே. பிள்ளைகள் தம்தம் தகப்பன்மார்களை அறியார். ஆடவ ரும் பெண்டிரும் சரிசமமான நிலை யில் நிற்க வேண்டும். செல்வந்தான் தீமைக்கு மூலமாகும். ஆதலால், பொதவுடைமை வேண்டும்; அது மனிதனின் சுயநலத்தைத் துடைத்துவிடும். நல்ல குணங்களை மக்களிடையே பரப்புவதற்குத் தக்க கல்வி வேண்டாமா? முதல் முதலாக உண்மையைக் கற்பித்தல் வேண்டும். பொய் பொதிந்த புரா ணக் கதைகளை அகற்றல் வேண்டும்.

கவிகளுக்குப் பிளேட்டோவின் குடியரசில் இடமில்லை. இந்தப் பிரபஞ்சம் ஒரு நிழல். அந்த நிழ லைப்பற்றிய கருத்துக்குக் கவி உருக் கொடுக்கிறான். கவி சமைத்த காவியமோ நிழலுக்கு ஒரு நிழலாய் நிற்கிறது. உண்மையிலிருந்து மூன்றுபடி தள்ளிக் காட்சி அளிக்கி றது அவன் படைத்த காவியம்; ஆதலால் கவிகள் பொய்யர்கள். அவர்களை அடித்துத் துரத்திவிட வேண்டும்! கவியுள்ளம் படைத்த பிளேட்டோவே கவிகளை வெறுக்கி றார் என்றால் இது விந்தையிலும் விந்தைதானே! சங்கீதத்தைப் போற்றுகிறார். ஆனால் சங்கீதங்கூட வீர உணர்ச்சியைத் தூண்டக் கூடிய தாக இருக்க வேண்டும். கணிதத் துக்குத் தக்க இடமுண்டு. அவர் தாம் வகுத்த கற்பனை அரசியலில் தேகப்பயிற்சியை வற்புறுத்துகிறார். தேசப்பயிற்சி தேகப்பயிற்சிக் காகவே இல்லை; தம்தம் அலுவல்க ளைச் சரிவர நடத்துவதில் திடம் வேண்டாமா? அதன் பொருட்டே தேகப் பயிற்சி என்று மொழிகிறார். உண்டி சுற்று அருந்துவதும் ஞானத்தை வளர்க்கும் ஆற்றலின் பொருட்டே என்று வள்ளுவரும் கூறினாரன்றோ? ஆடவரும் பெண் டிரும் சேர்ந்து ஆடையின்றித் தேகப்பயிற்சி செய்து வந்தார்கள். பெண்டிருக்கு ஆடைகள் அவர்கள் குணமே என்று கூறுகிறார். தேகப் பயிற்சியின் நோக்கம் வைத்தியர் களுக்கு இடந் தராமல் இருப்பதே.

10-ஆம் பிராயத்திலிருந்து 13-ஆம் பிராயம் வரையில் படிப்பும் எழுத்தும் கற்க வேண்டும். 14-முதல் 16-ஆம் வயது வரையில் சங்கீதமும் கவிதையும் சொல்லித் தரலாம். கவிதைகூட இந்த இந்தக் கவிதையாகத்தான் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை உண்டு. அதன் இயல்பை வகுக்கத் தகுந்த அதிகாரிகள் உண்டு. இப் பொழுது சோவியத் ருஷியாவில் சோவியத் கொள்கையைப் பரப்பக்

கூடிய நாடகமோ சங்கீதமோ தானே பயில்கிறார்கள்! 16-முதல் 18-ஆண்டு வரையில் கணித சம்பந்தமான சாஸ்திரங்களைக் கற்றுக் கொள்ளுவார்கள். வானசாஸ்திரம், ரேகாகணிதம் (Geometry) இவை கல்வித்துறையில் உயர்ந்த இடம் பெறுகின்றன. ஒன்றும் புதிதாய்க் கற்க வேண்டியதில்லை. எல்லாம் பிறப்பதற்கு முன்பே ஆத்மா கற்ற வித்தைகள்தான். இப்பொழுது படிக்கிறதெல்லாம் முன்பு கற்றதை நினைவுக்குக் கொண்டு வருவதைத் தவிர வேறில்லை.

சில பிராயம்வரையில் மக்கள் விகாரமான பொருளையோ, தீய ஒழுக்கத்தையோ கண்ணால்கூடப் பார்க்கக் கூடாது. எங்கெங்கே அழகு தோன்றுகிறதோ, அங்கங்கே மூலதத்துவம் தோன்றுகிறது என்ற கொள்கையுடையவர் பிளேட்டோ. அழகைத் தியானித்தால், அந்த மூலதத்துவத்தை அடைய முடியும் என்கிறார். நம்மாழ்வாரும் இதே கருத்தை வெளியிட்டிருக்கிறார்:

'அடங்கெழில் சம்பத்து
அடங்கக் கண்டு ஈசன்
அடங்கெழி லஃதென்று
அடங்குக வுள்ளே.'

இந்த அடிகள் நோக்கத்தகுந்தவை. பிறகு அச்சத்தை விளைவிக்கக் கூடிய கோரமான காட்சிகளையும் சிந்தையைக் கவரக் கூடிய பொருள்களையும் காட்ட வேண்டும். இவை அளிக்கிற சோதனைகளிலிருந்து எவர்கள் வெற்றியோடு எழுகிறார்களோ, அவர்கள்தான் நாட்டை ஆளக் கூடியவர்கள்.

நாட்டைக் காக்கிறவர்களுக்குச் சிறிய இல்லங்களும் மிதமான ஆகாரமுமே அளிக்கப்படும். அவர்கள் சேர்ந்துதான் உண்ணவேண்டும். தங்கத்தையும் வெள்ளியையும் அவர்கள் தொடவும் கூடாது. எல்லோருடைய இன்பத்துக்குந்தான் அரசியலே தவிர ஒரு சாராருக்கு மட்டுமன்று. ஜனங்களை உண்டு பண்ணுவதிலும் சிரத்தை காட்டினார். சில திருவிழாக் காலங்களில் தேவையான மணமகனையும் மணமகளையும் சீட்டுக் குலுக்கி எடுப்பார்கள். ஒரு நாட்டுக்கு இத்தனை ஜனங்கள்தான் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை உண்டு. அதற்கேற்றவாறு மணச் சடங்குகளை நடத்துவார்கள். சீட்டுக் குலுக்கிப் போடுவது கூட வெளிக்கே தவிர வேறில்லை. உண்மையில் தேக ஆரோக்கியத்தை மனத்தில் வைத்துக்கொண்டு அதிலும் பொய் சொல்லுவார்கள்; அதையும் அரசியலுக்கேற்றவாறு திரித்துக்கொள்வார்கள். நன்மையைக் கருதி அரசாங்கம் மட்டும் பொய் சொல்லலாம். தங்க இனம், வெள்ளி இனம், பித்தளை இனம், இரும்பு இனம் என்ற பிரிவினைகளை ஜனங்களிடையே தோற்றுவித்தலே ஒரு பெரும் பொய்யாகும்; அதுவும் ஒரு கதைதானே? தங்க இனந்தான் அரசியலில் உயர்ந்த பதவியை அடைய வேண்டும்; வெள்ளி இனம் போர் வீரர்களைக் குறிக்கிறது; மற்ற இனங்கள் எல்லாருக்கும் பாடுபடவேண்டும். அடிமைகளைப்பற்றிப் பிளேட்டோவுக்குக் கவலையே இல்லை. அவர்களை மனித கோஷ்டியிலேயே சேர்க்கவில்லை!

அரசியலுக்காக மனிதனா, மனிதனுக்காக அரசியலா? அரசியலால் மனிதனின் ஆத்ம குணம் விரியுமானால், அந்த அரசியலோடு மனிதன் ஒன்றாய்ப் போய்விடலாம். ஆனால் மனிதன் ஒரு கருவியல்ல; அவன்

முன்னேற்றத்துக்காகவே அரசாங்கம் இருக்கிறது. அரசியல் பலி பீடத்தில் மக்களை மாய்ப்பது அழகல்லவே. பிற்காலத்து வந்த ஹெகல் (Hegel) கொள்கைக்கு ஆணி வேராய்ப் பிளேட்டோ கொண்ட கொள்கை திகழ்கிறது. நாசி, பாஸிஸ்ட் முதலிய கொள்கைகளுக்கு விதைகளாய்ப் பிளேட்டோவின் கருத்துக்கள் தோன்றுகின்றன. 'சூரியனின் சடங்குக்காக மனிதனா? மனிதனுக்காகச் சூரியனா?' என்ற கேள்வியை ஏசுநாதர் எழுப்பினார். அரசியல் மனிதனுக்கே தவிர மனிதன் அரசியலுக்காக நிற்கவில்லை. பிளேட்டோ நிறுவிய குடியரசு குடியரசே அல்ல. தனித்த மனிதனின் உரிமையை நிலைநாட்டின சாக்ரடீஸ் பாதையில் பிளேட்டோ செல்லவில்லை; குருவைச் சிஷ்யர் பின்பற்றவில்லை. அதனால் என்ன? தாம் கண்ட நல்லதைப் பிளேட்டோ உலகுக்கு அளித்தார். ஆனால் எத்தனை நூலோடு பழகினும், இனச் செருக்கு மறைந்து விடுமா? மறையாது என்பதற்குப் பிளேட்டோ தக்க சான்றாக நிற்கிறார். உலகம் பிளேட்டோவின் செஞ்சொற்களைப் பருகி அவைகளில் மயங்கி அவரை உண்மையாக அறிந்துகொள்ளாது போய்விட்டது போலும்! சொல்லின் மந்திர சக்தியை என்னென்று சொல்வது!

## இயற்கை விநோதம்

சாதாரணமாகச் சிறுவயதில்தானே எல்லா ஜீவன்களும் சிறுத்து இருக்கும்? ஆனால் தென் அமெரிக்காவிலுள்ள ஒரு விதத் தவளை சின்னதாக இருக்கும்போது 10 அங்குல நீளம் இருக்கிறது. பெரிது ஆக ஆகச் சுருங்கி $2\frac{1}{2}$ அங்குல நீளத்துக்கு வந்துவிடுகிறது.

—'ஸையின்ஸ் அண்டு அப்ளையன்ஸ்'

## சோல்ஜரும் கர்னலும்

சோல்ஜர் ஒருவன் 24 மணி நேர ரஜாவில் போய், நன்றாகக் குடித்துவிட்டுத் திரும்பிக் கூடாரத்துக்கு வந்து சேர்ந்தான். மேல் அதிகாரி, "ஏன், அப்பா, இப்படியா தலைகால் தெரியாமல் குடிப்பது? சற்று அடக்க ஒடுக்கமாக இருந்தால் காலாவட்டத்தில் நீ ஒரு கர்னல் ஆகலாமே; ஏனோ இந்தப் புத்தி?" என்று அவனுக்கு உபதேசம் செய்தார்.

அதற்கு அந்தச் சோல்ஜர் அளித்த பதில் இதுதான்: "ஸார்! இரண்டு சொட்டுச் சாராயம் வாய்க்குள் போனதுமே கர்னல் என்று எனக்கு நினைப்பு வந்துவிடுகிறதே! நான் என்ன செய்வது?"

—லியனார்டு லியான்ஸ்

# புராதனச் சவம்

அமெரிக்காவில் வெர்மாண்ட் பிரதேசத்திலுள்ள மிடில்பரி என்ற ஊரில் வெஸ்ட் சிமெட்ரி என்னும் பழைய மயானம் ஒன்று இருக்கிறது. அங்கே ஒரு கல்லில் சில வார்த்தைகள் செதுக்கியிருப்பதைக் கண்டால் திகைத்து நிற்போம். வாயில் நுழைய முடியாத பெயர் ஒன்றும், அதன்கீழ், 'எகிப்து மன்னனின் மகன் - வயது இரண்டு' என்றும் பொறித்திருக்கிறது. அந்தக் குழந்தை கி. மு. 1883-இல் இறந்ததாக அதிலிருந்து தெரிகிறது.

வெர்மாண்ட் சரித்திரக் கழகத் தலைவரும், மிடில்பரி ஷெல்டன் மியூசியம் நிர்வாகத் தலைவருமான ஜார்ஜ் வால்காட் மீடு என்பவர் இதன் வரலாற்றைத் தெரிவித்திருக்கிறார்.

எகிப்து மன்னனின் இரண்டு வயது இளவரசன் உண்மையில் இறந்தது கி. மு. 1883 - இல் தான். இந்தச் சவத்தைத் தைலமிட்டுப் பெட்டியில் வைத்திருந்தார்கள். எகிப்தில் உயர்ந்த வம்சத்தினரின் சவங்களை இம்முறையில் அடக்கம் செய்வது வழக்கம். இதைத்தான் 'மம்மி' என்பார்கள். 100 வருஷங்களுக்கு முன் சவப் பெட்டிகளைக் கொள்ளையடிக்கும் சில அராபியர்கள் இதைத் திருடிச் சென்றார்கள். இவர்கள் கெய்ரோவில் ஸ்பானிய வர்த்தகர்களுக்கு இதை விற்றுவிட்டார்கள். கி. பி. 1886-ஆம் ஆண்டு ஹென்ரி ஷெல்டன் என்பவர் இதை அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கினார். ஷெல்டன் தம் சொந்த ஊரில் மிகப் பெரிய மியூசியம் ஒன்றை வைத்திருந்தார்.

எகிப்திய சவத்துக்கு நியூ இங்கிலாந்தின் சீதோஷ்ண நிலை ஒத்து வரவில்லை. 1945-ஆம் ஆண்டு மியூசியத்தின் நிர்வாகியாக இருந்த மீடு இந்தச் சவம் சீர்கெட்டிருப்பதைக் கண்டார். மத விஷயத்தில் சிறிது தீவிரம் கொண்ட மீடு கிறிஸ்துவ சம்பிரதாயப்படி இதைப் புதைத்துவிடத் தீர்மானித்தார். 'வெஸ்ட் சிமெட்ரி' என்னும் மயானத்தில் இந்தச் சவத்துக்குக் கடைசிக் கிரியைகள் நடத்தினார். எந்த அதிகாரியும் ஒரு விதமான தடங்கலும் செய்யவில்லை. சவ அடக்கம் நடந்த இடத்தில் மீடு ஒரு ஞாபகார்த்தக் கல்லை நட்டு, அதில் சிலுவையும் நிறுவினார். வலப்புறம் ஒரு வட்டமும் T போன்ற உருவமும் பொறித்தார். எகிப்தில் உயிரைக் குறிக்கும் சின்னம் இது. ஆத்மாவைக் குறிக்கும் பறவையொன்றின் சின்னத்தை இடப்புறம் பொறித்தார். இந்த இரண்டு சின்னங்களும் இறந்த இளவரசனின் ஆத்மா அமர வாழ்வு அடைந்துவிட்டது என்பதைக் குறிக்கின்றன. அடக்கம் செய்திருந்த பழம் பெட்டியிலிருந்து இளவரசனின் பெயரையும் இறந்த தேதியையும் அறிந்து கடைசியாக ஆங்கிலத்தில் அதை மொழிபெயர்த்துக் கல்லில் பொறித்து வைத்தார் மீடு.

—வி. எச். அப்ஸன்

# க்விஸ் விடை

1. சம்வத் என்பது விக்கிரமாதித்தியன் என்ற மன்னன் சக வம்சத்து மன்னர்களை வென்றதற்கு அறிகுறியாக கி. மு. 57-இல் தொடங்கிய ஆண்டு. இதை விக்கிரம சகாப்தம் என்கிறோம். சகம் என்பது சாலிவாகனன் அதே மாதிரி சகர்களை வென்றதைக் குறிக்கத் தொடங்கிய ஆண்டாகும்; இதைச் சாலிவாகன சகாப்தம் என்கிறோம்.

2. தென் அமெரிக்காவில் பெரு ராஜ்யத்தில் உற்பத்தியாகிப் பிரேஜில் ராஜ்யத்தின் வழியே சென்று, வட அட்லாண்டிக் கடலில் கலக்கிறது. நினோகோசா என்ற ஏரிதான் இதன் உற்பத்தி ஸ்தானம் என்று சமீபத்தில் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதன் நீளம் 3,505 மைல்.

3. அமெரிக்காவும் பிலிப்பைன் தீவுகளும்; ஜூலை 4.

4. பாரசிகம் - மஜ்லிஸ்; அமெரிக்கா - காங்கிரஸ்; ஜப்பான் - டயட்; அயர் - டெய்ல்; இத்தாலி - செனேட்; ஜெர்மனி - ரீஷ்.

5. மா-த்ஸே-துங்.

6. வடக்கே ராஜபுதனத்தில் ஆபு மலையிலே உள்ள விமலா, தேஜ்பாலா கோயில்கள். தெற்கே மைசூரில் உள்ள சிரவணவெண்குளம்; இங்கே ஒரே கல்லில் செதுக்கி 57 அடி உயரங்கொண்ட கோமடேசுவரரின் உருவச் சிலை ஒன்று இருக்கிறது.

7. சிங்கிளேர் லூயிஸ் (அமெரிக்கா), ஆந்த்ரே கிடு (பிரான்ஸ்); முன்னவர் 1930-இலும் பின்னவர் 1947 - இலும் நோபெல் பரிசு பெற்றவர்கள்.

8. வட இந்தியாவிலுள்ள ரேவா சம்ஸ்தானத்தில், இந்த வகைப் புலியின் உடல் சுத்தப் பால் நிறமாக இராவிட்டாலும் நரைத்து, வரிகள் மங்கிக் கருமையற்று, வண்ணான் சலவையில் சாயம் இழந்ததுபோல் இருக்கும்.

9. பாரன்ஹீட், செண்டிக்ரேடு, ரூமர் என்பவை. பாரன்ஹீட் தெர்மாமீட்டரை அமெரிக்காவிலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் தொடர்புள்ள இடங்களிலும், செண்டிக்ரேடு தெர்மாமீட்டரைப் பிரான்ஸிலும், ரூமர் தெர்மாமீட்டரை ஜெர்மனியிலும் உபயோகப்படுத்துகிறார்கள். பா: 98·4 டிகிரி; செ: 37 டிகிரி; ரூ: 29·5 டிகிரி.

10. 'மாமவ பட்டாபிராம', 'அம்ப நீலாயதாட்சி' இவை முத்துசாமி தீட்சிதரும், 'ஒ ஜகதம்பா' சியாமா சாஸ்திரிகளும், 'கிரிராஜ சுத' தியாகராஜ ஸ்வாமிகளும் இயற்றியவை.

11. சிவபெருமான், விநாயகர், ஹநுமான்; பிரம்மாவுக்கும் ஐந்து தலை இருந்து பின்னால் நான்காகி விட்டது என்பது புராணம்.

12. சூரியன் - கெம்பு; புதன் - மரகதம்; குரு - புஷ்பராகம்.

13. பருந்து - 120 மைல்; ராஜாளி - 150 மைல்; புறா - 100 மைல்.

# பாபுராவ் பதில் சொல்லுகிறார்

**கேட்பவரின் கேள்விகளுக்கு, 'பிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். அவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும்.**

கேள்வி: விக்கிரகத்துக்கும் உருவச் சிலைக்கும் என்ன வித்தியாசம்?

பதில்: கூரைதான். கூரைக்குக் கீழ் அநேகமாக உருவச் சிலை விக்கிரகம் ஆகிவிடுகிறது. நடு வீதியில் கிடக்கும் அநாதை ஒரு கூரைக்கடியே வந்துவிட்டால் மதிப்புக்குரிய பிரஜை ஆவதில்லையா?

* * *

கே: நீங்கள் எப்போது மனிதருக்கு ஆசீர்வாதம் செய்தருள்கிறீர்கள்?

ப: அருள்வதே இல்லை. அது தெய்வத்துக்குரிய தனி உரிமை. அதற்காக மனிதன் பிரார்த்தனை செய்யலாம்.

* * *

கே: எப்பொழுது மௌனம் பேச்சுப்போல் ஆகிறது?

ப: ஸ்டாலின் வாயை மூடும்போது. பலவான்கள் கீச்சுக் கீச்சென்று கத்துவதில்லை.

* * *

கே: படிக்காத மனிதன் விருந்துபசாரத்தில் தாராளமாக இருக்கிறான்; தாங்கள் ஒப்புக்கொள்வீர்களா?

ப: விருந்தோம்புவதற்குப் படிப்பு வேண்டியதில்லை; இருதயந்தான் வேண்டும்.

* * *

கே: பொய் எப்படிப் பிறக்கிறது?

ப: சத்தியத்தின் மேலுள்ள வெறியினால் பிறக்கிறது. ஜனங்கள் சத்தியத்தைத் தண்டித்துக் குற்றவாளியாக்குகிறார்கள். அப்போது பொய்யின் விதை தோன்றுகிறது.

* *

கே: எல்லாத் துன்பங்களையும் இனிக்கச் செய்வது எது?

ப: கடமை உணர்ச்சியும் கடவுள் செய்யும் நியாயத்தில் நம்பிக்கையும்.




கே: பொது ஜன அபிப்பிராயம் என்பது என்ன?

ப: இந்தியாவில் காங்கிரஸ்காரர்கள் காலைத் தட்டும் புழுதி.

கே: ருஷியாவில் உள்ள கம்யூனிஸ்டுக்கும் இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்டுக்கும் வித்தியாசம் என்ன?

ப: இந்திய கம்யூனிஸ்ட் தகாத இடத்தில் இருக்கும் ஓநாய்.

* *

கே: ஸ்திரீதனம் அவசியம் என்று தோன்றினால் மாப்பிள்ளையின் ஊரில் ஒரு கிணறு வெட்டிக் கொடுக்க வேண்டும் என்று ஆசாரிய விநோபா பாவே சொல்கிறாரே; உங்கள் கருத்து என்ன?

ப: புருஷன் அடித்தால் மணமான பெண் அதில் போய் விழலாம் அல்லவா?

கே: பாகிஸ்தானில் உள்ள இந்துக்களின் எண்ணிக்கையைச் சரியாகச் சொல்லுங்கள்.

ப: எரிந்து கொண்டிருக்கிற மெழுகுவர்த்திக்கு அளவு சொல்வது எப்படி?

* * *

கே: உண்மையில் அதிகாரம் வேலை செய்கிறவர்களுக்குத்தான் உரியது; சோம்பேறிகள் சக்தியற்றவர்கள். சிரமப்பட்டு வேலை செய்கிறவர்களே ஆட்சிக்குரியவர்கள். இந்தியாவில் இவை எல்லாம் ஏன் தலைகீழாக இருக்கின்றன?

ப: ஏனென்றால், நம்முடைய முதல் மந்திரி ஒவ்வொரு நாளும் விடிந்தால் தலைகீழாக நிற்கிறார். அப்படி இருக்கையில் மற்றவையெல்லாம் எப்படி நேராக இருக்கும்?

* * *

கே: உலகிலேயே எல்லாரிலும் அழகாக ஆடையணியும் பெண் யார்?

ப: அழகான தோற்றம் உடைய பெண்மணி எதை உடுத்தாலும் அழகாகவே இருக்கும்.

* * *

கே: செத்துப்போனவர்கள்மேல் பூவையும் வாசனைத் திரவியங்களையும் போட ஏன் அத்தனை செலவழிக்கிறார்கள்?

ப: பிணம் நாறுகிறது; உயிரோடு இருப்பவர்களுக்கு மரணத்தின் வாசனை சகிக்க முடியவில்லை. அந்த வாசனை அவர்களுக்கு அவர்களுடைய இறுதியான முடிவை நினைவூட்டுகிறது.

* * *

கே: இரண்டு வருஷங்களுக்கு முன் பட்டினிக்கு வெகு சமீபத்தில் இருந்த சீனா இன்று இந்தியாவுக்குத் தானியங்களை அனுப்புகிறதே; எப்படி?

ப: அதுதான் கம்யூனிஸத்தின் மாயாஜாலம். கம்யூனிஸ்டுகள் கொள்ளை லாபமடிப்பவர்களைச் சுட்டுத் தூக்கிலிடுகிறார்கள்; சோம்பேறிகளை உழைக்கச் செய்கிறார்கள்.

# லஞ்ச ஊழல்

## ஜே. வில்லியம் புல்பிரைட்

***********************************************

**இது நம் நாட்டைப்பற்றியதல்ல; ஐக்கிய அமெரிக்காவைப் பற்றியது. செனேட் சபையில் இவர் பேசிய பேச்சு எந்த நாட்டுக்கும் எச்சரிக்கை போன்றது.**

***********************************************

ஏதாவது ஒழுக்கக் கேடுபற்றிக் கேள்விப்பட்டால், "இதைத் தடுக்கச் சட்டம் வேண்டும்: சட்டம் வேண்டும்" என்பது நம் வழக்கமாயிருக்கிறது. ஆனால், உலகத்தில் நடக்கும் பெரும்பாலான கேடுகளைச் சட்டம் ஒன்றும் செய்ய முடியாது. வீண் வதந்தியைத் தடுக்கச் சட்டத்தினால் ஆகுமா? பேராசை பிடித்தவனையும் பெருந்தீனி தின்பவனையும் சட்டம் தடுக்க முடியாது. நேசத்துரோகம் செய்பவனைச் சட்டம் தடுக்காது.

தங்கள் பதவியைக் கொண்டு, தங்களுக்கு வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டுகிறவர்களை என்ன செய்வது? பகிரங்கமாகப் பணம் லஞ்சம் வாங்காமல் இப்படிச் செய்கிறவர்களைச் சட்டத்தால் தண்டிக்க முடியாது. நட்பு என்ற வேஷத்தில் சட்டத்துக்கு ஊறு செய்யாமல் சலுகைகள் பெற்றுக்கொள்ளுகிறவர்களைத்தான் நாம் என்ன செய்ய முடியும்?

வெளியே இருப்பவர்கள், சர்க்காரில் உத்தியோகம் வகிப்பவர்களை லஞ்சம் முதலிய தூண்டுதல்களின் மூலம் ஒழுங்கு பிறழச் செய்யும் போது என்ன செய்வது? சட்ட விரோதமாக எதுவும் தோன்றாதபடி அவர்கள் வெகு ஜாக்கிரதையாக நடந்துகொள்ளுகிறார்கள். கெட்டிக்கார லாயர்களின் யோசனையைக் கேட்டு அதன்படி அவர்கள் நடந்துகொள்கிறார்கள். பொறியில் விழாமல் அதில் உள்ள தீனியைக் கௌவிக்கொண்டு போகும் எலியைப் போல் கெட்டிக்காரர்கள் அந்த லாயர்கள். வெளிக்கு வெகு கௌரவஸ்தர்களாகத் தோன்றும் பல வியாபாரிகள், இந்தத் துஷ்ட லாயர்களைப் பயன்படுத்திக்கொண்டு, சர்க்காரை வஞ்சித்துச் செல்வம் திரட்டிக்கொள்கிறார்கள்.

யார் அதிகக் குற்றவாளி? லஞ்சம் வாங்குகிறவரா? கொடுப்பவரா? லஞ்சம் வாங்குகிறவர்கள் சர்க்காருக்குத் துரோகிகள் தான். அவர்கள் பெரும்பாலும் அப்பாவிகள்; சொற்பப் பணம் உள்ளவர்கள்: அல்லது பணத்தையே கண்டிராதவர்கள். எதற்கும் துணிந்த அதமர்கள் காட்டும் சபலத்துக்கு அவர்கள் பலியாகிவிடுகிறார்கள்.

ஆனால், லஞ்சம் கொடுப்பவர்கள் யார் தெரியுமா? அவர்கள் பெரும் பிரபுக்கள்; வெகு பத்திரமாய் வாழ்பவர்கள். அவர்கள் ஏன் யோக்கியமாய் நடந்துகொள்ளக் கூடாது? சட்டத்தை அல்ல, ஒழுங்கை மீறாமல் அவர்கள் நடந்துகொள்ளக் கூடாதா?

நம் தேசீய வாழ்க்கையின் பல துறைகளிலும் இந்த ஒழுங்கீனத்தின் சாயை தென்படுகிறது. நம் காலேஜ்களில் இளம் பெண்கள், இளம் பிள்ளைகளின் குணுதிசயம் உருவாகிறது. அவர்கள் இப்போது 'புட்பால்' முதலிய விளையாட்டுகளில் வெற்றி பெற்ருக வேண்டும் என்று நிர்வாகிகள் வற்புறுத்துகிருர்கள். இதற்காக அவர்கள் கூலிக்கு மாணவர் பிடிக்கிருர்கள். இதனுல் விளையாட்டுக்கும் கேடு, சகல மாணவர்களின் ஒழுக்கத்துக்குமே கேடு விளைகிறது. எப்பாடு பட்டாவது வெற்றி பெறுவதுதான் முக்கியம் என்ற துர்க்குணத்தைப் பெரியவர்களிடமிருந்து மாணவர்கள் கற்றுவிடுகிருர்கள்.

நம் ஒழுக்க பலம் உள்நாட்டு வாழ்க்கைக்குமட்டும் அல்ல, வெளிநாட்டு உறவுக்கும் அவசியமாகும். நம் சர்க்காரிடம் ஜனங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டால், வெளிநாட்டுச் சத்துருவை எதிர்க்க அவசியமான தியாகங்களை அவர்கள் செய்யமாட்டார்கள். உலகத்தின் மகத்தான நாகரிக நாடுகள் அனைத்தும் வெளி நாட்டுச் சத்துரு வந்து படையெடுத்ததால் அழியவில்லை; உள்நாட்டு ஒழுக்கக் கேட்டால்தான் அழிந்தன. இதை டோயென்பீ என்பவர் தம் பிரபல சரித்திர ஆராய்ச்சியிலே விளக்கியிருக்கிருர். பூமியிலே ஏற்படும் சேதம், செல்வ நிலைச் சீரழிவு இவைகளிலிருந்து ஒரு ஜனநாயக நாடு வெகு சீக்கிரத்திலே சமாளித்து மீளமுடியும். அதன் ஒழுக்க பலம் குன்றுமானுல், போலி ஜனநாயகவாதிகளுக்கும் மோசக்காரர்களுக்கும் வெகு எளிதில் அது இரையாகி விடும்.

சர்க்காரில் ஊழல்கள் தோன்றுவது புதிதல்ல. ஆனுல், பொறுப்புள்ள அதிகாரத்தை வகிப்பவர்கள், அவைகளை அசட்டை செய்து கண்ணை மூடிக்கொள்வதுதான் மிக அபாயமாகும். நம்மிடம் லஞ்சம் வலுப்பது கேவலம்; அது சகஜந்தான் என்று நாம் செயலற்றிருப்பது அதைவிடக் கேவலம்.

இதற்கு நாம் ஏதாவது பரிகாரம் தேட முடியாதா? எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நாட்டின் பெரிய மனிதர்கள் சிலர் அடங்கிய ஒரு கமிஷனை நியமிக்கலாம். பொது ஜன ஊழியர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விதிகள் எவை என்பதை அந்தக் கமிஷன் அங்கத்தினர் ஆராய்ந்து வகுத்து வைக்கலாம். இந்த வேலையை அரசியல்வாதிகளிடம் விடக்கூடாது. பெருங் காரியங்களைச் சாதித்தவர்களும் ஒழுக்கத்தில் சிறந்தவர்களுமான பெரிய மனிதர்களையே அந்தக் கமிஷனில் நியமிக்க வேண்டும். ஜனநாயக முறையைப் பலப்படுத்தக் கூடிய ஒழுக்க விதிகளைப் புதிதாக அவர்கள் வகுக்க வேண்டும்.

நாம் ஒன்றுமே செய்வதற்கில்லை என்ற அபிப்பிராயத்தை நான் ஒப்புக்கொள்ள முடியாது. நம் ஒழுக்கம் இப்படியே மேலும் மேலும் குன்றிக்கொண்டே போகுமானுல், ஒரே ஒரு முடிவுதான் ஏற்படும்: நம் சுதந்தர ஜனநாயக சமூகம் அழிந்து போகும். நான் யோசனை சொல்லும் இந்த ஒழுக்க மதிப்புக் கமிட்டி ஒன்றுதான் பரிகாரம் என்று நான் கூறவில்லை. வேறு ஏதாவது யோசனை யாருக்காவது தோன்றினுல், அதை அவர் தாராளமாய் முன் வந்து சொல்லலாம்.

# குழந்தைகள் குறும்பு

இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்காதவற்றைத் திருப்பி அனுப்ப முடியாது. பதிலும் எழுத முடியாது. —ஆசிரியர்.

ஒரு நாள் எங்கள் வீட்டுக் கொல்லையில் 'தொபீர்' என்று ஏதோ சத்தம் கேட்டது. நானும் அம்மாவும் ஓடிப்போய்ப் பார்த்தோம். மரக்கிளை முறிந்து தம்பி விஜே கீழே விழுந்து கிடந்தான். அவனுடைய வலது கையில் ரத்தம் கசிந்துகொண்டிருந்தது. ஐந்து வயதுச் சிறுவன் விஜே இப்படிக் காயமடைந்தது கண்டு அம்மா பதறிப் போனாள். அவனைப் பத்திரமாகத் தூக்கிக் கட்டிலில் கிடத்தினாள். டாக்டர் வந்து அவன் கையில் பெரிய கட்டுக் கட்டி அவனை அசையாமல் படுத்திருக்கும்படி சொல்லி விட்டுப் போனார்.

சிறிது நேரம் கழித்துத் தன் கைக் கட்டைப் பார்த்துக்கொண்டே வேகமாக விஜே கொல்லைப் பக்கம் போனான்.

"என்னடா அது?" என்று கேட்டுக்கொண்டே அம்மா அவனை நிறுத்த ஓடினாள். மரத்தின் முன் சென்ற பிறகுதான் விஜே நின்றான்.

மர உச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த அவனிடம் அம்மா, "உன்னைக் கீழே தள்ளிய பொல்லாத மரமில்லையா இது? இதை நன்றாக அடிக்கணும்!" என்று செல்லமாகச் சொன்னாள்.

"இல்லேம்மா. என் கைக்கு டாக்டர் வந்து நன்றாகக் கட்டுப் போட்டிருக்கிறாரே. பாவம், முறிந்த இந்தக் கிளைக்கு வலிக்குமே; இதற்கும் ஏதாவது கட்டுப் போட வேண்டாமா?" என்றான் விஜே.

—எம். டி. ரவீந்திரதாஸ், C/o டெபுடி கலெக்டர், ஈரோடு.

* * *

நான் ஒரு நாள் என் எட்டு வயதுள்ள மைத்துனனைப் பார்த்து

அப்போது ரேடியோவில் நடைபெற்றுக்கொண்டிருந்த நிகழ்ச்சியை அப்படியே ஒன்று விடாமல் எழுதும்படி சொன்னேன். அவன், "சரி" என்று சொல்லிவிட்டு ரேடியோவின் அருகில் உட்கார்ந்துகொண்டு வேகமாக எழுத ஆரம்பித்தான். நிகழ்ச்சி முடிநதது. அவன் எழுதிக் காட்டியது இதுதான்:



"ஆரோக்கிய கர்புர் வாழ்விற்குச் சத்துள்ள கர் கர் புர்ர்புர்டுர் ஆகாரமும் டர்ர்ர்ர் நல்ல காற்றும் டர்கர்ர்ர் தேவை. மாலையில் திறந்த வெளியில் கர்ர் டுர்ர் உலாவி, கர்ர்ர் வரவேண்டும். கர்ர்டுர்."

"இது என்னடா கர்புர்?" என்று நான் கேட்டதற்கு, "ரேடியோவில் எனக்குக் கேட்டதை அப்படியே எழுதினேன்" என்றான்.

நான் என்ன பதில் சொல்வது?

—ஸி. ஆர். ராஜேந்திரன், 56 - ஏ, பாண்டவப் பெருமாள் கோயில் தெரு, பெரிய காஞ்சிபுரம்.

* * *

இரண்டு வருஷங்களுக்குமுன் என்னையும் சங்கரன் என்ற இன்னொரு பையனையும் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்கள். தலைமை ஆசிரியர் சங்கரனைப் பார்த்து, "நீ ஓர் ஆறு என்று எண்ணிக்கொண்டு உன் கதையைச் சொல், கேட்கலாம்" என்றார்.

சங்கரனும், "சரி" என்று சொல்ல ஆரம்பித்தான். "நான் பெரிய பெரிய ஏரிகளில் உற்பத்தியாகிப் பல இடங்களில் பாய்ந்து செல்வேன். நிலங்களைச் செழிப்பாக்குவேன். மேட்டிலிருந்து பள்ளத்துக்கு நீர்வீழ்ச்சி போல் விழுவேன். அப்போது என் மண்டை உடையும். உடனே என் அப்பா டாக்டரிடம் அழைத்துக்கொண்டு போய் மருந்து போட்டுத் தலைக்குக் கட்டுப் போடுவார். நான் ஒரு வாரம் பள்ளிக்கூடம் போகாமல் இருப்பேன்" என்று சொல்லிக்கொண்டே போனான்.

அதற்குள் அங்கிருந்த எல்லாரும் சிரித்துவிட்டோம். தலைமை ஆசிரியர், "சரியான பையன்தான்!" என்று சொல்லி அவனைத் தட்டிக்கொடுத்து உடனே பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொண்டுவிட்டார்.

—ஸி. எஸ். அனந்த பத்மநாபன், ஜி. எச். எம். எச். ஸ்கூல், சேலம்.



சிறு வயதில் தெனாலிராமன் கதை எத்தனையோ படித்திருப்போம். ஆனால் அசல் கதை இதோ:

# தெனாலி ராமகிருஷ்ண கவி

**எம். வேங்கடசுப்பிரமணிய சாஸ்திரி**

தெனாலி ராமகிருஷ்ண கவி ஏறக்குறைய முந்நூறு வருஷங்களுக்குமுன் வாழ்ந்தவர். தெலுங்கு நாட்டில் தெனாலி என்னும் அக்கிரகாரத்தில் பிறந்தவர். லட்சுமி, ராமன் என்னும் தம்பதிகளுக்குப் பிறந்தவர். தமிழ் நாட்டில் தெனாலி ராமன் கதைகள் என்று வழங்கும் கதைகளுக்குக் காரணமானவர். பட்டர் சிக்காச்சாரியருடைய சீடர். சமகாலக் கவிஞர்களுக்கு உற்ற நண்பர். வடமொழியைத் தெலுங்காகவும் தெலுங்கை வடமொழியாகவும் மாற்றும் ஆற்றல் பெற்றவர். நாலுவிதக் கவிகளையும் மேகம்போல் பொழியக்கூடிய அறிவும் அநுபவமும் இவருக்கு உண்டு. ஆசுகவி பாடுவதில் காளமேகம் போன்றவர். சைவ வைஷ்ணவ புராணங்களை ஆதியோடந்தமாகக் கற்று உள்ளங்கை நெல்விக்கனிபோல வசப்படுத்திக்கொண்டவர். 'ஸரஸ கவி' என்ற விருது பெற்றவர். பூதவுடல் நீத்த பின்னும் புகழுடம்பால் ஹாஸ்ய மேடையில் ஏறி நடிக்கும் ஹாஸ்ய கவி.

இவர் 'பாண்டுரங்க மாகாத்மியம்' என்னும் பிரபந்தத்தை இயற்றியிருக்கிறார். இந்த நூல் ஆண் பெண், இளைஞர், முதியோர் ஆகிய எல்லாருக்கும் நீதியைப் போதிக்கும் ரீதியில் அமைந்தது.

இவர் காலத்தில் சைவத்திலிருந்து வைஷ்ணவத்துக்குப் பல பிரமுகர்கள் மாறினார்கள். ஆனால் ஸ்மார்த்த மதத்தை விடவில்லை. இவர் கையாரச் சிவனை அர்ச்சித்து, வாயார விஷ்ணுவை வாழ்த்தியவர். தம் நூலில் இவர் பார்வதி பரமேசுவரர்களையும் லட்சுமி நாராயணர்களையும் சமமாகத் துதித்திருக்கிறார்.

இவருடைய சமத்காரப் பேச்சுக்களைப்பற்றிய கதைகளும் தனிப் பாடல்களும் இன்றும் வழக்கத்தில் இருக்கின்றன. எல்லாக் கதைகளும் இவரைப்பற்றியவை என்று நாம் ஆதாரத்துடன் சொல்ல முடியாவிட்டாலும் ஓரளவு உண்மை என்று சொல்லலாம். தெனாலி ராமன் குதிரை வளர்த்தது, கறுப்பு நாயை வெள்ளை நாயாக்க முயன்றது போன்ற கதைகள் உண்மைக் கதைகளே.

சங்கீதத்துக்கு அஸ்திவாரம் போன்ற பதங்கள் பாடியவர் தாள்ளபாக அன்னமையங்கார். அவருடைய பிள்ளைகளாகிய நரசிங்கன்னு, பெத திருமலையா இருவரும் இவர் காலத்தவர்களே. இவர்களில் ஒருவர் பெண்களின் அடக்கத்தைப் பற்றி ஓர் அத்தியாயம் எழுதி அதை ராயர் சபையில் படித்தாராம். அது அளவுக்கு மீறியதென்று ராம

காப்பிரைட்: பாரதி (தெலுங்கு), சென்னை.

கிருஷ்ண கவிக்குத் தோன்றியதால் அதற்கு விபரீதமாகப் பொருள் கொண்டு பரிகசித்துப் பாடி அடக்கி விட்டார்.

இவர் எழுதிய நூல்களில் இப்போது கிடைப்பவை 'பாண்டுரங்க மாகாத்மிய'மும் 'நிகமசர்ம உபாக்கியான'மும் சில 'தனிப் பாடல்'களுமே. 'பாண்டுரங்க மாகாத்மிய'த்தில் 'புண்டரீக சரித'மும் அடங்கியிருக்கிறது. பாஷையில் நன்றாகத் தேர்ச்சி பெற்றவர்களே இதைப் புரிந்துகொள்ள முடியும். பொதுவாகப் பண்டிதர் பாமரர் எல்லாரையும் வசியம் செய்யும் இனிமை இவர் வாக்கில் அமைந்திருக்கிறது. சந்தர்ப்பத்துக்குத் தகுந்த உபமான உபமேயங்கள், கற்பனை, நீதி, பழமொழிகள், எல்லாம் நூல் முழுவதும் விரவி வருகின்றன. நடை துள்ளி நெளிந்து ஓடுகிறது. ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் இவருடைய கவிதை குற்றமற்ற ரத்தினம்போல் அமைந்திருக்கிறது. படித்தவர்களுக்கே அதன் அருமை தெரியும்.

"ஏ துங்கபத்திரா நதியே! சமுத்திர ராஜன் எழும்பிக் குதிக்கும் தன் அலைகளாகிய கைகளால் உன்னைத் தீண்டியிருந்தால், கங்கையின் சேர்க்கையை விரும்புவானா? காவேரியைத் தேவியாக ஏற்றுக் கொள்வானா? யமுனையுடன் குலவுவானா?" என்று ஒரு கவிதையில் துங்கபத்திரையை வருணிக்கிறார்.

திருமலை ராயரை வருணிக்கச் சொன்னபோது இவர் பாடிய பாடலின் பொருளில் ஹாஸ்யம் இருப்பதைக் காணலாம். (திருமலை ராயருக்கு ஒற்றைக் கண் இல்லை.)

"இவர் அந்தப் பெண்ணுடன் சேர்ந்திருக்கும்போது முக்கண்ணனாகிறார். தனியாய் இருக்கும்போது அசுரகுரு (சுக்கிராச்சாரி) ஆகிவிடுகிறார். ஆகா! கண் ஒன்றுதான் குறையே தவிரத் திருமலை ராயர் மன்மதனே தான்."

ராயருடைய ஆஸ்தான கவிஞர்களுள் ஒருவரான பட்டு மூர்த்தி என்பவர் இவருக்கு, "யானைக் கூட்டம் கொசுவின் தொண்டைக்குள் புகுந்தது" என்ற சமஸ்யை கொடுத்து நிரப்பச் சொன்னார். அதற்கு இவர் இடக்காகப் பதில் சொன்னார். உடனே ராயர் கோபித்து, "இதே சமஸ்யையை நான் தருகிறேன்; பூர்த்தி செய்" என்று உத்தரவிட்டார். தயக்கமோ பயமோ அறியாத ராமகிருஷ்ண கவி, "சத்துருக்களை அடக்கிய பாண்டவர்கள் இன்பத்தை இழந்து விராடனைச் சேவிக்க நேர்ந்தது. விதியை என்னவென்று சொல்வேன்! யானைக்கூட்டம் கொசுவின் தொண்டைக்குள் புகுந்துவிட்டதே!" என்று ராயர் மெச்சும்படி பாடினார்.

தாம் பிறரைப் பரிகாசத்தால் துளைத்தாலும் இவர் தாமும் பிறர் செய்யும் பரிகாசத்தைச் சிரித்த முகத்துடன் ஏற்றுக்கொள்வார்.

இன்றைக்கும் தெலுங்கு தேசத்தில், "ரவி காணாவிட்டாலும் கவி காண்பான்" என்ற பழமொழி ஒன்று சர்வசாதாரணமாக வழங்குகிறது. அதற்குக் காரணம் இவர்தான்.

இவர் எப்போதும் குறும்புத்தனமாகப் பேசுவார்; நடந்துகொள்வார். முக்கு திம்மன்னா என்பவர் இவருடைய சமகாலத்தில் ராயருடைய ஆஸ்தான திக்கஜ கவிகளில் ஒருவர்; வயது முதிர்ந்தவர். அவர் ஒரு நாள் ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடிக்

கொண்டிருந்தாராம். ராமகிருஷ்ண கவி, "ஊதுனு தாதா!" என்று கேட்டாராம். இந்தக் கேள்வியில் சிலேடை அமைந்திருக்கிறது. "துப்பட்டுமா?" என்பது ஒரு பொருள். "ஆட்டட்டுமா?" என்பது மற்றொரு பொருள். திம்மன்னு ஆட்டட்டுமா என்று கேட்பதாக நினைத்து, "உம்" என்றாராம். ராமகிருஷ்ண கவி அதைத் துப்பட்டுமா என்ற கேள்விக்குப் பதிலாக எடுத்துக் கொண்டு திம்மன்னுவின் முகத்தில் 'தூ' என்று எச்சில் துப்பினாராம். உடனே வெகுண்ட திம்ம கவி இடக்காலால் ராமகிருஷ்ண கவியை உதைத்தாராம். அதனால் ஒரு பல்லை இழந்த ராமகிருஷ்ண கவி மான் கொம்பைப் பல்லாக அமைத்துக்கொண்டாராம். மறு நாள் ராயருடைய சபைக்குப் போனார். இந்த விஷயங்களை அறிந்த ராயர், "ரவி கண்டு பிடிக்காவிட்டாலும் கவி கண்டு பிடிப்பான் அன்றோ" என்ற சமஸ்யை கொடுத்து, "இதை யாராவது நிரப்புங்கள்" என்றாராம்.

அங்கிருந்த கவிகளில் ஒருவர் இந்தப் பல் ரகசியத்தை அறிந்தவர். "சூரியன் தக்க யாகத்தில் வீரபத்திரனுடைய காலால் உதைபட்டுப் பற்களை இழந்து பொக்கை வாயனாகிவிட்டான். பற்களைக் கட்டிக்கொள்ள வழி கண்டு பிடிக்கவில்லை. நம் திம்ம கவியின் பலமான உதையால் இழந்த பல்லை ராமகிருஷ்ண கவி மான் கொம்பால் சரிப்படுத்திக்கொண்டு விட்டார். ஆகா! ரவி கண்டு பிடிக்காவிட்டாலும் கவி கண்டு பிடிப்பான்!" என்று பூர்த்தி செய்தாராம். ராயருடைய வலது கை போன்ற பெத்தன்னு, திம்மன்னு, அப்பளாச்சாரி ஆகிய கவி நண்பர்கள் எல்லாரும் ராமகிருஷ்ண கவியின் வாய்க்குப் பயந்தவர்களே.

## சரியான மருந்து!

"காலையிலே சீக்கிரமாக வேலைக்குப் போக வேண்டியிருக்கிறது. ஆனால் என்னால் நேரத்திலேயே எழுந்திருக்க முடிவதில்லை. இதனால் வேலை தடைப்படுகிறது" என்று ஒரு தபால்காரன் டாக்டரிடம் முறையிட்டான்.

தபால்காரனை டாக்டர் நன்றாகப் பரிசோதித்தார். இரவில் நல்ல தூக்கமும் அதிகாலையில் விழிப்பும் ஏற்படும்படி ஒரு மருந்தை டாக்டர் அவனுக்குக் கொடுத்தார்.

மருந்தைச் சாப்பிட்டான் தபால்காரன். அதிகாலையில் எழுந்திருந்தான். நன்றாக உடை உடுத்துக்கொண்டு சந்தோஷமாகக் குறித்த நேரத்துக்கு முன்பே காரியாலயத்துக்குப் போய்ச் சேர்ந்தான். ஆபீஸ் ரிஜிஸ்தரில் கையெழுத்திடும் பொழுது தபால் மேலதிகாரி வந்து நின்றார்.

"இன்று நான் சீக்கிரமாகவே வேலைக்கு வந்து விட்டேன்" என்றான் தபால்காரன்.

"இன்றைக்குச் சரியாக வந்துவிட்டாய். ஆனால் நேற்று முழுவதும் நீ என் வேலைக்கு வரவில்லை?" என்று கேட்டார் மேலதிகாரி.

—'கேட்டால் விட்னஸ்'

வீட்டுக்கு வீடு தாம்பூலம் போடு கிறோம்; அதன் பலன் தெரியுமோ?

# தாம்பூல இன்பம்

## திருமூர்த்தி ஸாம்பசிவ ராவ்

சேது முதல் இமாலயம் வரையில் பரவியிருக்கும் இந்தக் கண்டத்தில் பாகிஸ்தான், பாரத நாடு என்ற பேதம் இல்லாமல் எங்கும், எல்லா ஜாதியாரிடமும் வியாபித்திருப்பது வெற்றிலை போடும் பழக்கம். நாம் காலணாச் செலவு என்று நினைக்கும் இந்தத் தாம்பூலம் நம் நாட்டில் சுதேச மன்னர்கள் ஆளுங் காலத்தில் லட்ச ரூபாய் பெறுமானமுள்ளதாகக்கூட இருந்தது. இதில் சேர்க்கும் சுண்ணும்பே நல்முத்தாக இருந்தது. தாம்பூலத்தோடு உபயோகிக்கும் கொப்பரைத் தேங்காய், புகையிலை, கொக்கெயின் என்னும் பொருள்களுக்கு எவ்வளவு செலவாகிறது என்று இன்னுங்கூட அநேகம் பேருக்குத் தெரியாது. வடக்கே காசி போன்ற நகரங்களில் கள்ள மார்க்கெட்டில் கொக்கெயின் 'பீடா' ஒன்று பத்திலிருந்து இருபத்தைந்து ரூபாய் வரை விலை பெறும் என்பதைக் கேட்க ஆச்சரியமாக இல்லையா?

தெற்கே கன்னியாகுமரியிலும் அதை அடுத்த மலையாள தேசத்திலும் கல்யாணங்களில் தாம்பூலத்தோடு தரும் புகையிலையின் தரத்தைப்பற்றியே சண்டை வந்து விடுமாம்.

தெலுங்கு நாட்டில் கஞ்சம் ஜில்லா நீங்கலாக மற்ற ஜில்லாக்களில் கலப்படம் இல்லாத தாம்பூலமே உபயோகிக்கிறார்கள். ஆனால் 'பீடா' போட ஆரம்பித்த பின் கலப்படங்கள் சேர்ந்து விடுகின்றன. தேங்காய்த் துருவலும் வாசனைச் சரக்குகளுந்தான் அவை. ஒரு கவியின் விடுகதை உருவில் அமைந்த கேள்வியும் பதிலுமே, தாம்பூலத்துக்கு அவசியமான பொருள்கள் இன்னவை என்பதைத் தெரிவிக்கும்.

கேள்வி: மரத்தில் பிறந்தாள் ஒரு மங்கை; கொடியில் பிறந்தாள் ஒரு நங்கை; கல்லில் வந்தாள் ஒரு பாவை. இந்த மூன்று பேரும் கூடித் தலைவாசலில் விளையாடுவார்கள். அவர்கள் யாரென்று சொல்.

ப: வானத்துக்குப் போனேன். மங்கம்மாளைக் கண்டேன். அவள் மூன்று வஸ்துக்கள் கொடுத்தாள். ஒன்று கரைந்தது; ஒன்று அமிழ்ந்தது; ஒன்று மிதந்தது.

"தாம்பூலம் போடாத வாயும் அம்மா என்று அழைக்காத வாயும் பயனற்றவை" என்று பிரசித்தி பெற்ற சுமதி சதக ஆசிரியர் பாடியிருக்கிறார்.

ராஜ சபைகளில் மாலை, வாசனைப் பொருள் இவற்றை ஆக்கத் தனி ஆட்கள் இருந்தது போல் வெற்றிலை மடித்துக் கொடுக்கத் தனித் தாதி ஒருத்தி உண்டு. "உன்னால் இந்தக் காரியம் முடியவேண்டும்"

காப்பிரைட்; சௌபாக்ய (தெலுங்கு: மார்ச் '51). சென்னை.

என்று ஒருவரிடம் ஒரு பொறுப்பை ஒப்படைக்கும்போது தாம்பூலந் தான் முன்நிற்கும். இன்று சமஸ்தானங்கள் மறைந்துவிட்டன; ஆனால் தாம்பூலம் பெருகிவிட்டது.

ஆந்திர நாட்டில் இன்றைக்கும் சரியான பழுத்த வெற்றிலை வேண்டுமென்றால் விஜய நகரமே சிறந்தது. நெல்லூர், தூணி, பர்ஹாம்பூர் இந்த இடங்களில் நல்ல வெற்றிலை கிடைக்குமென்றாலும் பழுத்த வெற்றிலைக்குப் பேர் போனது விஜயநகரமே. எந்த ஊர் வெற்றிலையானாலும் அதைப்பதத்தில்பறித்துத் தயாரிப்பதில் அந்த ஊரார் கை தேர்ந்தவர்கள். பாக்கைப் பதப்படுத்தித் தயாரிப்பதில் சவரர்களுக்கும் வெற்றிலையைத் தயாரிப்பதில் விஜயநகரத்தாருக்கும் முதல் தாம்பூலம் தரவேண்டும்.

பூஜைகளில் 'நாகவல்லீ தளம்' என்று வெற்றிலையைக் குறிப்பிட்டுச் சொல்வதால் வெற்றிலைதான் தாம்பூலத்துக்கு உதவும் இலை என்று பழக்கத்தில் வந்துவிட்டது. உண்மையில் வெற்றிலையைத் தவிர வேறு இலைகளும் தாம்பூலத்தில் வழங்கி வந்தன. அவை வாய்க்கும் இதமாக இருக்கும்; உடம்புக்கும் புஷ்டி தந்து பல நோய்களைப் போக்கும். துளசியையும், மாவிலையையுங்கூட வெற்றிலைக்குப் பதிலாக உபயோகித்து வந்தார்கள். துளசி பசியை உண்டாக்கும். மாவிலை கபத்தைப் போக்கும்.

இப்பொழுது வெற்றிலை போடுவதையே அநாகரிகமாகக் கருதுபவர்கள் இருக்கிறார்கள். உடலுக்கு நன்மையும் வாய்க்கு இன்பமும் உதடுகளுக்குச் சோபையும் கொடுப்பது தாம்பூலம். தற்கால முறைப்படி உதடுகளுக்கு 'லிப்-ஸ்டிக்' என்ற சாயம் பூசுவதில் தாம்பூலம் போட்டது போன்ற அழகும் வராது; அதனால் உடலுக்கு நன்மையும் இல்லை. உதட்டுச் சாயத்துக்குப் பதிலாகத் தாம்பூலத்தையும் நகச் சாயத்துக்குப் பதிலாக மருதோன்றியையும் உபயோகியுங்கள் என்று பெரிய பெரிய மந்திரிகளே பிரசாரம் செய்யத் தொடங்கிவிட்டார்களென்றால் பாருங்கள்!

தாம்பூலத்துக்கு ஒரு பாக்கு, ஐந்து வெற்றிலை, அரை வராகனிடை கஸ்தூரி, பச்சைக் கர்ப்பூரம், சங்குச் சூர்ணம், மூன்று தக்கோலம், நாலு கிராம்பு, சிறிது ஜாதிக்காய் இவற்றைச் சேர்ப்பது பொருத்தம். தாம்பூலம் வாய்க்குச் சுத்தம்; கிருமிகளை அழிப்பது; பசியை உண்டாக்கும்; தொண்டை நோயைப் போக்கும்; பற்களுக்கு உறுதியையும் நல்ல வாசனையையும் கொடுக்கும். 'போஜன குதூகலம்' என்னும் நூலில், "தாம்பூலம் கசப்பு, உப்பு, துவர்ப்பு முதலியவைகளைக் கொண்டதாய் வாதத்தைக் கண்டித்துக் கிருமிகளையும் கபத்தையும் போக்கும்" என்ற விவரத்தைக் காணலாம்.

இலைக்கு வெற்றிலை வழக்கமாக இருந்தாலும் மாவிலை, முந்திரிக் கொழுந்து, குவளைப் பூ இதழ்கள் இவற்றையும் உபயோகிப்பது உண்டு. இவை நாக்கைச் சுத்தம் செய்து முகத்தில் சேரும் கிருமிகளை ஒழித்து, பற்களைக் கெட்டிப்படுத்திச் சிலேஷ்மத்தை நீக்கும். சங்கு சுட்ட சுண்ணாம்பு உபயோகிப்பதால், வயிற்றுச் சூலை, குன்மம் இவை நீங்கும். பவளபஸ்மம் சேர்த்தால் காசம் அகலும். பச்சைக் கர்ப்பூரம், கஸ்தூரி, காசுக்கட்டி இவை சேர்ந்தால் இனிய குரல், வாசனை, உல்லாசம், வீரியம்

இவற்றை உண்டாக்கி நரம்பு, மூளை, புத்தி இவைகளுக்குச் சக்தியை விருத்தி செய்யும். முகம் சம்பந்தமான நோய் அணுகாதபடி தடுக்கும்.

காலையில் தாம்பூலம் போடுவது நல்லதென்று சிலரும், உணவுக்குப் பின் போடுவது நல்லதென்று சிலரும், மூன்று வேளைகளிலும் போடவேண்டுமென்று சிலரும் சொல்லுவார்கள். காலை, பகல், இரவு மூன்று வேளைகளிலும் போடுபவர்கள் காலையில் பாக்கு அதிகமாகவும், பகலில் சுண்ணும்பு அதிகமாகவும், இரவில் வெற்றிலை அதிகமாகவும் உபயோகிக்க வேண்டும். "தாம்பூலத்தை மென்று முதலில் வரும் உமிழ்நீர் விஷத்துக்குச் சமானம். இரண்டாம் முறை ஊறும் நீர் அஜீர்ணத்தை உண்டாக்கும். இவற்றை உமிழ்ந்து மூன்றும் முறை ஊறும் அமிர்தம் போன்ற உமிழ்நீரை விழுங்க வேண்டும்" என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'பீடா' போடுபவர்களுக்கும் புகையிலை குதப்புபவர்களுக்கும் இது ஓர் எச்சரிக்கை ஆகும். மாணவர்கள் இரவு வேளையில் வெற்றிலை போடக் கூடாதென்றும் தடுத்திருக்கிறார்கள்.

சுண்ணும்பில் கல் இல்லாமல் வடிகட்டித் தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். பாக்கில் பூச்சி இல்லாதவற்றைப் பொறுக்கி வைத்துக்கொள்ள வேண்டும். வெற்றிலையில் பல வகைப் பூச்சிக் கூடுகள் இருக்கும்; பார்த்து அவற்றை ஒதுக்கிவிடவேண்டும். வெற்றிலையின் காம்பு, நரம்பு, நுனி இவற்றை நீக்கிவிடவேண்டும். சுண்ணும்பு வைத்திருந்த வெற்றிலையைப் போட்டுக்கொள்ளக்கூடாது. பீடா விற்பவர்கள் இப்படியெல்லாம் செய்ய முடியுமா? "காம்பு நோயை உண்டாக்கும். சுண்ணும்பு வைத்திருந்த வெற்றிலை ஆயுளைக் குறைக்கும். நரம்பினால் புத்தி நாசம்" என்று சொல்லியிருக்கிறார்கள். தாம்பூலம் மலசுத்தி செய்யும்; கண் நோய் வராது தடுக்கும்; வெறும் பாக்கைத் தின்றால் சோகை உண்டாகும்.

வெற்றிலையில் கொழுந்தாயிருப்பதைவிட முற்றினதே சிறந்தது. பாக்குத் துவர் பித்தத்தையும், சுண்ணும்பின் உஷ்ண வீரியம் வாதத்தையும், வெற்றிலை கபத்தையும் கண்டிக்கும். ஆனால் தாம்பூலத்தை அதிகமாக உபயோகித்தால் உடம்பில் அளவுக்கு மீறிய சூடேறிப் பலம் குறைந்துவிடும். அதனால் உஷ்ணம் அதிகமானவர்கள், மெலிந்தவர்கள், ஜுரம் வந்தவர்கள், கண்ணோய் உள்ளவர்கள், உணர்ச்சி மிக்கவர்கள், க்ஷய ரோகிகள் இவர்கள் எல்லாம் வெற்றிலை போடக்கூடாது.

தாம்பூலத்தோடு சேர்த்து உண்ணக்கூடாத பொருள்கள்: பால், விளங்காய், பலாப் பழம், புளிப்பு ரசம் உள்ள பழங்கள், வாழைப் பழம், கரும்பு, தேன், நெய், தேங்காய். ஆகவே, பாக்கில் தேங்காய்த் துருவல் சேர்க்கக்கூடாது. சாப்பிட்டோ, தூங்கியோ, குளித்தோ, வாந்தி செய்தோ அரை மணி நேரத்துக்குப் பின்பே வெற்றிலை போடவேண்டும். வெற்றிலையால் வரும் மயக்கத்துக்குப் புளி, குளிர்ந்த ஜலம், காய்ச்சிச் சூடான நெய் இவை மாற்று.

சுண்ணும்புச் சத்து உடம்பில் குறைந்த நோயாளிகளுக்கு வெற்றிலை போட்டால் உடல் நிலைமை சரியாகிவிடும். தாம்பூலம் தரிப்பதால் முகத்துக்குக் கவர்ச்சி ஏற்படும்.

# கார்ட்டூன் கதம்பம்

'ஐயோ! 6 அவுன்ஸா!'

—'ப்ரீ இந்தியா'



கிருபலானி போருக்குக் கிளம்புகிறார்.

—'போரம்'



இந்தியக் கலை ரீதியில் ஒரு வழிகாட்டி.

—'டிட்-பிட்ஸ்'

பாகிஸ்தானிலே நடந்த இருட்டடிப்பில் லியாகத் துழாவுகிறார்.

—'சங்கர்ஸ் வீக்லி'

# குரைக்காத நாய்

குளிர் நடுக்கி எடுக்கும் இரவு. கானடா தேசத்தில் பேர் ஹேவன் என்ற ஊருக்குப் பக்கத்தில் மைல் கணக்கில் பரந்த சதுப்பு நிலப் பிரதேசம். ஸண்ட்ரா என்ற மூன்று வயதுப் பெண் ரஸ்டி என்ற தன் நாயோடு அதற்கு முந்திய நாள் சாயங்காலம் அந்தப் பக்கமாக உலாவப் போனாள். போனவள் திரும்பி வரவில்லை. வழி முழுதும் உளையும் புதருமாக இருந்தன. ஆயிரம் பேருக்குமேல் வாரக்கணக்கில் தேடினாலும் கண்டுபிடிக்கவே முடியாது. மூன்று நாளுக்கு மேல் மூன்று வயதுக் குழந்தை பட்டப் பட்டினியாக இருந்துகொண்டு இந்த மாதிரி குளிரையும் தாங்குமா?

ரஸ்டி மட்டும் குரைத்தால்—? இரண்டு வாரத்துக்கு முன்னால்தான் மோட்டார் வண்டி மோதி அதன் வாயில் பலமான அடி. தாடை எலும்பு உடைந்துவிட்டது; ஒரு காலும் முறிந்துவிட்டது. தாடையில் கட்டுக் கட்டியிருந்தது; அதனால் குரைக்க முடிந்தால்தானே?

முந்திய நாள் நாலு மணிக்குத் தேட ஆரம்பித்தார்கள். இரா முழுதும் 'பிளாஷ் லைட்', லாந்தர் எல்லாம் வைத்துக்கொண்டு எவ்வளவு தூரம் தேடியும் அந்தக் குழந்தையும் நாயும் போன சுவடே தெரியவில்லை. மறு நாளும் முடிந்தவரை தேடிப் பார்த்தார்கள்; பலன் இல்லை. ஆனாலும், 'சரி; போகட்டும்' என்று விட்டுவிட முடிகிறதா?

அப்போது என்ன ஆச்சரியம்! அந்த நாய் குரைக்கும் ஓசை கேட்டது; அவர்கள் சமீபத்தில் வருகிறார்கள் என்று கண்டதும் வெகு சிரமப்பட்டுத் தன்னால் முடிந்த அளவு உரக்கக் குரைத்தது ரஸ்டி. அவர்கள் உடனே அருகில் இருந்த புதர்ப் பக்கம் கவனித்தார்கள்.

அங்கே ஸண்ட்ரா நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். ரஸ்டி அவளுக்குக் குளிர் உறைக்காதபடி அவள்மேல் கவிந்துகொண்டிருந்தது. முதலில் அவள் தலைமயிர் மட்டுந்தான் அவர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் நெருங்கி வரும்போது அவள் விழித்துக்கொண்டாள். அவள் உடலில் போட்டிருந்த சொக்காய் அந்தக் குளிருக்கு எந்த மூலை? ரஸ்டிமட்டும் அவளைக் கட்டிக் கவிந்து காத்திராவிட்டால் அவள் பிழைத்திருக்கவே முடியாது. பலவீனமான நிலையிலும் அது எப்படியோ குரைத்ததே; அதுவும் பெரிய ஆச்சரியந்தான். இல்லாவிட்டால் குழந்தையைக் கண்டுபிடித்திருக்கவே முடிந்திராது; பட்டினியால் அவள் மடிந்திருப்பாள்!

இதைப்பற்றி அவர்களில் ஒருவர், பின்னால் விவரமாகச் சொல்லும்போது அவர் கண்ணில் நீர் வந்துவிட்டது; "பாவம், ரஸ்டி எவ்வளவு சிரமப்பட்டுக் குரைத்ததோ? அதன் வேதனை அதற்குத்தானே தெரியும்? நாங்கள் வருகிற வரைக்கும் அது பொறுத்திருந்தது. இத்தனைக்கும் அது பிரமாத ஜாதி நாய்கூட இல்லை! சாதாரண நாய்தான்" என்றார்.

—ஜான் மாக்ளியோடு

# டான்ஸில் பயம்

★

***************************************

'உள் நாக்குச் சதை வளர்ந்துவிட்டது. ஆபரேஷன் செய்துகொள்ள வேண்டும்' என்று சர்வ சாதாரணமாகப் பலர் பேசிக்கொள்கிறுர்கள். இது சரியா? தவரு? அதை விளக்கும் இந்தக் கட்டுரை 'டுடேஸ் ஹெல்த்' என் பதில் உள்ள விவரங்களே ஆதாரமாகக் கொண்டது.

***************************************

சில வருஷங்களாக அநேகம் பேர், "டான்ஸில் ஆபரேஷன் செய்துகொள்ள வேண்டும்" என்று அடிக்கடி சொல்லுவதை நாம் கவனித்திருக்கலாம். டான்ஸில் என்பது அடி நாவுக்குக் கீழ் வாய்ப் பாகத்தில் இரு பக்சமும் உள்ள சுரப்பி. இது உபயோக மற்றது, இதனுல் நோய் தான் பரவும் என்று பொதுவாக ஓர் அபிப்பிராயம் உண்டு. பெரும்பாலும் குழந்தைகளுக்குத்தான் இந்த மாதிரி ஆபரேஷன் செய்கிறுர்கள். டான்ஸிலில் நோய் கண்டிருந்தாலும் சரி, இராவிட்டாலும் சரி ஒவ்வொரு வருஷமும் சுமார் 20 லட்சம் பேர் அமெரிக்காவில் இப்படி ஆபரேஷன் செய்துகொள்கிறுர்கள்.

ஆனுல் இப்போது பிரபல டாக்டர்கள் அநேகம் பேர் டான்ஸில் ஆபரேஷனே கூடாது என்று வலியுறுத்தி வருகிறுர்கள். "சாதாரணமாக டான்ஸில், பல நோய்கள் ஏற்படாதபடி நம்மைப் பாதுகாக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்; ஆனுல் தொத்து நோய் கண்டு முண்டும் முடிச்சும் கட்டியிருந்தால் மயக்கம் கொடுத்து வெகு ஜாக்கிரதையாகவும் திறமையோடும் அதை ஆபரேஷன் செய்யவேண்டும்" என்று அமெரிக்க வைத்திய சங்கப் பத்திரிகையில் இதைப் பற்றிச் சில விவரங்கள் வெளியாகியிருக்கின்றன.

டான்ஸில் வீங்கி ரணம் இருந்தாலும் தொத்து நோய் கண்டிருப்பதாகச் சொல்வதற்கில்லை. பின்னுல் நோய் வராதபடி பாதுகாப்பாகச் சில சமயம் இந்தமாதிரி நேருவதுண்டு. சமீபத்தில்தான் இது தெரிந்தது. எந்தத் தொத்து நோய்க் கிருமிகளும் பெரும்பாலும் முதல் முதல் தாக்கும் இடம் இது தான். சுவாச உறுப்புக்களுக்குள் கிருமிகள் நுழைய முடியாதபடி இந்த டான்ஸில் தடுத்து அவற்ருேடு போராடுகிறது. டான்ஸில் ஆபரேஷனுக்கு முன்னுல் மூக்கின் மெல்லிய தசைப் பாகத்துக்குள் ஊசி மூலம் இந்தியன் இங்கியை ஏற்றிப் பார்த்தார் ஒரு டாக்டர். ஆபரேஷன் ஆகி டான்ஸிலே எடுத்துப் பார்த்தபோது அதில் பஞ்சு போன்ற பாகத்தில் இங்கி அப்படியே ஒட்டிக்கொண்டிருந்தது. குழந்தைகளின் கையில்

மூன்று நாளுக்கு முன் குத்தின அம்மைப் பாலும் இப்படியே டான்ஸிலில் படிந்திருந்தது.

பத்து வயதுக்குக் கீழ் அநேகம் குழந்தைகளுக்கு இப்படி அடிக்கடி டான்ஸில் வீங்கி அதில் ரணம் ஏற்படுவது சகஜம். இந்த வயதில் தான் நம் உடல் பலவிதமான தொத்து நோய்களோடு போராடிச சமாளிக்கப் பார்க்கிறது. பிரபல அமெரிக்க டாக்டர்களான கிராஸ்மன், லெடரர் என்ற இருவரும், "ஐந்தாறு வயதிலேயே உடலில் நோயைச் சமாளிக்கும் திடம் ஏற்பட்டு விடாது. பல நோய்கள் ஏற்பட்டால்தான் அவற்றோடு போராடி உடல் திடம் பெறும். வீங்கி ரணம் கண்டாலும் டான்ஸிலை அப்படியே விட்டு வைத்தால் நாளடைவில் தானாகவே உடல் நிலை சீர்படும். அதற்குள்ளேயே ஆபரேஷன் செய்துவிட்டால் பிற்காலத்தில் குழந்தைக்கு அதனால் பாதகம் நேரலாம்" என்கிறார்கள்.

முன்னெல்லாம் அப்படியில்லை. "சரி; மழை நாள் போகட்டும். டான்ஸிலை எடுத்து விடலாம்" என்று பொதுவாக எல்லா டாக்டர்களுமே சொல்லி வந்தார்கள். பள்ளிக்கூடங்களிலோ கேட்க வேண்டியதில்லை; உடனே ஆபரேஷன் செய்தாக வேண்டுமென்று கெடுபிடி செய்து வந்தார்கள்.

டான்ஸிலில் ரணம் காணுவது வேறு ஏதோ நோய் வரும் என்பதற்கு அறிகுறி. பல் கெட்டுப் போனாலும் இப்படி நேரலாம். அந்தப் பல்லை எடுத்துவிட்டால் தானாகவே டான்ஸில் சரியாகி விடும். சில சமயம் ரணத்தை மருந்து போட்டும் ஆற்றிவிடலாம். நோயின் காரணத்தை அறிந்து அதைப் போக்க வழி தேடவேண்டுமே யொழிய அதற்காக டான்ஸிலையே எடுத்து விடக்கூடாது.

டான்ஸிலை எடுத்தவிட்டால் ஜல தோஷமோ சுவாசக் கோளாறோ ஏற்படாது என்று பொதுவாக ஓர் அபிப்பிராயம் இருந்து வந்தது. டாக்டர் கெய்ஸர் என்ற மற்றொரு பிரபல அமெரிக்க டாக்டர் 4,400 குழந்தைகளைப் பத்து வருஷ காலம் இப்படி ஆராய்ந்தார். அவர்களில் பாதிப்பேருக்கு மட்டுந்தான் ஆபரேஷன் செய்தாராம். டான்ஸிலை எடுத்தும் ஏற்கனவே இருந்த ஜல தோஷம், காது வலி, க்ஷயம் இந்த மாதிரி நோய்கள் நீங்குவதற்குப் பதில் விருத்தியாகிவிட்டன.

குழந்தைகளுக்கு வரும் நோய்களைப் பெனிஸிலின், ஆரியோமைஸின், குளோரோமைஸடின் முதலிய புதிய மருந்துகளில் குணப்படுத்தி விடமுடியும். ஆகவே, டான்ஸில் ஆபரேஷனே அவசியமில்லை. டான்ஸில் உள்ள பாகத்தில் அதிகமாகச் சதை வளர்ந்து மூச்சு விடவே முடியாமல் இருந்தால் அதை ஆபரேஷன் செய்ய வேண்டியதுதான்; ஆனால் ஒன்று: சிறந்த அநுபவமுள்ள வைத்தியரிடமே செய்துகொள்ள வேண்டும். கண்டவர்களிடமும் செய்துகொண்டால் சில சமயம் அவர்களுடைய அஜாக்கிரதையால் ஆபரேஷனே புதுப் புது நோய்களுக்குக் காரணமாகிவிடலாம். இதனால் சோர்வு, இருதயம் அதிகமாக அடித்துக் கொள்வது, தசையில் ஒருவித வலி இப்படிப் பல சங்கடங்கள் நேரும்.

'டான்ஸில் ஆபரேஷன் ஆகாத குழந்தைகளை விட ஆனவர்களுக்குத்தான் இளம்பிள்ளை வாதம் அதிகமாக இருக்கிறது' என்று சமீபத்தில் நடந்த பல ஆராய்ச்சிகளி

விருந்து தெரிந்தது. டாக்டர்களுக்குள்ளே இதைப்பற்றிக் கருத்து வேற்றுமை இருந்தாலும் ஒரு விஷயத்தில் அவர்கள் அபிப்பிராயம் ஒத்திருக்கிறது: "ஜலதோஷம் முதலிய சுவாச சம்பந்தமான நோய்கள் மழை நாளில்தான் அதிகமாக வரும். அப்போதும் சரி, அக்கம் பக்கத்தில் எந்தக் குழந்தைக்காவது இளம் பிள்ளை வாதம் ஏற்பட்டிருந்தாலும் சரி, டான்ஸில் ஆபரேஷன் செய்யவே கூடாது" என்கிறார்கள்.

ஆகவே, நிச்சயமாக அதனால் மூச்சுவிடத் தடையாக இருக்கிறது, கெடுதல் என்று தெரிந்தாலொழிய டான்ஸில் ஆபரேஷன் செய்து கொள்ளவே கூடாது. அநுபவமுள்ள டாக்டர்களிடம் காட்டி அவர்கள் சொல்கிறபடி செய்ய வேண்டும்.

## அந்தக் கடிதம்

சுமார் 120 வருஷத்துக்குமுன் இங்கிலாந்தில் நடந்தது: ஏழை ஸ்திரீ ஒருத்திக்கு அவள் புருஷனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அந்த நாளில் ஒரு கடிதத்துச்குத் தபால் செலவு பல பவுன். கடிதத்துக்குத் தபால் தலை ஒட்டவில்லை; அவளிடமிருந்து வசூலிக்க வேண்டியிருந்தது. அதைத் தர அவளுக்கோ சக்தியில்லை. உறையை மட்டும் ஒரு தரம் பார்த்துவிட்டு அதைத் தபால்காரனிடமே திருப்பிக் கொடுத்துவிட்டாள்.

இதை ரோலண்டு ஹில் என்பவர் கவனித்துக்கொண்டிருந்தார். அவர் அந்த ஸ்திரீயின் நிலையைக் கண்டு அநுதாபப்பட்டார். அவளை இதைப்பற்றி விசாரித்தார் ஹில். சற்றே சிரித்து, "அதனால் என்ன? பரவாயில்லை. எனக்குத் தெரிய வேண்டிய முக்கிய சமாசாரம் தெரிந்துவிட்டது. அவர் சௌக்கியமாகத்தான் இருக்கிறார்" என்றாள் அந்த ஸ்திரீ. பிறகு தன் புருஷன் உறையின்மேல் சங்கேத பாஷையில் எழுதுவது வழக்கம் என்று அவள் தெரிவித்தாள்.

உடனே ரோலண்டுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. தபாலில் போடும் கடிதத்துக்குச் செலவு ஒரு பென்னி (சுமார் ஒன்றே காலணு)க்குள் அடங்கவேண்டும் என்று போகுமிடமெல்லாம் பிரசாரம் செய்து வந்தார். "இப்படிச் செய்தால் ஆயிரக்கணக்கான பேர் கடிதம் எழுதுவார்கள். அதனால் தபால் இலாகாவுக்கு அதிக நஷ்டம் இராதபடி சுமாராக வரும்படியும் கிடைக்கும்" என்று விஷயத்தை விளக்கிச் சொன்னர். மூன்று வருஷத்துக்குள் பார்லிமெண்ட் சபை 'பென்னி தபால் முறை'யைச் சட்டமாக்கியது. இதனால் உள்நாடு, வெளிநாடு எங்கும் தபால் போக்குவரத்து அதிகரித்தது; வரவர இதில் ஏராளமான வரும்படி கிடைக்க ஆரம்பித்தது. ஹில் காலமானதும், அவரைச் சரித்திரப் பிரசித்தி பெற்ற 'வெஸ்ட்மின்ஸ்டர் ஆபி' என்ற கட்டிடத்தில் அடக்கம் செய்து மக்கள் கௌரவித்தார்கள்.

—ஹெரால்டு ஹெல்பர்

# எங்கள் உலகம்

## டாக்டர் இராவதி

**பெண்களுக்குப் படிப்பெதற்கு? அவர்கள் சம்பாதிக்கத் தொடங்கினால் வீட்டில் குழந்தைகளை யார் வளர்ப்பது? - இப்படி நவீனப் பெண்ணின் வாழ்க்கையைப் பற்றிய புதிய கேள்விகளுக்கு இதோ ஒரு பெண் விடையளிக்கிறார்.**

பெண்களான நாங்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகள் வாயடைத்துக் கிடந்தோம். நாங்கள் யார், எங்களுக்கு என்ன வேண்டும் என்பதைப்பற்றிப் பிறர் பேசினார்கள். அதை நாங்கள் கவனிக்காமலே இருந்தோம். எங்களைப் பாவ மூட்டை என்று சிலர் கருதினார்கள்; சிலர், தெய்வமாக வழிபட்டார்கள்; சிலர் 'மலர் போல வைத்துக்கொள்ள வேண்டும்' என்றார்கள்; மற்றும் சிலர், 'அடியாத மாட்டைப்போல் அடியாத பெண்ணும் படியாள்' என்றார்கள்.

யுகக்கணக்காக அநியாயத்துக்கு ஆளாகி அமுங்கிக் கிடந்தவர்கள் விழித்தெழுந்து கூக்குரல் போடும் காலம் இது. சமூக அநியாயங்கள் விலகும்போது பெண்களின் துன்பமும் தீர்ந்து போகுமே என்று கூறலாம். ஆனால் ஒவ்வொரு வகுப்பாரும் பலவேறு துறைகளில் சமூகத்தோடு பழகுகிறார்கள். அதனால் சமூகத்தின் செயல்களும் மாறுதல்களும் வேறுபடுகின்றன. மில் தொழிலாளிகளின் இயக்கமும் குடியானவர்களின் இயக்கமும் தத்துவ முறையில் ஒன்றுதான் என்றாலும், ஒவ்வொருவரும் சமூகத்தில் தங்களுக்கு இருக்கும் நிலைமைக்கு ஏற்றபடிதான் போராட்டப் பாதையை வகுக்க வேண்டியிருக்கிறது.

"கல்யாணமாகி அயலார் வீட்டுக்கு.."

கல்வி பயின்று இன்பமாக வாழும் ஒரு குடும்பத்தாரை எனக்குத் தெரியும். பாட்டி சோறு போடுகிறாள். பேரனுடைய இலையில் ஓர் எலுமிச்சம் பழம் அளவு வெண்ணெயை உருட்டுகிறாள். பேத்திகளின் இலையில் கடுகளவு வெண்ணெயைப் போடுகிறாள். பெரிய பேத்திகள் எல்லாரும் பேசாமல் உண்டார்கள். கடைசிப் பேத்திக்குத் தாங்கவில்லை;

காப்பிரைட்: ஸ்திரீ (மராட்டி: ஜூலை '51), கிர்லோஸ்கர்வாடி.

"எங்களுக்கு என்ன பாட்டி, இவ்வளவு குறைந்த வெண்ணெய்?" என்கிறாள்.

"என்ன இருந்தாலும் அவன் ஆண்பிள்ளை; அவன் தானே பெரியவனாகி இந்த வீட்டை நடத்த வேண்டும்? உங்களுக்கு என்ன? கல்யாணமாகி அயலார் வீட்டுக்குப் போய்விடுவீர்கள்!" என்கிறாள் பாட்டி.

இது, எங்களை வீட்டில் நடத்தும் மாதிரிக்கு ஓர் உதாரணம்.

என் சிறு பிராயத்தில் நிகழ்ந்த இன்னொரு சம்பவம். நாங்கள் உடன் பிறந்தவர்கள் எல்லாரும் சாப்பிட உட்கார்ந்தோம். பிள்ளைகள் அத்தனை பேருக்கும் அம்மா கடை நெய் ஊற்றினாள். எனக்கு மட்டும் வீட்டில் வெண்ணெய் காய்ச்சின நெய்யை ஊற்றினாள். "அக்காவுக்கு மட்டும் என்ன அம்மா அந்த நெய்?" என்று என் தம்பி கேட்டான். "அடே, அவள் இன்னும் இரண்டு நாள் தானே நம் வீட்டில் இருக்கப் போகிறாள்? நாளைக்குக் கல்யாணமாகிப் புக்ககம் போனதும் யார் அவளுக்குப் புத்துருக்கு நெய் ஊற்றப்போகிறார்கள், பாவம்!" என்றாள் அம்மா. பெண்களை வீட்டில் நடத்தும் வகைகளில் இது மற்றொன்று.

தகப்பனார் பையனிடம், "அடே, உனக்கு ஆர்ட்ஸ் கோர்ஸ் வேண்டாம்; டாக்டருக்கோ எஞ்சினீரிங்குக்கோ படி" என்கிறார். அப்பொழுது பெண், "அப்பா, நான் ஆர்ட்ஸ் எடுத்துக்கொண்டபோது நீங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லையே?" என்று ஆச்சரியத்தோடு கேட்கிறாள்.

"நீ எதைப் படித்தால் என்ன, அம்மா? உன் படிப்பு வெளிவேஷத்துக்கு; இவன் படிப்பு,

"இந்தத் தடவை
ஆண் குழந்தை பிறந்து.."

பிழைப்புக்கு!" என்று தகப்பனார் பதில் சொல்கிறார்.

மணமாகிப் புக்ககம் சென்றாலும் இதே வித்தியாசப் பேச்சுத்தான். ஒரு நாள் என் மாமியார் மிகவும் ஆனந்தமாக இருந்தாள். "மருமகளே, நீ பத்து வருஷமாக என் பிள்ளையின் குடும்பத்தை நடத்துகிறாய். இனியும் இதே மாதிரி நன்றாக நடத்து" என்று என்னிடம் சொன்னாள். 'பிள்ளையின் குடும்ப'மாம்! என் குடும்பம் என்று எண்ணித்தான் இத்தனை நாளும் அதை நடத்தி வந்திருக்கிறேன்!

ஒரு பிரசித்த டாக்டரின் மனைவி ஒரு நாள் என்னோடு வெளியே புறப்பட்டாள். அப்போது அவர், "வெளியே போகும்போது நல்ல புடைவையாக உடுத்துக்கொண்டு போடீ! நான் எவ்வளவு பெரிய டாக்டர் என்பதை உன்னைப் பார்த்து ஜனங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்" என்று அவளிடம் சொன்னார். ஆண்கள் பச்சை குத்திக்கொள்வதும் நகைகள் அணிவதுமான பழக்கங்கள் இப்போது மலையேறிவிட்டன. ஆகவே, தம் செல்வப் பெருமையை

மனைவியின் புடைவை வாயிலாக வெளியிடப் பார்க்கிறார் இந்த டாக்டர்.

எங்கள் வீட்டு வேலைக்காரி அழுகிறாள். "அம்மா, எட்டுக் குழந்தைகள் பிறந்து இந்த ஒரு பெண் குழந்தைதான் உயிரோடு இருக்கிறது. இந்தத் தடவை ஆண் குழந்தை பிறந்து உயிரோடு வாழ்ந்தால் நல்லது; இல்லாவிட்டால் அவர் இரண்டாம் கல்யாணம் செய்துகொண்டு விடுவார், அம்மா!"

பக்கத்து வீட்டில் ஒரு பெண் அபினி தின்று உயிரை விட்டாள். ஒன்றரை மாதக் கர்ப்பிணி; இது நான்காவது கர்ப்பம். குழந்தை பிறந்தவுடனே செத்துப் போவது வழக்கமாகிவிட்டது. அவளை எல்லாரும் சண்டபடி திட்டினார்கள். கணவன் வீட்டார் இந்தத் தடவை தன்னை மறுபடி அழைத்துப்போக மாட்டார்கள் என்ற பயத்தில் அவள் உயிரை விட்டாள்.



"அண்ணா அண்ணா என்று என் உயிரை வாங்காதே!"

தொழில் முறையில் பல துறைகளில் எந்தக் காலத்திலுமே ஆணுக்கு நிகராகப் பெண்ணும் வேலை செய்து வந்திருக்கிறாள். ஆயினும் அவளுக்குச் சம மதிப்பு இல்லை. கருத் தரித்தல், மகப்பேறு இவற்றால் சில நாளைக்காவது பெண்கள் பிறரைச் சார்ந்து வாழவேண்டியிருக்கிறது. குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு இருப்பதால் நீண்ட நேரம் வெளியே போய் வேலை செய்ய முடிவதில்லை. மாதவிடாயினால் உண்டான வெறுப்பினாலும் பயத்தினாலும் பெண்களை அன்றாடத் தொழிலிலிருந்து விலக்கி வைத்தார்கள். இதனால் பெண்களின் பொருள் வருமானம் குறைந்தது. சமூகத்தில் அவர்களின் அந்தஸ்தும் தாழ்ந்தது. முதல் தொந்தரவு இயற்கையாக ஏற்பட்டது. இரண்டாவது தொந்தரவுக்குக் காரணம் மக்களின் பிரமை தவிர வேறில்லை. அது விரைவில் நீங்கிவிடும். மூன்றாவது தொந்தரவை இன்று உலகம் முழுவதுமே எதிர்த்து நிற்பதால் சில நாளில் அதுவும் ஒழிந்துவிடும். இந்த மூன்று தொந்தரவுகளும் குறையக் குறைய, பெண்கள் சுதந்தரமாகவும் சுய நம்பிக்கையோடும் வாழ முடியும்.

இந்தக் காலத்தில் ஆண்களும் பெண்களும் ஒரே பள்ளியில் படிக்க முடிகிறது. ஆனால் என் மருமான் தன் தங்கையிடம், "பள்ளிக்கூடத்தில் வந்து அண்ணா அண்ணா என்று என் உயிரை வாங்காதே. நான் வெளியில் வந்து நிற்கிறேன். நீ வந்ததும் இருவரும் வீட்டுக்குத் திரும்பலாம்" என்றான்.

பர்க்குஸன் காலேஜில் எங்களோடு ஒரு பெண் படித்தாள். அவள் வகுப்பில் நுழைந்ததுமே, "மாமுகில் வருதே, எங்கும் இருள்

குழுதே'' என்று பையன்கள் பாடுவார்கள். இம்மாதிரி படிப்பினால் பெண்களுக்கு ஒரு பயனும் இல்லை. பணமும் புத்தகப் படிப்பில் தேர்ச்சியும் வாய்ந்த பெண்கள் காலேஜூக்குப் போகட்டும். மற்றப் பெண்கள் எழுதப் படிக்கத் தெரிந்ததும், பிழைப்புக்கு எதாவது ஒரு தொழிலைக் கற்றுக்கொள்வது நல்லது. ஜரிகையில் பூவேலை, தையல் தொழில், ஓவியம் வரைதல், கணக்குச் சரிபார்த்தல், தின்பண்டங்கள் தயாரித்து விற்பது முதலிய தொழில்களில் பெண்கள் ஈடுபடலாம். பாட்டில் பயிற்சியுடையவர்கள் பாட்டுக் கற்றுக்கொடுக்கலாம். அதிகம் படித்த பெண்கள் லாபரடரி பரிசோதனைகளில் உதவி செய்யலாம்.

வேலை செய்யும் பெண்கள் கல்யாணம் செய்துகொள்ளலாமா என்பது அடுத்த கேள்வி. குடும்பம் நடத்திக்கொண்டே சம்பாதிக்க முடியாது, அல்லது சம்பாதித்துக் கொண்டே குடும்பம் நடத்த முடியாது என்ற நிலை இன்று நமது சமூகத்தில் இருச்கிறது. மணமான பெண்களுக்கு வேலை கிடைப்பது சிரமமாக இருக்கிறது. இந்த அநீத நிலை மாறவேண்டும்.

படிப்பு முடிந்து தொழிலில் நிலைக்காமல் மணம் செய்துகொள்வது விரும்பத்தக்கதல்ல. மணமானதும் கர்ப்பத்தடை முறைகளை அநுசரித்துக் குறைவான குழந்தைகளைப் பெற்றுக்கொண்டால்தான் பெண் தானும் சம்பாதித்துக் குடும்பத்தை இன்பமாக நடத்த முடியும். கணவனும் மனைவியும் தம் தம் சொந்தத் தொழில்களில் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக ஈடுபடுகிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு குடும்ப வாழ்க்கையில் செல்வமும் இன்பமும் இருச்கும். தன் சிறு குடும்பத்துக்குப் புறம்பேயுள்ள பெரிய சமூகக் குடும்பத்தையுங் கூட ஒவ்வொரு பெண்ணும் கவனிக்க வேண்டும். சிறு வயதில் நாம் சமூகத்திலிருந்து பெறும் கடனைப் பெரியவர்களானதும் நாணயமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் நம் கடமை நிறைவேறும்.

லாபரடரி பரிசோதனைகளில் உதவி

## அதுவும் ஒரு நன்மைக்கே!

புலி வேட்டையில் தேர்ந்த ஒரு ஷிகாரி மனைவியிடம் தன் பிரதாபத்தைச் சொல்லிக்கொண்டிருந்தான்; "ஒன்று நீயாச்சு, இல்லாவிட்டால் நான் ஆச்சு என்று அதோடு மல்லுக் கொடுத்துக் கடைசியில் அதைத் தீர்த்துக் கட்டினேன்" என்றான்.

உடனே மனைவி, "அதுவரைக்கும் நல்லதாய்ப் போச்சு! இல்லாவிட்டால் இந்த மாதிரி அழகான விரிப்பு நமக்குக் கிடைத்திருக்குமா?" என்றாள்.

—ஸாட்டர்டே நைட்'

# விவேகானந்தர்

**ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஞானச்சுடரை உலகெலாம் ஒளி வீசச் செய்த இந்த மகா புருஷரின் வாழ்வு தூய்மை மிக்கது; வாக்கு வன்மை பொதிந்தது.**

குமரி தந்த அமைதி: அமெரிக்கா செல்வதற்கு முன் விவேகானந்தர் இமாலயம் முதல் ஒவ்வொரு ஸ்தலமாகக் காலால் நடந்தே தரிசனம் செய்து வந்தார். போகும் இடமெல்லாம் அரசர் முதல் ஆண்டி வரையில் எல்லாரும் உணர்வோ உற்சாகமோ இராமல் சோர்ந்திருப்பதைக் கண்டார். எங்கும் பசிப்பிணியும் நோயுமே மலிந்து கிடந்தன. மலையாளத்தில் தீண்டாமையின் கொடுமையைக் கண்டு மனம் குமுறினார். கன்னியா குமரியை அடைந்தபோது அவருக்கு எல்லாவற்றின் மேலும் சலிப்பு ஏற்பட்டு விட்டது. 'இந்தச் சமூகம் உருப்படாது' என்று அவருக்குத் தோன்றியது. சோர்வோடு குமரியின் கோயிலுக்குள் நுழைந்தார். எதிரே அம்மனின் திவ்விய வடிவத்தைக் கண்டதும் அவருடைய மெய் சிலிர்த்தது. அம்மனின் முகத்தில் தோன்றிய முறுவல் தாய் அன்புடன் மகனை வரவேற்பதுபோல் இருந்தது. சந்நிதி எதிரே அரபிக் கடலும் வங்காளக் குடாக் கடலும் இந்து மகா சமுத்திரமும் கலக்கும் அற்புதக் காட்சியிலும் அன்னையின் வடிவையே அவர் கண்டார். "கடல் கடந்து நம் இந்து சமயத்தின் பெருமையை நிலைநாட்டி வா" என்று அலைக்கரம் கொண்டு அவள் அழைப்பதுபோல் இருந்தது அவருக்கு. வெகுநேரம் குமரி முனையில் தியானத்தில் அமர்ந்திருந்தார். அவர் மனத்தில் ஓர் அமைதி ஏற்பட்டது. பிறகு அம்மனை வணங்கினார்; 'இனிமேல் சமூகத்தொண்டு செய்வதும் இந்து மதத்தின் சாரமான வேதாந்தத்தைப் பிரசாரம் செய்வதுமே நம் லட்சியம்' என்ற உறுதியோடு அங்கிருந்து சென்னைக்குக் கிளம்பினார்.

(வாழ்வு)

# வாழ்வும் வாக்கும்

பிரம்மசரியத்தின் பெருமை: விவேகானந்தர் உடல்நிலை சரி இல்லாமல் பேலூர் ராமகிருஷ்ண மடத்தில் சில காலம் தங்கியிருந்தார். அப்போது லண்டனிலிருந்து அவருக்குப் பெரிய புத்தகக் கட்டு ஒன்று வந்தது. உலகத்தைப்பற்றிய விவரமெல்லாம் அடங்கிய 'என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிகா' என்ற புத்தகத் தொகுதி அது. பல பாகங்கள் இருந்தன. இரண்டு மூன்று நாள் ஆனதும் அவரோடு வழக்கமாகப் பேச வரும் ஒரு சிஷ்யர், "சுவாமி, இத்தனை புத்தகங்களையும் வாழ்நாள் முழுவதும் படித்தாலும் முடிக்க முடியாது போல் இருக்கிறதே!" என்றார். விவேகானந்தர் சிரித்துக்கொண்டே, "சரி. முதல் பத்துப் புத்தகத்தில் எங்கே வேண்டுமானாலும் விவரமாகக் கேள்வி கேள். பதில் சொல்கிறேன்" என்றார். சிஷ்யரால் இதை நம்ப முடியவில்லை. அவர் தமக்குத் தோன்றின பல இடங்களிலிருந்தெல்லாம் நுட்பமான விஷயங்களை எடுத்து விளக்கச் சொன்னார். விவேகானந்தர் புத்தகத்தில் உள்ளபடியே ஒரு சொல் விடாமல் சொல்லி முடித்தார். சிஷ்யர் மிகவும் ஆச்சரியப்பட்டு, "இது மனிதப் பிரயத்தனத்தால் ஆகாத காரியம். நீங்கள் தெய்வப் பிறவியாகத்தான் இருக்க வேண்டும்" என்றார். அதற்கு விவேகானந்தர், "அப்படி ஒன்றுமில்லை. பிரம்மசரிய விரதத்தைச் சரிவர அநுஷ்டித்தால் எல்லாக் கலைகளையும் சுலபமாகக் கற்றுக்கொண்டுவிடலாம். அதனால் ஞாபக சக்தியும் பெருகும்" என்றார். (வாழ்வு)

எது உண்மையான தானம்?: "வறுமையினால் திண்டாடும் மக்களுக்கு ஒரு பிடி சோறு வழங்காத





அநேகம் பேர்வழிகள் நம் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களே தர்மம் என்ற பெயரால் பசு மாட்டுக்கு வெள்ளிக்கிழமைகளிலும் விசேஷ தினங்களிலும் பூஜை செய்து குவியல் குவியலாக உணவு அளிக்கிறார்கள்; பறவைகளுக்குத் தானிய மூட்டைகளாக வாரி இறைக்கிறார்கள். இதைப் புண்ணியம் என்று அவர்கள் சொல்லிப் பெருமை அடித்துக்கொள்ளலாம். தம்மைப் போல் ஒரு மனிதன் பட்டினியால் சாகும்போது அவனைக் கண்டெடுத்தும் பாராமல் இப்படிச் செய்யும் 'தானம்' மகா பாவம் ஆகும். இதை நான் ஆதரிக்கவே மாட்டேன்."

(வாக்த)

## எதிர்பாராத மழை

எங்கள் அப்பா அந்தப் பக்கத்திலேயே பிரசித்தி பெற்ற டாக்டர். அப்போது சடுசுகோடை. அப்பாவுக்கு உடம்பு சரியாக இல்லை; படுத்த படுக்கையாகக் கிடந்தார். ஜுர வெப்பத்தோடு வெயில் வேறு தாங்க முடியவில்லை. நாங்கள் எங்களால் முடிந்த அளவு அவருக்குச் சௌகரியமெல்லாம் செய்து பார்த்தோம். ஆனால் வெப்பம் அடங்கின பாடில்லை. அம்மா மட்டும், "மழை பெய்து தொலையக்கூடாதா?" என்று சொல்லிக் கொண்டேயிருந்தாள்.

ஆகாயத்தில் ஒரு மேகம் இல்லை. வெயில் பட்டை உரியக் காய்ந்தது. ஆனால் திடீரென்று கொட்டுக் கொட்டென்று எங்கள் வீட்டில் மழை கொட்ட ஆரம்பித்தது. கூரை, ஜன்னல் எல்லாம் ஒரே ஜலம் வழிந்தோடியது. கம்மென்று மண்மணம் வீசிக் குளுகுளுவென்று ஆயிற்று. நாங்கள் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தோம்; எங்கள் பேட்டையில் நீரணைக்கும் படையைச் சேர்ந்தவர்கள் வீட்டின் மேல் தண்ணீர்க் குழாயைத் திருப்பி விட்டிருக்கிறார்கள் என்று தெரிந்தது. அம்மா, "மழை பெய்யாதா?" என்று சொல்லிக்கொண்டிருந்ததை அவர்களில் யாரோ கேட்டார்கள்போல் இருக்கிறது; உடனே இப்படித் திரண்டு வந்துவிட்டார்கள்! அப்பாவிடம் அவர்களுக்கு அவ்வளவு அன்பு!

—கிர்பி பிப்

# சிலைக்கு வர்ணமா?

டாக்டர் சார்லஸ் பாப்ரி

*******************************************

**சிற்பங்களுக்கு வர்ணம் பூசுவது கேவலம் என்பது இன்று பலர் அபிப்பிராயம். ஆனால், என்றுமே இதுதான் ஐதிகமாக இருந்ததா? இல்லை என்று திட்டமாகச் சொல்கிறார் கட்டுரையாளர்.**

*******************************************

கலையைப் பற்றிய வரலாறு சாதாரண ஜனங்களுக்கு அவ்வளவாகப் புரியாது. பழைய எகிப்தியப் பிரதிமைகளுக்கு வர்ணம் தீட்டியிருப்பது உண்மையே என்று பெரும்பாலான ரசிகர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் மைலோ என்ற இடத்திலுள்ள புகழ் பெற்ற வீனஸ் தேவதையின் உருவம், பார்த்தினன் என்ற கோயில் கட்டிட வேலைப்பாடு இவற்றில் பளிச்சென்று வர்ணம் தீட்டியிருந்தது என்றால் அவர்களால் நம்பவே முடியவில்லை. சிற்பங்களுக்கு வர்ணம் தீட்டும் இந்தப் பழக்கம், பழைய ரோம, கிரேக்கச் சிற்பக் கலை நசித்தப் போனதுமே, நின்றுவிடவில்லை; பிற்காலத்திலும் நீடித்திருந்தது.



எல்லைப்புறத்தில் கிடைத்த அற்புதமான புத்தர் தலைச் சிற்பம்.

மறுமலர்ச்சி தோன்றியபோது சிற்பிகள் இந்த வழக்கத்தை நிறுத்திவிட்டார்கள்; சிற்பங்களுக்கு இருக்க வேண்டிய வர்ணங்களைத் தம் கற்பனையில் ரசிகர்கள் தீட்டிப் பார்த்துக்கொள்ளட்டும் என்றுதான் இப்படிச் செய்தார்கள். கல், சலவைக் கல், வெண்கலம், மரம் முதலிய இயற்கைப் பொருள்களில் செதுக்கும் உருவங்களுக்கு வர்ணம் தீட்டாமல் அப்படியே விட்டுவிடுவது என்றும், சுவர்ச்சித்திரங்களுக்கும் கான்வாஸ் என்னும் கித்தானில் எழுதும் சித்திரங்களுக்கும் மட்டும் வர்ணந் தீட்டினால் போதும் என்றும் அந்தக் காலத்தில் ஓர் அபிப்பிராயம் ஏற்பட்டது.

இந்த மாதிரி விருப்பு வெறுப்புகள் நீங்கப் பல நாள் ஆகலாம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்: பழைய காலத்தில் மேல்நாட்டிலும்

மூலம்: அமெரிக்கன் ரிப்போர்ட்டர் (ஆங்கிலம்: 4-7-'51), புது டில்லி.

கீழ்நாட்டிலும் இருந்த சிற்பிகள் அனைவரும் வர்ணம் தீட்டாத சிலைகள் பூர்த்தியாகாதவை என்றே கருதி வந்தார்கள். புராதன எகிப்திலும், பாரசீகத்திலிருந்து மத்திய ஆசியப் பிரதேசம் வரையிலும், தூரக்கிழக்கு நாடுகளிலும் சிற்பிகள் வர்ணம் பூசுவதிலும் வல்லவர்களாக இருந்தார்கள்.

எல்லா நாடுகளையும் விட இந்தியாவில்தான் வர்ணம் தீட்டிய உருவ வேலைப்பாடு சிறப்பாக அமைந்திருக்கிறது. பல நிற இறகுகள் கொண்ட பறவைகளையும் கண்ணைக் கவரும் வண்ண மலர்களையும் வனப்பு மிக்க மலைகளையும் அழகு மிகுந்த சூரிய அஸ்தமனக் காட்சிகளையும் கண்டு அநுபவித்த இந்திய மக்கள் இயற்கையாகவே அதில் ஈடுபட்டார்கள்.



இது ஒரு விசித்திரமான புத்தர் சிலை. அவர் ஞானோதயம் பெறுவதற்கு முன் உபவாசம் கிடந்து உடலை வருத்திக்கொள்ளும் நிலை.

வர்ணம் மங்கிக் கிடக்கும் அஜந்தா சித்திரங்கள் ஒரு காலத்தில் கண்ணைக் கவரும் வர்ணத்தோடு விளங்கின. புராதன இந்தியச் சிலை உருவங்களும் இப்படியே வர்ணம் தீட்டியவை என்பதற்குச் சான்று இப்போதும் காட்டலாம். இது அநேகம் பேருக்குத் தெரியாது. இப்போது கோயில்களில் சில உருவங்களை அலட்சியமாகச் செதுக்கி அவைகளுக்கு வர்ணந் தீட்டியிருப்பதைப் பார்த்தால் அநேகம் பேருக்கு அருவருப்பாகத்தான் இருக்கும். ஆயினும் ஒரு காலத்தில் உன்னத நிலையில் இருந்த சிற்பக் கலையின் போக்கை அநுசரித்தே இந்த மாதிரி செய்து வந்தார்கள். சிற்பக் கலையின் ஆரம்பத்திலிருந்தே இந்தியாவில் காரைச் சிற்பங்களுக்கு இயற்கை வர்ணம் தீட்டி வந்திருக்கிறார்கள். பர்ஹாத் என்னும் இடத்தில் கிடைத்த சிலையும் (கி. மு. 250 - 150) வட மதுரையில் கிடைத்த சிலைகளும் (கி. மு. 2 - ஆம் நூற்றாண்டு) குப்த, காந்தாரச் சிற்பங்களும் பிற்காலச் சிற்பங்களும் இதற்குச் சான்றாகும்.

சமீபத்தில் கண்டுபிடித்த பழைய நாளந்தா சர்வகலாசாலைக் கட்டிடத்தின் எல்லாச் சுவர்களிலும் கண்ணைக் கவரும் வர்ணம்

களுடன் காரையில் பல உருவங்கள் அமைந்திருக்கின்றன. வடமேற்கு எல்லைப்புறத்தில் வேறு சில காரை உருவங்களைத் தோண்டியெடுத்திருக்கிறார்கள். 6, 7 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த உருவங்களில் வர்ணங்கள் லேசாகத் தீட்டியிருப்பதால் மழையில் நனைந்து சிற்சில இடங்களில் வர்ணம் மறைந்திருந்தாலும் பொதுவாக வர்ணம் கெடவில்லை என்றுதான் சொல்லவேண்டும். இதிலிருந்து புராதன இந்தியச் சிற்பிகளின் திறமை தெரியும். இவைகளில் லாகூர் மத்தியப் பொருட்காட்சிச்சாலையில் உள்ள 'நீலக் கண் இளவரசி' என்னும் சிலையின் கண்களில் நீல வர்ணம் வெகு அழகாக அமைந்திருக்கிறது. பயிரில் செம்பட்டை நிறம் தீட்டிய புத்தரின் தலை ஒன்றும் இருக்கிறது. மெருகு தீட்டிய இன்னும் பல சிலைகளையும் அங்கே காணலாம்.

இங்கே உள்ள இரண்டு படங்களில் போதிசத்துவர் உருவம் உலகப் பிரசித்தமானது. ஞானோதயம் பெறுவதற்கு முன் அவர் தம் பழைய ஞானாசிரியர்களின் உபதேசப்படி உடலை வருத்திக்கொண்டு எலும்புந் தோலுமாகக் காட்சியளிக்கும் நிலை இது. ஒரு சமயம் இந்த உருவம் முழுதும் தங்கமுலாம் பூசியிருந்தது. இப்போதும் இதன் சில பாகங்களில் தங்க ரேக்கு இருப்பதைக் காணலாம்.

வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் கிடைத்த மற்றொரு சிற்பம் கி. பி. 7 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இந்தப் புத்தர் தலைச் சிற்பம் காரையினால் செய்தது. இதுவரை இதன் சித்திரம் வெளியானதில்லை. இந்தத் தலையில் ஏராளமாக அலங்காரம் இருப்பதைக் காணலாம். தலை முடியில் தங்க முலாம் தீட்டிப் பளிச்சென்று சிவப்பு, நீல நிறங்களில் மெருகிட்டிருக்கிறது. தலை மயிரும் தீட்டிய புருவங்களும் அரும்பு மீசையும் கரு நிறமாக இருக்கின்றன. கண்ணின் நிறம் சற்று வெள்ளை. உடல் நிறம் மஞ்சள் கலந்த வெண்ணிறம். காதணிகள் சிவப்பு நிறம் கொண்டு தங்கமுலாம் பூசி விளங்குகின்றன.

### அவரது தேவை

ஓர் இடத்தில் பாட்டை போடுவதென்று ஏற்பாடாயிற்று. அது சேறும் சகதியும் நிறைந்த பிரதேசம். மேல் பார்வை பார்க்கும் அதிகாரி தமக்குக் கீழ் இருக்கும் உத்தியோகஸ்தரிடம், "சரி, ஒரு பதினைந்து ஆட்களை அழைத்துக்கொண்டு போய் அந்த வேலையைக் கவனியுங்கள்" என்று உத்தரவிட்டார்.

கீழ் உத்தியோகஸ்தர், "அங்கே இருக்கிற சேறு ஆளையே மூழ்க்கிவிடுமே" என்று சொல்லிப் பார்த்தார்.

"என்ன ஐயா, உளறுகிறீர்? அப்படி ஏதாவது தேவையாக இருந்தால் சொல்லும்; நான் அனுப்பி வைக்கிறேன்" என்றார் மேலதிகாரி.

உத்தியோகஸ்தர் புறப்பட்டுப் போய்ச் சற்று நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்தார். அதிகாரியிடம் ஒரு சீட்டை நீட்டினார். அதில் கண்டிருந்தது இதுதான்: "15 அடி சேற்றைக் கடக்க 18 அடி உயரமுள்ள 15 ஆட்கள் தேவை."

—ராட்மன்

நம் பக்கத்து நாடான பர்மா
இன்று எந்தக் கதியில் இருக்கிறது!

# பர்மாவில் கம்யூனிஸ அபாயம்

புரோபஸர் எஸ். பி. முகர்ஜீ

**1885**-இல் பர்மாவைப் பிரிட்டிஷ்காரர் இந்தியாவோடு இணைத்தார்கள். 1937-வரை இந்த நிலைமை நீடித்திருந்தது. "இதற்குப் பர்மியருடைய கிளர்ச்சிதான் காரணம்" என்று பிரிட்டிஷார் சாக்குச் சொல்லிவந்தார்கள். ஆனால் உண்மை என்ன தெரியுமோ? பிரிட்டிஷ் அரசியல், பொருளாதார நலன் தான்.

இரண்டாம் மகாயுத்தத்தில் பர்மாமீது ஜப்பான் படையெடுத்து அதைச் சுலபமாக ஆக்கிரமித்துக் கொண்டது. பிரிட்டிஷார்மேல் பர்மியர் அநேகம் பேருக்கு இருந்த வெறுப்பும், பிரிட்டிஷாரின் அஜாக்கிரதையுமே இதற்குக் காரணம். வெள்ளைக்காரனுக்கு இருந்த மதிப்பே இதனால் போய்விட்டது. 1945-வரையில் பர்மா ஜப்பானியருடைய ஆதிக்கத்தில் இருந்து வந்தது.

1930-இலிருந்தே ஜப்பானிடத்தில் பர்மியருக்கு ஒரு பற்றுதல். 'நம்மை ஜப்பான் வந்து பிடித்துக் கொண்டாலும் சரி, பிரிட்டிஷ் பீடை தொலைந்தால் போதும்' என்று அவர்கள் எண்ணி வந்தார்கள். ஆனால் கொஞ்சநாள் ஆனதும் அவர்களுக்கு ஜப்பானிய ஆட்சியில் அதிருப்தி ஏற்பட்டுப் பிரிட்டனே தேவலை என்று தோன்றிவிட்டது.

பர்மியரின் சுதந்தர உணர்ச்சி பின்னும் தீவிரமாயிற்று. மக்களின் பாஸிஸ எதிர்ப்பு லீக் ஏற்பட்டதற்கு இதுதான் காரணம். கம்யூனிஸ்டுகள், சோஷலிஸ்டுகள், தக்கின் முதலிய இடதுசாரிக் கட்சிகளெல்லாம் இதில் திரள் திரளாகச் சேர்ந்தார்கள். பர்மாவில் நேச தேசச் சைனியம் மறுபடியும் நுழைவதற்கு முன்னேயே 'பர்மிய தேசாபிமானிப் படை' ஜப்பானியரோடு தீரமாகப் போராடிப் பல இடங்களில் வெற்றியும் பெற்றது. இது நேச நாட்டு ராணுவ அதிகாரிகளுக்குத் தெரிந்திருந்தும் வெகுநாள் வரையில் விஷயத்தை அப்படியே அமுக்கி வைத்திருந்தார்கள். பின்னல் பாஸிஸ எதிர்ப்பு முன்னணியின் தலைவரான ஜெனரல் ஆங்-ஸான் முதலில் கொஞ்ச காலம் ஜப்பானியரோடு ஒத்துழைத்தவர்தான். பிறகு தாம் நிறுவிய பர்மா பாதுகாப்புச் சைனியத்தோடு ரகசியமாக நேச நாடுகளுக்குத் துணை புரிந்து வந்தார். இல்லாவிட்டால் நேச நாடுகள் கொஞ்சத்தில் ஜயித்திருக்க முடியாது.

1945 ஆரம்பத்திலேயே பர்மாவில் மறுபடியும் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டது. இந்தியாவில் நேருவின் தலைமையில் இடைக்கால சர்க்கார் ஏற்பட்டதுபோல் செப்டம்பர்

காப்பிரைட்: இந்தியன் ரெவ்யூ (ஆங்கிலம்: ஆகஸ்ட் '51), சென்னை.

1946, 28-ஆம் தேதி பர்மாவில் ஆங்-ஸான் தலைமையில் ஒரு சர்க்கார் ஏற்பட்டது. 1947 ஜனவரியில் லண்டனில் நடந்த மகாநாட்டில் பர்மாவின் அரசியலைப்பற்றி ஆலோசனை நடந்தது. 1935-ஆம் வருஷ சட்டப்படி அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்துவது என்று முடிவாயிற்று. இப்படித் தேர்ந்தெடுத்த சட்டசபை மூலம் தற்காலிகமாகப் பிரிட்டிஷ் ஆட்சி நிலவி வரும் என்றும், அதற்குள் அரசியல் அந்தஸ்தைப்பற்றி அந்தச் சபை தீர்மானிக்கும் என்றும் ஏற்பாடு.

உடனே தக்கின் பாஸீன், ஊ ஸா என்ற பர்மியத் தலைவர்கள் இருவரும் அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். ஆங் ஸான் தலைமையில் பாஸிஸ எதிர்ப்பு லீக், தேர்தலில் பெருவாரியாக வெற்றி பெற்றது. ஆனால் 1947 ஜூலை 19-ஆம் தேதி ரங்கூன் செக்ரடேரியட் கட்டிடத்தில் புகுந்து அவரையும் அவருடைய மந்திரிசபையில் இருந்த இன்னும் ஐந்து பேரையும் சிலர் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். பிறகு பர்மா சர்க்கார் சதி செய்தவர்களுள் முக்கியமான ஊ ஸாவைத் தூக்கிலிட்டது. சதிகாரர்களுக்கு உடந்தையாக இருந்து துப்பாக்கி சப்ளை செய்த ஆங்கில மேஜரான விவியன் என்பவருக்கு நீண்டகாலச் சிறைத் தண்டனை விதித்தது.

பாஸிஸ எதிர்ப்பு லீகின் உப-தலைவரான தக்கின் நூ என்பவர் அப்போது பர்மிய அரசியல் நிர்ணய சபையின் அக்கிராசனராக இருந்தார். 1948 ஜனவரி 4-ஆம் தேதியன்று பர்மா சுதந்தர சோஷலிஸ்ட் குடியரசாயிற்று. தக்கின் நூ பர்மியக் குடியரசின் முதல் பிரதம மந்திரியானார். பிப்ரவரி மாதத்தில் நாடெங்கும் கலவரம் மூண்டது. கம்யூனிஸ்டுகள் பகிரங்கமாகவே சர்க்காரை எதிர்க்கக் கிளம்பிவிட்டார்கள்; முதலில் நாசவேலைகளில் ஈடுபட்டார்கள். தாக்கிவிட்டு எங்கேயாவது ஓடி ஒளிந்துகொள்வார்கள். 1948 ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்குள் கம்யூனிஸ்ட் எதிர்ப்பை ஒடுக்கிவிட முடியும் என்று சர்க்கார் தரப்பினர் சொல்லி வந்தார்கள். ஆனால் அவர்கள் சொன்னது பலிக்கவில்லை.

பர்மிய கம்யூனிஸ்டுகளுக்குள் 'வெள்ளைக் கொடிக்காரர்', 'சிவப்புக் கொடிக்காரர்' என்று இரண்டு எதிர் எதிர்க் கோஷ்டியார் இருக்கிறார்கள். தக்கின் டன்டுன் என்பவரின் தலைமையில் நாடெங்கும் கலவரம் விளைத்து வரும் 'வெள்ளைக் கொடிக்காரர்'களை வெளிநாட்டார் 'ஸ்டாலினீயவாதிகள்' என்கிறார்கள். இவர்களுக்கு எப்படியோ தொடர்ந்து ஆயுதங்கள் கிடைத்துக் கொண்டேயிருக்கின்றன. தக்கின் டன்டுன் ஒரு சமயம் பாஸிஸ எதிர்ப்பு லீகின் பொதுக் காரியதரிசியாக இருந்தவர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த எச். என். கோஷால் என்பவருடன் சேர்ந்து டன்டுன் பாஸிஸ எதிர்ப்பு லீகையே கைப்பற்றப் பார்த்தார். கோஷால் ரங்கூன் சர்வகலாசாலையில் படித்துப் பட்டம் பெற்றவர்; வங்காளி. அவருடைய பர்மியப் பெயர் தக்கின் பாடின். கடைசியில் பாஸிஸ எதிர்ப்பு லீகிலிருந்து தக்கின் டன்டுனை விலக்கிவிட்டார்கள். அவர் அதுமுதல் மறைவில் இருந்துகொண்டு சர்க்காருக்குத் தொல்லை கொடுத்து வருகிறார். போன வருஷம் இந்தச் சமயத்தில் வடக்கே டௌங்கூ பிரதேசத்தில் வெள்ளைக்கொடி கம்யூனிஸ்டுகள்

இட்டதுதான் சட்டம். 1949-இல் 10,000 பேர் அடங்கிய 'வெள்ளைக் கொடி'ப் படை இருந்தது. பர்மா 2,61,610 சதுர மைல் கொண்டது. இதில், '48,000 சதுர மைலை மீட்டு விட்டோம்' என்று அவர்கள் சொல்லிக்கொண்டார்கள். சர்க்கார் துருப்புகள் அவர்களை ஒரு கை பார்த்துவிடவே முன்னைக்கு இப்போது சற்று அடங்கி யிருக்கிறார்கள்.

சிவப்புக் கொடி கம்யூனிஸ்டுகளின் தலைவர் தக்கின் ஸோ. இவர்களை 'டிராட்ஸ்கீயவாதிகள்' என்று அழைக்கிறார்கள். எப்படி இருந்தாலும் கிளர்ச்சி செய்து வர வேண்டும் என்பது இவர்கள் கொள்கை. வெள்ளைக் கொடிக்காரர்கள் இப்படி இல்லை; சந்தர்ப்பம் அறிந்து கிளர்சசி செய்வதோடு ராஜதந்திரமும் வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியும். 1948 மார்ச்சில் இந்த இரு சாராருக்குள்ளும் பிளவு ஏற்பட்டது. அதுமுதல் ஒருவரை ஒருவர் கண்டால் ஆவதே யில்லை.

பி. வி. ஓ என்ற மக்கள் ஊழியர் ஸ்தாபனம் ஜப்பானியரை விரட்டும் போது பாஸிஸ எதிர்ப்பு லீகுடன் ஒத்துழைத்தது. கம்யூனிஸ்டுகளுக்கும் பாஸிஸ எதிர்ப்பு லீகுக்கும் சசசரவு ஏற்பட்டதும் பி. வி. ஓ தான் இரண்டுக்கும் சமரசம் செய்து வைக்கப் பார்த்தது. ஆனால் அது பலிக்கவில்லை. இந்த ஸ்தாபனத்தில் இருப்பவர்களுக்குக் கம்யூனிஸ்டு அநுதாபம் உண்டு. ஜூன் 1948-இல் பிரதம மந்திரி தக்கின் நூ இடது சாரிக்குள் ஐக்கியம் ஏற்படுத்த 14 அம்சம் கொண்ட ஒரு திட்டம் வெளியிட்டார். அப்போது இதனால் பி. வி. ஓவுக்குள்ளே பிளவு ஏற்பட்டு விட்டது. ஜூலை 1948-இல் பி. வி. ஓ வில் பெரும்பான்மையோர் பதுங்கி எதிர்ப்பு வேலையில் ஈடுபட ஆரம்பித்தார்கள். இவர்களுக்கு 'வெள்ளைப் பட்டை'க்காரர் என்று பெயர். சிறுபான்மையான 'மஞ்சள் பட்டைக்காரர்கள்' தக்கின் நூவை ஆதரித்து வருகிறார்கள். 1949-இல் கரேன் ஜாதியார் சர்க்காருக்கு விரோதமாகக் கிளம்பியபோது, 'வெள்ளைப் பட்டை'க்காரர்கள் சர்க்காருக்குத் துணை புரிய முன்வந்தார்கள். சர்க்காரும் அதற்கு இணங்கி ஆயுதங்களை அவர்களுக்கு ஏராளமாக வழங்கினார்கள். ஆனால் மறுபடியும் சர்க்காருக்கும் அவர்களுக்கும் சச்சரவு மூண்டது. இருந்தாலும் சமீபத்தில் சர்க்கார் அவர்கள் விஷயத்தில் சற்றுத் தயாளம் காட்டவே அவர்களில் அநேகம் பேர் சர்க்கார் கட்சியில் சேர்ந்துவிட்டார்கள்.

கரேன் ஜாதியார் பர்மாவிலுள்ள முக்கியமான சிறுபான்மை வகுப்பினர். மொத்தம் சுமார் 25 லட்சம் கரேன்காரர் இருப்பார்கள். இவர்களில் அநேகம் பேர் கிறிஸ்துவர். இருந்தாலும் பௌத்தர்களும் இயற்கையைத் தெய்வமாகப் போற்றி வரும் ஒரு சாராருந்தான் அதிகம். முன்னெல்லாம் கிறிஸ்துவக் கரேன்களை மற்றப் பாமாக்காரர்கள் இழிவாக நடத்தி வந்தார்கள். அதனால்தான் இப்போது தனியாகப் பிரிந்துவிட வேண்டுமென்று அவர்கள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். பர்மிய அரசியல் திட்டத்தின்படி கரேன்கள் தனி ராஜ்யம் ஸ்தாபித்தாலும் பத்து வருஷத்துக்கு அவர்கள் பிரிந்து போகக் கூடாது என்று ஏற்பாடு. இப்படிப் பிரிந்து போக விரும்பும் கரேன்

களின் ஸ்தாபனந்தான் கே. என். டி. ஓ (கரேன் தேசியப் பாது காப்பு ஸ்தாபனம்). இதைச் சேர்ந் தவர்கள் 1949-ஜனவரியில் சர்க் காருக்கு எதிராகக் கிளம்பி, பர்மா முழுவதையும் ஆக்கிரமித்து விடு வார்கள் போல் இருந்தது. அதோடு மற்றக் கலகக்காரர்கள் வேறு அங் கங்கே கிளம்பி விட்டார்கள். இத ஞல் நிலைமை மோசமாகி, தக்கின் நூ சர்க்கார் சீக்கிரமே கவிழ்ந்துவிடும் என்றுதான் தோன்றிற்று.

பர்மாவில் குடியேறி வாழும் கூர்க்காக்களின் தொகை சுமார் 2 லட்சம் இருக்கும். இவர்களும் சரி, கரேன்களும் சரி சண்டைக்குச் சளைக்கவே மாட்டார்கள். கே. என். டி. ஓக்கள் பர்மா சர்க்காரை எதிர்க்க ஆரம்பித்ததும் பர்மியப் படையில் இருந்த அநேகம் கரேன் கள் கலகக்காரர்களோடு சேர்ந்து கொண்டார்கள். கொஞ்சம் நஞ்சம் இருந்த மற்றக் கரேன்களிடமிருந்து ஆயுதங்களைப் பிடுங்கிக்கொண்டு, சிறையில் அடைத்துவிட்டார்கள் பர்மா சர்க்கார்.

1949-இல் மத்திய பர்மாவிலும் கீழ்ப் பர்மாவிலும் 50,000 சதுர மைல் பரப்புக்குக் கரேன் கலகக் காரர் கையில் இருந்தது. டௌங் கூவைச் சர்க்கார் படைகள் கைப் பற்றின. இதுதான் கலகக் காரர்களின் தலைமை ஸ்தானம். அதோடு அவர்கள் தலைவனுன சாபா உ க்யி என்பவனும் இறந்து விடவே கரேன்கள் பாடு திண்டாட்டமாகிவிட்டது; பழைய உற்சாகமெல்லாம் குன்றி அடங்கி ஒடுங்கிவிட்டார்கள். பிரிட்டிஷ் ஆட்சியின்போது இங்கே இருந்து பழகிய சில பிரிட்டிஷ் உத்தியோ கஸ்தர்களும் ராணுவத்தினரும்- இரண்டோர் அமெரிக்கருங்கூட- இந்தக் கரேன்களுக்கு அவ்வப் போது தூபம் போட்டுக்கொண் டிருந்தார்கள். இல்லாவிட்டால் கரேன் எதிர்ப்பை முதலிலேயே சமாளித்துவிட்டிருக்க முடியும்.

மான் அல்லது தலேங் என்பவர் கள் மற்ருெரு சிறுபான்மைக் கட்சி யார். இவர்களும் எம். என். டி. ஓ என்று ஒரு ஸ்தாபனம் அமைத்துக் கொண்டு சர்க்காருக்கு எதிராகக் கிளம்பினுர்கள். ஆனுல் இவர்கள் கிளர்ச்சி அப்படி அதிகமாக வலுக்க வில்லை. 1951 சுதந்தர தினத் தோடு அதை நிறுத்திவிடப் போவ தாக இவர்களின் தலைவர் ஒருவரே சொல்லியிருக்கிருர்.

இவைகளைத் தவிரக் கீழ்ப் பர்மா வில் அரக்கான் பகுதியில் மூன்று வகையான கலகக்காரக் கூட்டங் கள் சர்க்காருக்குத் தொல்லை கொடுத்து வருகின்றன. (1) முன்னே பௌத்த பிட்சு வாக இருந்த ஊ ஸீடா என்பவரும் அவருடைய சகாக்களும்; (2) 'முஜ ஹீத்' என்ற முஸ்லிம் கலகக்காரர் கள்; (3) பர்மியப் படையிலிருந்து ஓடிவந்து கலகம் செய்யும் ஒரு கூட் டத்தார். இவர்களில் 'முஜஹீத்' என்பவர்கள் கிழக்குப் பாகி ஸ்தானேடு சேர்ந்து விடவேண்டு மென்று கிளர்ச்சி செய்து வருகிருர் கள்; இவர்களிடத்தில் துப்பாக்கி முதலிய புதிய ஆயுதங்களும், வெடி மருந்தும் ஏராளமாக இருக்கின்றன. வேண்டுமென்றே இவர்களைப் பிறர் தூண்டிக் கிளப்பி விடுகிருர்கள் என்று பர்மியர் சொல்கிருர்கள்; இதற்குக் காரணம், கிழக்குப் பாகி ஸ்தானிலிருந்து ஏராளமான பேர் இங்கே நுழைந்து பிரசாரம் செய் வதுதான்.

பர்மிய கூர்க்காக்களும், கச்சின், ஷான், சின் போன்ற ஜாதியாரும்

பர்மா யூனியனிடம் விசுவாசமாக இருக்கிறார்கள். படையில் இருந்து கலகக்காரரோடு போரிட்டு வருகிறார்கள். ஆனாலும், அதற்கேற்றபடி சர்க்கார் சலுகை காட்டி அவர்களைப் பாராட்டவில்லை.

இப்போது தக்கின் நூ சர்க்கார் கொஞ்சங் கொஞ்சமாக வலுவடைந்து வருகிறது என்று தெரிகிறது. அப்படி இருந்தாலும் இன்னுங்கூடத் தொல்லை அடியோடு தீர்ந்தது என்று சொல்வதற்கில்லை. பர்மியப் போலீஸின் அதிகாரம் பர்மாவில் ஒரு பாதிப் பாகத்தில்தான் செல்லும். வடக்கே மாண்டலே பிரதேசத்திலும், மேற்கே சிண்ட்வின் பள்ளத்தாக்கிலும், தென்மேற்கே அரக்கானிலும், மௌல்மீனுக்குக் கிழக்கே பர்மா - தாய்லந்து எல்லையிலும் தென் கிழக்கே டாராய் மெர்க்கு பகுதியிலும் இன்னுங் கூடக் கலகக்காரர்கள் அங்கங்கே தொல்லை கொடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள். ரெயிலிலும் ஆற்றிலும் பிரயாணம் செய்யும்போது கூட அடிக்கடி கலகக்காரர்கள் கொள்ளையடித்து வருகிறார்கள் என்றால் சாதாரணப் போக்கு வரத்து ரஸ்தாக்களைப்பற்றிக் கேட்பானேன்? அதோடு மா - த்ஸே - துங்கும் அவருடைய தோழர்களும் சீனாவில் நடத்திவரும் புரட்சி, உள்நாட்டு வாழ்க்கைத்தரம் நாளுக்கு நாள் சீரழிந்து வருவது இரண்டும் காரணமாக பர்மாவில் கம்யூனிஸம் செழித்து வளரும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதிரி குழப்பம் நேராமல் பர்மா நீடித்து ஜனநாயக நாடாக இருக்கவேண்டுமானால் பொது ஜனங்களுக்கு வேண்டிய வாழ்க்கை வசதிகளையெல்லாம் அளித்து அவர்களைத் திருப்தி செய்ய வேண்டியது அவசியமாகும்.

## 'இனிமேல்...ஜாக்கிரதை'

ஓர் ஆசாமி கடனிலேயே மூழ்கிக் கிடந்தான். கடன் கொடுத்தவர்களில் ஒருவர், அவனுக்குப் பல முறை எழுதியும் கொடுத்ததை அவன் திருப்பாதிருக்கவே, அதை விரைவில் தீர்க்கவேண்டும் என்று கண்டிப்பாக ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

அதற்கு அவனிடமிருந்து வந்த பதில் இதுதான்:

"அன்புள்ள ஐயா, தங்கள் மிரட்டல் கடிதம் கிடைத்தது. எத்தனையோ பேருக்கு நான் பாக்கி தரவேண்டியிருக்கிறது. அவர்களில் நீங்கள் ஒருவர். சம்பள தினத்தன்று நான் எல்லாருடைய பெயரையும் சீட்டில் எழுதி என் தொப்பியில் போட்டுக் குலுக்கி ஒன்றைப் பொறுக்கி எடுப்பது வழக்கம். யாருக்கு அதிருஷ்டமோ அவர்களுக்கு அந்தப் பாக்கியைத் தீர்த்து விடுவேன். இதோ சொல்லிவிட்டேன்: இனிமேல் இந்த மாதிரி கடிதமெல்லாம் அனுப்பினீர்களோ, பேசாமல் உங்கள் பெயரைச் சீட்டிலேயே சேர்க்காமல் இருந்து விடுவேன், ஜாக்கிரதை!"

—'தி கிரேப் வைன்'

# தென் இந்திய பஸ்கள்

ஒரு விசேஷ நிருபர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பஸ்களையெல்லாம் உடனே சர்க்கார் எடுத்து நடத்தக் கூடாது என்பது இவர் கட்சி. அது சரியோ, தவறோ எப்படியானாலும் சரி; நமது பஸ் போக்குவரத்து வரலாறு பற்றிய ரசமான விவரங்களை இங்கே தந்திருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சென்ற வருஷம் ஜனவரிமாதம் உலகத்தின் 153 நாடுகளிலும் எவ்வளவு மோட்டார்கள் இருக்கின்றன என்று கணக்கெடுத்தார்கள். மொத்தம் 6 கோடியே 46 லட்சம் இருப்பதாகத் தெரிந்தது. இவற்றில் மோட்டார் டிரக்குகள் 160 லட்சம்; கார்கள் 4 கோடியே 80 லட்சம்; பஸ்கள் 6 லட்சம். இந்தியாவில் மட்டும் பொதுஜன உபயோகத்துக்கு என்று மொத்தம் 3 லட்சம் மோட்டார்கள் - 80,000 ட்ரக்கு, 40,000 பஸ், 1,80,000 கார்கள்-இருக்கின்றன.

இவற்றில் 25 சதவிகிதம் தென் இந்தியாவில்தான் இருக்கின்றன. மற்றப் பகுதிகளைவிட இங்கே 10 சதவிகிதம் பெட்ரோல் அதிகமாகவே செலவாகிறது.

டி. வி. சுந்தரம் ஐயங்கார் அண்டு சன்ஸ் என்ற ஸ்தாபனத்துக்குக் கிட்டத்தட்ட 350 யூனிட் மோட்டார்கள் இருக்கின்றன.

வெகு காலமாகவே நம் நாடு முழுவதும் பல பாதைகள் குறுக்கும் நெடுக்குமாக இருந்துவந்தன. டெல்ஹௌஸி கவர்னர் ஜெனரலாக இருந்த காலத்தில் (1844) இந்தியாவில் ரெயில் போக்குவரத்து ஏற்பட்டது. இதனால் தென் இந்தியாவில் கால்வாய்ப் போக்குவரத்துப் பாதகமடைந்தது. அந்நிய சர்க்காரின் ஆதரவில் ரெயில்வேக்குத் தனிச் சலுகை கிடைத்து வந்ததே இதற்குக் காரணம். மற்றப் போக்குவரத்துச் சாதனங்கள் முன்னேறுதபடி பல விதமான தடைகள், சட்டங்கள், வரிகள் ஆகிய எல்லாம் அப்போது இருந்து வந்தன. ஆனாலும் இந்த இடைஞ்சல்களையெல்லாம் சமாளித்துக்கொண்டு பாதைப் போக்குவரத்து அபிவிருத்தி அடைந்துதான் வந்திருக்கிறது.

பொதுவாகச் சென்னை மாகாணத்தில்தான் போக்குவரத்து அதிகமாக நடைபெற்று வருகிறது. இப்படிப் போக்குவரத்தில் முதல் முதல் ஈடுபட்டவர்களில் டி. வி. எஸ். (மதுரை-1908), ஜி. டி. நாயுடு (கோவை-1930), எஸ். அனந்தராமகிருஷ்ணன் (சென்னை-1938) ஆகியோர் முக்கியமானவர்கள். இன்னும் ஐ. ஆர். டி. டி. ஏ., அலெட் மர்ச்செண்ட்ஸ் அசோசியேஷன், மதராஸ் மோட்டார் வெஹிகிள்ஸ்

காப்பிரைட்: ப்ரீ இந்தியா (ஆங்கிலம்: 29-7-'51), சென்னை.

போன்ற ஸ்தாபனங்களும் பாதைப் போக்கு வரத்து அபிவிருத்தியில் அதிகமாக ஈடுபட்டு வருகின்றன.

மோட்டார் வண்டிகளையும் வேலை செய்யும் ஆட்களையும் சரியானபடி கவனிக்க வேண்டியது இந்த மாதிரி தொழிலுக்கு அவசியம். அப்போது குறித்த சமயத்தில் பஸ் வசதி உண்டு என்று பிரயாணிகளுக்கும் ஒரு திருப்தி ஏற்படும். ஆட்களுக்கு நல்ல சம்பளம் முதலிய வசதிகள் இருக்க வேண்டும்; அதற்கு ஏற்றபடி ஆட்களும் நேர்மையாக அமையவேண்டும். இவற்றையெல்லாம் டி. வி. எஸ். காரர்கள் செய்து தந்திருக்கிறார்கள். திறமையாகத் தொழில் செய்பவர்களுக்கும் தொழிலில் அதிக வரும்படி காட்டும் ஊழியர்களுக்கும் விசேஷ 'போனஸ்' அளிக்கிறார்கள்.

டி. வி. எஸ். காரர்களும் ஸ்ரீ ராமவிலாஸ் பஸ் ஸர்விஸ்காரர்களும் இந்தத் துறையில் அதிகமாக உழைத்து மாகாணமெங்கும் பாதைப் போக்குவரத்தைத் திறம்பட நடத்துகிறார்கள். டி. வி. எஸ். காரர்கள் பஸ் பிரயாணிகளுக்குச் சில விசேஷ வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

சர்க்காரின் போக்குவரத்து இலாகா பஸ்களையும் ஆட்களையும் பராமரிப்பதோடு மக்களின் தேவைகளையும் அறிந்து அதற்கேற்றபடி அலுவல் புரிந்து வருகிறது. பஸ்கள் புறப்படும் நேரம், செல்லும் மார்க்கம் முதலிய முக்கியமான விஷயங்களில் கவனம் செலுத்துகிறது. 1939-ஆம் வருஷத்து மோட்டார் வாகன விதிகளை அமல் நடத்திவருகிறது. இதன்படி அளவுக்கு மேல் பிரயாணிகளைப் பஸ்ஸில் ஏற்றும் வழக்கம் நின்றது. நடுவழியில் சிக்கிய இரண்டொரு பிரயாணிகளுக்கு இதனால் திண்டாட்டம் ஏற்படலாம். மொத்தத்தில் அதையெல்லாம் பார்த்தால் முடியுமா? இப்பொழுது சாதாரணமாக ஒவ்வொரு பஸ்ஸும் தினம் 140 மைல்வரை ஓடுவதற்குச் சென்னைச் சர்க்கார் வசதி அளித்திருக்கிறார்கள். மைலுக்கு 7 தம்பிடி வீதம் பஸ் கட்டணம் வசூலிக்கிறார்கள். 25-இலிருந்து 30 பேர் வரை உட்காரக் கூடிய ஒரு பஸ்ஸிலிருந்து தினமும் 1 மைலுக்கு 13-இலிருந்து 20 அணா வரை கிடைக்கிறது. விதவிதமான வரிகளும் செலவுகளும் போக, பஸ் நடத்தும் ஸ்தாபனங்களுக்கு 5 சதவிகிதம் லாபம் கிடைக்கிறது. இந்த மாதிரி வரும்படி அதிக பஸ்களைத் திட்டமிட்டு நிர்வகித்து நடத்தும் ஸ்தாபனங்களுக்குத்தான் கிடைக்குமே ஒழிய இரண்டு மூன்று பஸ்களை மட்டுமே வைத்து நடத்துபவர்களுக்குக் கிடைக்காது.

வருஷந்தோறும் பஸ்களின் தேய்ந்த பாகங்களுக்குப் புது உறுப்புகள் போட வேண்டியிருக்கும்; சம்பளம், கூலி முதலிய செலவுகளும் இருக்கும். அப்படிச் சாதாரணமாக ஒரு பஸ்ஸுக்கு வருஷத்துக்கு ரூ. 6,000 செலவாகும். மோசமான பாட்டைகளில் போவதால் மோட்டார் உறுப்புக்களும் டயர்களும் தேய்ந்து விடுகின்றன. இருந்தாலும் டாகோமீட்டர் என்ற ஒரு கருவியின் மூலம் சோதித்ததில் வேகமாக ஓட்டிச் செல்வதாலேயே பஸ்களின் ஸ்பிரிங் முதலியவை கெடுகின்றன என்று தெரிய வந்தது. சாதாரண வேகத்தில் செல்லும் கார்களில் பெட்ரோல் அதிகமாகச் செலவழிவதில்லை; டயர்களும் யந்திரங்களும் விரைவில் கெடுவதில்லை. பிரயாணி

களும் முதுகு இடிபடாமல் சௌகரியமாகப் பிரயாணம் செய்யலாம்.

இன்றைய குழப்பமான நிலையில் பாட்டைப் போக்குவரத்துப்பற்றி இன்னும் தெளிவாக எதையும் சொல்வதற்கில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகச் சொல்லலாம்: $1\frac{1}{2}$ லட்சம் சதுர மைல் விஸ்தீரணம் கொண்ட சென்னை மாகாணத்துக்கு 6,000 மைல் நீளமுள்ள ரெயில் பாதையும், 40,000 மைல் நீளமுள்ள வெறும் பாட்டையும் போதுமா? 2,000 பேருக்கு மேல் வாழும் ஒவ்வொரு கிராமத்தோடும் இணையும்படி பாட்டைகள் புதிதாக அமைக்க வேண்டும். அப்பொழுது தான் அதிக பஸ்ஸும் லாரியும் ஓட வசதி ஏற்படும். இடநெருக்கமும் குறைந்து மக்களுக்குச் சௌகரியம் ஏற்படும். எல்லாக் கிராமங்களுக்கும் பெருவாரியில் பஸ், லாரிப் போக்குவரத்து ஏற்பட்டால், ஒரு மார்க்கத்தில் கிட்டும் லாபத்தை இன்னொன் றில் ஆகும் நஷ்டத்துக்கு ஈடுகட்டிக் கொள்ளலாம். பெருவாரியில் இந்தத் தொழிலை நடத்துவதற்குச் சரிவரக் கணக்குப்புத்தகம், கண்காணிப்பு எல்லாம் வேண்டியிருக்கும். இதில் அளவுக்கு மீறி லாபம் கிடைக்கிறது என்று தெரிந்தால், அந்தக் கணக்குகளைப் பார்த்து வருமான வரி இலாகா தானே அதைக் கறந்துவிடுகிறது! ஆகவே, அதுபற்றி யாரும் கவலைப்படவேண்டியதில்லை.

டி. வி. எஸ்., ராமவிலாஸ் சர்விஸ் முதலிய ஸ்தாபனங்கள் கட்டுத்திட்டத்துக்கு அடங்கி ஒழுங்காக நாட்டுக்குச் சேவை புரிந்து வருகின்றன. இவை போன்ற ஸ்தாபனங்களை இன்று அடியோடு ஒழிக்கப் பார்க்கிறார்களே! இது பொன் முட்டை இட்ட வாத்தைக் கொன்ற கதையாகத்தான் முடியும். ஆகவே, எதையும் ஆய்ந்தோய்ந்து பார்த்துச் செய்வது அவசியம்.

## தோழரின் ஆர்வம்

கம்யூனிஸ்ட் கொள்கையில் பற்றில்லாத பழம் பசலி ஒருவரை எப்படியாவது அந்தக் கட்சியில் சேர வைத்து விட வேண்டுமென்று பார்த்தார் ஒரு கம்யூனிஸ்ட் தோழர். முதலில், "ஆகா! ருஷியாவைச் சொர்க்கம் என்றுதான் சொல்ல வேண்டும். விவசாயம் என்றால் அங்கேதான் பார்க்க வேண்டும். ஒரு வருஷத்துக்குக் கோதுமை நாலு போகம் விளைகிறது, ஐயா!" என்று பேச்சை எடுத்தார்.

இதைக் கேட்ட பழம் பசலி, "அது நடக்காத காரியம்" என்றார்.

உடனே தோழர் மிகவும் ஆர்வத்தோடு, "ஏன் நடக்காது? ஒரு போகம் ருஷியாவிலும், ஒரு போகம் போலந்திலும், ஒன்று செக்கோஸ்லோவேகியாவிலும், இன்னொன்று ஹங்கேரியிலும் விளைகிறதென்றால் பாருங்களேன்" என்று பதில் அளித்தார்!

—'நோவ் டேடீஸ்', மெக்ஸிகோ.

# உலகத்தில் பெரியவர் யார்?

**வில்லியம் டி. பாட்டர்ஸன்**

**இந்தக் கேள்விக்குப் பதில் கேட்டுத் தன் வாசகர்களிடம் வோட் எடுத்தது, இந்த அமெரிக்கப் பத்திரிகை. இதுபற்றிய விவரம் பத்திரிகைகளில் ஏற்கனவே செய்திச் சுருக்கமாக வெளி வந்திருக்கிறது. இப்போது அதிக விவரம் கிடைத்திருக்கிறது.**

அமைதி இல்லை. எங்கும் நெருக்கடி. இருபதாம் நூற்றாண்டின் பின் பாதி, தன் போக்கில் போய்க்கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடியான காலத்தில் ஒரு பெரிய யுக புருஷன் தேவை.

'ஸாட்டர்டே ரெவ்யூ ஆப் லிட்டரேச்சர்' பத்திரிகை இந்தக் காலத்தில் வாழும் பெரியவர்கள் யார் யார் என்பதைத் தன் வாசகர்களைக் கொண்டு அறிய முயன்றது.

உலகத்திலுள்ள அரசியல் தலைவர்கள் அனைவரிலும் சிறந்தவராக இன்று வாழ்பவர் வின்ஸ்டன் சர்ச்சில் என்று அதன் வாசகர்கள் முடிவு கட்டினார்கள்.

கொலம்பியா சர்வகலாசாலையின் தலைவரும் மேற்கு ஐரோப்பிய ஐக்கியப் படைக்குத் தலைவருமான ஜெனரல் ஐஸன்ஹவர் என்பவர், அமெரிக்காவில் இன்று வாழ்பவர்களுக்குள்ளே பெரியவர் என்று அவர்கள் மதித்தார்கள். ஐஸன்ஹவர் மேற்கு ஐரோப்பாவின் படைத் தலைவர் ஆவதற்கு முன்பே நடந்த இந்த ஆராய்ச்சியில் அரசியலைச் சார்ந்தவர், அரசியலைச் சாராதவர் என்ற இருவகையில் இந்தப் பெருமைக்கு மதிப்புப் போட்டார்கள். இதில் கண்ட வேறு முடிவுகள் வருமாறு:

உலகத்துத் தலைவர்களில் சர்ச்சிலுக்கு அடுத்த ஸ்தானம், இன்று ஆசியாவிலேயே முதல் மனிதராகவும், சுதந்தர இந்தியாவின் பிரதமராகவும் விளங்கும் ஜவாஹர்லால் நேருவுக்குக் கிடைத்தது.

அமெரிக்கப் பிரமுகர்களில் ஐஸன்ஹவருக்குப் பின் உள்ளவர் ஜாபிதாவில் எல்டர் ஸ்டேட்ஸ்மன் பரூச், 2 - ஆம் யுத்தப் பாதுகாப்பு இலாகா காரியதரிசி ஜெனரல் ஜார்ஜ் மார்ஷல் ஆகியோர் உள்ளனர்.

அரசியலைச் சாராத பொது உலகவியலில் மன வளர்ச்சியும், ஆத்ம வளர்ச்சியும் உள்ள இருவர் உலகில் சிறந்தவராக மதிக்கப் பெற்றார்கள். திறமை வாய்ந்த டாக்டரும் தத்துவதரிசியும் இசைவல்லுநருமான ஆல்பர்ட் ஸ்குவீட்ஸர் என்பவருக்கு முதல் வோட்டுக் கிடைத்தது. இவர் ஆப்பிரிக்கச் சுதேசிகளுக்குத் தொண்டு செய்து தமது வாழ்வில் பெரும்பகுதியைக் கழித்திருக்கிறார்.

ஆல்பர்ட் ஸ்குவீட்ஸருக்கு அடுத்தபடி பெருமை பெற்றவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். விஞ்ஞான முன்னேற்

மூலம்: ஸாட்டர்டே ரெவ்யூ அவ் லிட்டரேச்சர் (ஆங்கிலம்; 6-1-'51), நியூ யார்க்.

றத்துக்கு ஓயாத உதவி செய்தவரும் 'ரிலேடிவிடி' என்ற சித்தாந்தத்தைக் கண்டுபிடித்தவருமான இவர், அரசியல் சார்பற்ற அமெரிக்கர்களிடையே வாழும் பெரியவர் என்ற புகழைப் பெற்ருர்.

உலக அரங்கில் அரசியல் சார்பற்ற தலைவர்களுக்குள்ளே இருவர் இடம் பெற்ருர்கள்; இலக்கியத்துக்காகச் சமீபத்தில் நோபெல் பரிசு பெற்றவரும், தத்துவத்திலும் கணிதத்திலும் நிபுணருமாகிய பெர்ட்ரண்டு ரஸ்ஸல் ஒருவர். மற்ருெருவர், அரபி-இஸ்ரேல் உடன்படிக்கைக்காகப் பாடுபட்டு 1950-இல் சமாதான நோபெல் பரிசு பெற்ற ரால்ப் பஞ்ச் என்பவர். இவர் ஹார்வர்டு சர்வகலாசாலையில் பேராசிரியராகத் திகழ்கிருர். சர்ச்சிலையும் நேருவையும் தவிர, சர்வதேச அரசியல் தலைவர்களுக்குள்ளே, ஐ. நா.வைச் சார்ந்த டிரிக்வி லீயும் கம்யூனிஸ்ட் ருஷியாவின் தலைவரான ஸ்டாலினும் இடம் பெற்றிருக்கிருர்கள்.

இந்தப் பிரிவுக்குள் ஸ்டாலினையும் சேர்த்துக்கொண்ட வாசகர்கள், 'இன்று உலகத்திலேயே நன்மையையோ தீமையையோ விளக்கும் மகத்தான சக்தி' என்ற காரணத்தினலோ, அல்லது 'சர்வதேசிய விளைவுகளை மாற்றக்கூடிய மகா புருஷன்' என்ற காரணத்தினலோ, அவருக்குப் பெருமை தந்தார்கள். ருஷியாவில் நடக்கும் தேர்தல்களில் அவர் போட்டியின்றி வெற்றி பெறுவதனுலே உண்டான மனப்பான்மையின் விளைவுதான் இது. நியூ யார்க்கில் பிரசித்த விளம்பர அதிகாரியான சாமுவெல் யங்ஹார்ட் என்பவர், இந்த முடிவை மிகவும் வருத்தத்தோடு ஏற்றுக்கொண்டிருக்கிருர்.

மனிதன் எதனல் பெரியவனுகிருன் என்பதுபற்றி வாசகர்கள் தம் சொந்தமான அடிப்படைக் கருத்தை வைத்துக்கொள்ளும் உரிமை உள்ளவர்கள்.

'நியூ யார்க் டைம்ஸ்' என்ற பத்திரிகையின், வாஷிங்டன் நிலையத் தலைவரான ஆர்த்தர் க்ரோக் என்பவர் தமது கருத்தை உணர்ச்சியோடு தெரிவித்திருக்கிருர்: "மனிதனுக்கு உரிய மேன்மையான பண்புகளும், நேரிடையாகவோ மறைமுகமாகவோ நாட்டுக்கு நலம் தரும் ஆற்றலும் வாய்ந்த புகழாளனே என்மட்டும் பெரியவன்" என்று அவர் எழுதினர்.

வாசகர்களின் கருத்தை ஆராய்ந்தபொழுது, உன்னதமான ஆத்ம சக்தியும், பேராற்றலும் உடையவர்களுக்கே அவர்கள் பெருமை தந்திருக்கிருர்கள் என்பது தெரிந்தது. இரண்டொருவர் இந்தப் பண்புகளுக்கு உயர்வு தரவில்லை.

ஐக்கிய அமெரிக்காவில் ஒப்பற்ற அரசியல் தலைவர்களிலே, எற்கனவே, முன்பு வந்தவர்கள் தவிர ஸ்ரீமதி எலீனர் ரூஸ்வெல்ட், ஹெர்பெர்ட் ஹூவர், ஜெனரல் மக் ஆர்த்தர், ராபர்ட் டாப்ட் ஆகியவர்களும் இருக்கிருர்கள்.

அரசியல் சார்பற்ற அமெரிக்கப் பெரியார்களில் ஐன்ஸ்டீனையும் பஞ்சையும் தவிர, கொலம்பியா சர்வகலாசாலையில் புகழ் பெற்ற ஆசிரியரும் தத்துவப் புலவருமான ஜான் டேயியும் ராபர்ட் பிராஸ்ட் என்ற கவியும் நிறைய வோட் பெற்றுள்ளனர்.

அமெரிக்காவிலும் சரி, உலகத்திலும் சரி, இன்று உயிரோடு வாழும் பெண்மணிகளுக்குள் ஸ்ரீமதி எலீனர் ரூஸ்வெல்ட் தலைமை

தாங்குகிறார். அவரைக் குறித்து ஒரு வாசகர், "உலகத்து மக்களிடையே நல்லெண்ணத்தைப் பரப்ப ஓயாது உழைப்பதனால் ஸ்ரீமதி ரூஸ்வெல்ட்டை நான் தேர்ந்தெடுக்கிறேன்" என்று எழுதுகிறார்.

உலகப் பெண்மணிகளின் தலைவியாக அடுத்த ஸ்தானத்தில் வருகிறவர் அமெரிக்காவில் நம் தூதரும் நேருவின் சகோதரியுமான ஸ்ரீமதி பண்டிட். யாரையுமே குறிப்பிடாமல் பொதுப்படையாக 'அன்னை'யே உலகத்தின் சிறந்த பெண்மணி என்று பலர் வோட்டளித்திருக்கிறார்கள்.

உலகத்தில் இன்னார் பெரியவர் என்று தீர்மானிக்கும் உரிமை நமக்கென்ன இருக்கிறது என்ற அடக்க மனப்பான்மை சில வாசகர்களுக்கு இருந்தது.

இந்த மனப்பான்மையைத்தான் எல்மர் டேவிஸ் என்ற ரேடியோ விமர்சகர், இப்படித் தெளிவாகக் கூறினார்:

"டைபீரியஸ் மன்னனின் ஆட்சியில் நாஸரெத்திலிருந்த ஒரு தச்சன் உலகத்திலேயே மிகப் பெரிய மனிதன் ஆவான் என்று யாராவது ஜோஸியம் சொல்லியிருக்க முடியுமா? தன் வேலையை ஒழுங்காகச் செய்து, வரிகளை ஒழுங்காகச் செலுத்தி, உடன் வாழ்பவர்களுக்குத் துன்பம் விளைக்காமல், உலகில் உண்மைகளை நாணயமாகப் பாடுபட்டுக் கண்டுபிடித்து, கடந்த உலகப்போரிலே சில வருஷ காலம் வேலை செய்திருந்தும் மறுபடி தான் தேவை என்று அழைப்பு வந்தால் பணி புரியத் தயாராக நிற்கும் ஒரு சாதாரண மனிதனே இன்று உலகத்தில் மிகப் பெரிய மனிதனாக இருக்கலாம்."

## லட்சியம் என்ன?

பைரஸ் என்ற கிரேக்க மன்னன் ஒரு சமயம் இத்தாலி மீது படையெடுக்க ஆயத்தமானான். அப்பொழுது சினியாஸ் என்ற ஞானி அங்கே வந்தார்; மன்னனின் பிரயாணத்தைப் பற்றி விசாரித்தார்.

"ரோமாபுரியை ஜயிப்பதுதான் என் முதல் வேலை" என்றான் மன்னன்.

"அப்புறம்?" என்றார் ஞானி.

"அடுத்தது இத்தாலி முழுதும்" என்றான் மன்னன்.

"அப்புறம்?" என்று தொடர்ந்து கேட்டார் ஞானி.

"இத்தாலியை வென்றதும் கார்த்தேஜ், மாஸிடோனியா, ஆப்பிரிக்கா ஆகிய தேசங்களின்மேல் படையெடுப்பேன்."

"சரி; எல்லா நாடுகளையும் ஜயித்த பிறகு என்ன செய்யப் போகிறாய்?"

"மீதியுள்ள காலத்தை அமைதியாகவும் இன்பமாகவும் கழிப்பேன்."

"அரசே, கடைசியில் செய்யப்போகும் அந்தக் காரியத்தை இப்போதே ஏன் செய்யக் கூடாது?" என்றார் ஞானி சினியாஸ்.

மன்னனால் இதற்குப் பதில் தர முடியவில்லை. அவன் வாயடைத்து நின்றான்.

—'பக் பிட்ஸ்'

வழி வழி வந்த வசனநடை: 20

# அன்புடைமை

★

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் சைவத்துக்கும் தமிழுக்கும் ஒரு புத்துணர்ச்சியை எழுப்பியவர் ஸ்ரீ ஆறுமுக நாவலர். பழைய நூல்களைப் பதிப்பித்தும், உரை எழுதியும் உபந்நியாசம் புரிந்தும், பாடம் சொல்லியும் அவர் செய்த தொண்டுகள் பல. அவருடைய வசனநடை பரிமேலழகர் உரை நடைபோலக் காரண காரியத் தொடர்பும், தெளிவும், எடுப்பு தொடுப்பு முடிவு என்ற அமைப்பும் உடையதாகிச் செறிவோடு விளங்கும். வடசொற்கள் விரவியிருக்கும். கண்டனம் செய்யப் புகுந்தால் ஆணித்தரமான நியாயங்களை எடுத்துக் காட்டிப் படிப்போரைத் தம்முடைய முடிவிலே ஈடுபடும்படி செய்யும் பேராற்றல் உடையவர். தமிழ் வசனநடையின் சரித்திரத்தில் அவருக்குத் தனியிடம் உண்டு.

பின் வருவது, பெரிய புராணத்திலே, கண்ணப்ப நாயனார் புராணத்துக்கு அவர் எழுதிய சூசனத்தின் ஆரம்பப் பகுதி. இதில் இறைவனிடம் அன்பு செய்யவேண்டியது அவசியம் என்பதைக் காரணத்தோடு நிறுவுகிறார்.

**ஆறுமுக நாவலர்** (பெரிய புராணச் சூசனம்) எமக்கு இனியரென்று எம்மாலே தெளியப்பட்டவர் யாவரோ அவரிடத்தே எமக்கு விருப்பம் நிகழும். எமக்கு யாவரிடத்து விருப்பம் நிகழுமோ அவரிடத்தே எமக்கு அன்பு நிகழும். அன்பாவது, தன்னால் விரும்பப்பட்டவரிடத்தே தோன்றும் உள்ள நிகழ்ச்சி. ஆதலால், நாம் நமக்கு இனியவர் யாவரென்று ஆராய்ந்து, நிச்சயிப்பேம். தந்தை தாய் மனைவி மைந்தர் முதலிய உறவினரே எமக்கு இனியரெனக் கொள்வமெனின், இவருக்கும் எமக்கும் உளதாகிய தொடர்ச்சி நீர்க்குமிழி போல நிலையில்லாததாகிய இவ்வுடம்பினால் ஆயதாதலானும், இவ்வுடம்பு ஒழியவே இதனாலாகிய தொடர்ச்சியும் ஒழிதலானும், உடம்பினாலே தொடர்ச்சி உள்ள போதும் நாம் தீவினைப் பயனை அனுபவிக்கும் வழி இவ்வுறவினரே பகைவராகவும், நல்வினைப் பயனை அனுபவிக்கும் வழி இவரல்லாத

பகைவரும் உறவராகவும், காண்டலானும், இவர் உறவராய் நின்ற வழியும், எமக்கு இதம் செய்தல் தம் பயன் கருதியன்றி எம் பயன் கருதி யன்மையானும், இவர் எமக்கு இனியரென்று கொள்ளுதல் ஒருவாற்றானும் கூடாது. நாமோ நம்மை ஒருகாலும் பகைத்தல் இன்மையானும், எந்நாளும் துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தை அனுபவித்தல் வேண்டுமென்னும் கருத்தே நமக்கு உண்மையானும், நமக்கு நாமே இனியமெனக் கொள்வமெனின், கேவலாவத்தையிலே ஆணவமல மறைப்பினாலே அறிவும் தொழிலும் சிறிதும் விளங்காமையானும், சகலாவத்தையிலே அறிவும் தொழிலும் உள் வழியும், அவை சிற்றறிவும் சிறு தொழிலுமன்றி முற்றறிவும் முற்றுத் தொழிலும் அன்மையானும், அதனால் எமக்கு இன்பம் இது, துன்பம் இது, துன்பத்தினின்றும் இன்பம் பெறும் நெறி இது என உள்ளபடி அறிந்து துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தைப் பெறுதல் கூடாமையானும், எமக்கு நாமே இனியமெனக் கொள்ளுதலும் கூடாது. முற்றறிவு முற்றுத் தொழில் உடையவராகி, தம் பயன் குறியாது மலபெத்தராகிய ஆன்மாக்கள்மேல் வைத்த பெருங் கருணையினாலே, அவர்களுக்குத் தனுகரணங்களைக் கொடுத்து, ஆணவமலச் சத்தியைச் சிறிது நீக்கி, அறிவை விளக்கிப் போகங்களைப் புசிப்பித்து, மலபரிபாகமும் இருவினையொப்பும் சத்திநிபாதமும் வருவித்து, பாசநீக்கமும் சிவத்துவ விளக்கமும் செய்யும் பரமபதி ஒருவர் உண்மையானும், அவர் சிவனே ஆதலானும் அவரே எமக்கு இனியரெனக் கொள்ளல் வேண்டும். இக்கருத்து அனைத்தும் நோக்கியன்றே,

என்னில் யாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யானொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே

என்று திருவாய் மலர்ந்தருளினார் திருநாவுக்கரசு நாயனார் என்க. ஆதலால், அச் சிவனையே நாமெல்லாம் விரும்பி, அவரிடத்துஇடையறாதமெய்யன்பு செய்தல் வேண்டும்.

சிறு கதை:

# பாடம் கேட்ட கிளி



ரவீந்திரநாத் டாகுர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சிறுவர்களுக்காகப் பல அற்புதமான கதைகளை எழுதியிருக்கிருர் ரவீந்திரர். அவைகளில் கவிநயம் அமைந்தும் உருவகம் செறிந்தும் விளங்குபவை அநேகம். 'இயற்கையோடு ஒன்ருத கல்வியினுல் யாதொரு பயனுமில்லை' என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது இந்தக் கதை. ரவீந்திரர் பழமையிலும் புதுமையிலும் சிறந்தவற்றை விரும்பி ஏற்கும் சீரிய தன்மை படைத்தவர். அவர் சாந்திநிகேதன வித்தியாலயம் அமைத்ததே இந்த நோக்கங்களோடுதான். இதை வங்க மூலத்திலிருந்து விசேஷ அநுமதி பெற்று மொழி பெயர்த்துத் தந்திருக்கிருர் அன்பர் த. நா. ஸேஞபதி.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஒரே ஓர் ஊரில் ஒரு கிளி இருந்தது. அது சுத்த மக்கு. படிக்கவோ எழுதவோ அதற்குத் தெரியாது. அதன்பாட்டுக்குப் பழத்தைத் தின்றுகொண்டும் பாடிக்கொண்டும் தத்திக் குதித்துக் கொண்டும் திரிந்து வந்தது.

அந்த ஊர் ராஜாவுக்கு இது பிடிக்கவில்லை. அவன் தன் மந்திரிகளை அழைத்து, "இப்படி இருந்தால் சரிப்படாது. இருக்கிற பழத்தையெல்லாம் இதுவே தின்றுவிட்டால் அப்புறம் ஊரிலேயே பழம் கிடைக்காமல் திண்டாடவேண்டியதுதான். இதற்கு ஏதாவது வித்தை கற்றுக் கொடுத்து உருப்படியாக்குங்கள்" என்று உத்தரவிட்டான்.

* * *

ராஜாவின் மருமகன் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டான்.

சபா பண்டிதர்களெல்லாரும் கூடி, "இது என் இப்படி மக்காக இருக்கிறது?" என்றுஆலோசித்தார்கள். "சருகும் கூளமும் வைத்துத் தாஞகவே கூடுகட்டி வாழும் பறவைகளுக்கு எந்த வித்தையும் வராது. ஆகையால், நாமே விரைவில் ஒரு கூண்டு தயார் செய்யவேண்டும். அதில் இந்தக் கிளியைப் போட்டு அடைத்துக் கற்றுக்கொடுத்தால் தான் இதற்குப் புத்தி வரும்" என்று தீர்மானித்தார்கள்.

பிறகு அவர்கள் ஏராளமான தட்சிணை வாங்கிக்கொண்டு மிகவும் மகிழ்ச்சியோடு வீடு திரும்பினர்கள்.

அரண்மனைப் பொற்கொல்லன் பொன் கூண்டு ஒன்றைத் தயாரித்தான். அதில்தான் என்ன அற்புதமான வேலைப்பாடு! அதைக் காணப் பல நாடுகளிலிருந்தும் ஜனங்கள் வந்தார்கள். "பிரமாதமாக இருக்கிறதே! இதோடு கல்வியும் கற்றுவிட்டால் இன்னும் கேட்கவேண்டியதில்லை" என்றூர்கள் சிலர்.

"கல்வி கற்காவிட்டாலும் இதற்கு அடித்த அதிருஷ்டத்தைப் பார்! பொன் கூண்டு கிடைத்துவிட்டதே, ஐயா!" என்று சிலர் சொல்லிக்கொண்டார்கள்.

பொற்கொல்லனுக்கு நல்ல வெகுமானம் கிடைத்தது; அவன் மூட்டையைக் கட்டிக்கொண்டு மகிழ்ச்சியோடு வீடு திரும்பினுன்.

பண்டிதர்கள் கிளிக்குக் கல்வி போதிக்கலானுர்கள். முதலில் மூக்குப் பொடியை ஓர் உறிஞ்சு உறிஞ்சிவிட்டு, "புத்தகப் பிரதிகள் கொஞ்சமாக இருந்தால் போதாது. நிறைய வேண்டும்" என்றூர்கள்.

உடனே ராஜாவின் மருமகன் கையெழுத்துப் பிரதி செய்யும் பலரை அழைத்துப் புத்தகங்களை நகல் எடுக்கச் சொன்னுன்; அவர்களும் நகல் மேல் நகல் எடுத்து மலை மலையாக எழுதிக் குவித்துவிட்டார்கள். "சபாஷ்! சபாஷ்! இனிமேல் கிளியின் தலையைப் பிடிக்க முடியாது" என்று எல்லாரும் சொல்லிக்கொண்டார்கள்.

பிரதி செய்தவர்கள் நல்ல வெகுமானம் பெற்றுக்கொண்டு உடனே வண்டியைக் கட்டிக்கொண்டு வீடு நோக்கிக் கிளம்பினுர்கள். அப்புறம் வீட்டில் என் சச்சரவு ஏற்படுகிறது?

விலை மதிப்புள்ள கூண்டாயிற்றே; அதற்கேற்ற பந்தோபஸ்தெல்லாம் வேண்டாமா? அதைத் துடைத்து மெருகு போட்டுப் பத்திரமாகக் கவனித்து வந்தார்கள். இதைப் பார்த்த ஜனங்கள், "கிளி வரவரக் கல்வியில் தேர்ந்து வருகிறூற்போலத்தான் இருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டார்கள்.

எப்போதும் அதைச் சுற்றிக் கும்பல் கூடியிருந்தது. அதற்கு மேல் பாரா கொடுக்க ஏராளமான பேர்! இவர்கள் மாதந்தவருமல் பை பையாகச் சம்பளம் வாங்கி இரும்புப் பெட்டியில் நிரப்பி வந்தார்கள். இவர்களுடைய அம்மான் சேய், சிற்றப்பா மகன், அத்தான் எல்லாருங்கூட இப்போது மாடமாளிகை கட்டிக்கொண்டு திண்டு திவாசில் உல்லாசமாகப் பொழுது போக்கி வந்தார்கள் என்றுல் இவர்கள் வரும்படியைக் கேட்பானேன்?

* * *

ஆனுலும் இந்த உலகத்தில் எதற்கும் குற்றங் குறை காட்டுகிறவர்கள்தானே விசேஷம்? இந்த மாதிரி ஆசாமிகள், "அது சரி; கூண்டு நாளுக்கு நாள் நன்றூகத்தான் ஆகிக்கொண்டு வருகிறது. இருந்தாலும் கிளியைப்பற்றித்தான் ஒன்றும் தெரியவில்லை" என்று சொல்ல ஆரம்பித்தார்கள்.

இது எப்படியோ ராஜாவின் காதில் விழுந்தது. அவன் தன் மருமகனை அழைத்து, "இதென்ன, என்னவோ சொல்லிக்கொள்கிறூர்களே, வாஸ்தவமா?" என்று விசாரித்தான்.

மருமகன், "மகாராஜா, நீங்களே வேண்டுமானுல் பொற்கொல்லனையும் பண்டிதர்களையும் கையெழுத்துப் பிரதி செய்பவர்களையும் காவல்காரர்களையும் கூப்பிட்டுக் கேட்டுப் பாருங்கள்; உண்மை தெரிகிறது. சில காலிப்பயல்களுக்கு வேறு ஜோலி இல்லைபோல் இருக்கிறது;

அவர்கள் இப்படிச் சொல்லிக் கொண்டு திரிகிறார்கள்'' என்றான்.

இந்தப் பதில் ராஜாவுக்குத் திருப்தி அளித்தது. அவன் உடனே மருமகனின் கழுத்தில் பொன் கண்டி செய்து போட்டான்.

* * *

கிளிக்கு எவ்வளவு தூரம் சிட்சை சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள் என்று தானே நேரில் போய்ப் பார்க்க ஒரு நாள் ராஜா தன் பரிவார சகிதமாகப் புறப்பட்டான்.

கிளியை வைத்துப் போஷிக்கும் மண்டப வாசலில் சங்கு, மணி, மேளம், பேரிகை, குழல், மிருதங்கம் எல்லாம் தடபுடலாக முழங்கின. பண்டிதர்கள் உரத்த குரலில், குடுமி குலுங்க மந்திரம் ஓதினார்கள். ஊழியர்கள், உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் தம் தம் சுற்றத்தாரோடு கூடி ஜயகோஷம் செய்தார்கள்.

ராஜாவின் மருமகன், ''மகாராஜா, பார்த்தீர்களா? சிட்சை எப்படி?'' என்றான்.

ராஜா, ''கோஷம் பிரமாதமாக இருக்கிறதே!'' என்றான்.

''கோஷம் மட்டுமா? இதற்கெல்லாம் எவ்வளவு செலவாச்சு, தெரியுமா?'' என்று மருமகன் பெருமையோடு சொல்லிக்கொண்டான்.

ராஜா மண்டப வாசலைத் தாண்டி யானைமேல் ஏறப்போகும் சமயம் அங்கே ஒளிந்திருந்த குறை கூறும் ஆசாமிகள் சிலர், ''மகாராஜா, நீங்கள் கிளியையே பார்க்கவில்லையே'' என்றார்கள்.

ராஜாவுக்குத் திக் என்றது. ''ஆமாம். ஞாபகமே இல்லை. அதைப் பார்க்கவேயில்லையே!'' என்று மறுபடியும் மண்டபத்துக்குள் நுழைந்தான்.

பண்டிதர்களை நோக்கி, ''சரி; எவ்வளவு தூரம் கற்றுக்கொடுத்திருக்கிறீர்கள், பார்க்கிறேன்'' என்றான்.

அவர்கள் ராஜாவுக்கு அந்தப் புத்தகக் குவியலைக் காட்டினார்கள். அதன் மறைவில் கிளி இருப்பது தெரிந்தால்தானே? ராஜாவுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. 'கிளியைப் பார்க்காவிட்டாலும் பரவாயில்லை; அதற்கு வேண்டிய வசதியெல்லாம் செய்துதான் கொடுத்திருக்கிறார்கள்' என்று அவனுக்குத் திருப்தியாகிவிட்டது. கூண்டுக்குள் தண்ணீரோ ஒரு தானியமணியோ இருந்தால்தானே! புத்தகத்திலிருந்து ஏடு ஏடாகக் கிழித்துத் துண்டு துண்டாக்கிப் பேனா முனையால் கிளியின் வாய்க்குள் ஏற்றியிருந்தார்கள். அதன் பாட்டெல்லாம் அடங்கிவிட்டது. கத்தக்கூட அதற்குச் சக்தி இல்லை.

ராஜா மறுபடியும் யானைமேல் ஏறி அரண்மனையை நோக்கிப் புறப்பட்டான்; அரண்மனைக் கொத்தவாலைக் கூப்பிட்டு, ''குறை சொல்லித் திரியும் அந்தப் பயல்கள் எங்கே? அவர்களைச் சும்மா விடாதே'' என்று உத்தரவிட்டான்.

* * *

நாளுக்கு நாள் கிளி இளைத்துத் துரும்பாகி வந்தது. அதைப் பாதுகாத்து வந்தவர்கள், ''பரவாயில்லை, ரொம்பக் கஷ்டப்பட்டுச் சிட்சை கற்றுக்கொண்டுதான் வருகிறது'' என்று சொல்லிக்கொண்டார்கள். ஆனாலும் அது தன் சுபாவவசத்தால் தினந்தோறும் சூரியோதயமாகும்போது சிறகை அடித்துக் கொள்ளும். ஒருநாள் அது கூண்டின் கம்பி ஒன்றைக் கடித்து உடைக்கப் பார்த்தது. உடனே, அரண்

மனைக் கொத்தவால், "பார்த்தாயா, அதன் மடத்தனத்தை; இவ்வளவு கற்றும் அதற்குப் புத்தி வரவில்லையே!" என்றான்.

உடனே கன்னனை வரவழைத்தான். அவன் கிளிக்கு இரும்பு விலங்கு போட்டு நகர முடியாதபடி செய்து, அதன் சிறகையும் கத்தரித்துவிட்டான்.

அரசனின் சுற்றத்தார், "இந்தப் பறவைகளுக்குப் புத்திதான் இல்லை என்றாலும் நன்றி கூடவா இருக்கக்கூடாது? சேச்சே!" என்று சலித்துக்கொண்டார்கள்.

உடனே பண்டிதர்கள் பேனாவும் எழுத்தாணியும் கையுமாக வந்து இன்னும் சில ஏடுகளைத் துண்டு துண்டாக்கிக் கிளியின் வாய்க்குள் திணிக்க ஆரம்பித்தார்கள்.

கன்னனுக்கு ஏராளமான வெகுமானம் கிடைத்தது. அவன் மனைவியின் உடம்பெல்லாம் பொன் அணிகள் குலுங்கின. கொத்தவாலின் சாமர்த்தியத்தை மெச்சி ராஜா அவனுக்குப் பொன்னாலேயே தலைப்பாகை செய்து போட்டான்.

* * *

கடைசியில் கிளி இறந்துவிட்டது. எப்போது அது செத்தது என்றுகூட யாருக்கும் தெரியாது! குறை கூறித் திரிவோர், "ஐயோ! கிளி போய்விட்டதே!" என்று கூவினார்கள்.

அன்று ராஜா தன் மருமகனை அழைத்து, "கிளி எப்படி இருக்கிறது?" என்று விசாரித்தான்.

மருமகன், "மகாராஜா, அதை ஏன் கேட்கிறீர்கள்? அதற்குக் கற்பிக்கவேண்டிய சிட்சையெல்லாம் கற்பித்தாயிற்று" என்றான்.

"அது தத்திக் குதிக்கிறதா?"

"அட ராமா!"

"பறக்கிறதா?"

"ஊஹூம்."

"பாடுகிறதா?"

"ஊஹூம்."

"தானியம் போடும்போது கத்துகிறதா?"

"ஊஹூம்."

"அப்படியானால் அதை இங்கே கொண்டு வா, பார்க்கலாம்" என்று உத்தரவிட்டான் ராஜா.

கிளி வந்தது. அதோடு கொத்தவால் வந்தான்; அவன் பின்னால் காவல் படை, காலாட் படை, குதிரைப் படை ஒன்று பாக்கி இல்லாமல் எல்லாம் வந்தன. ராஜா கிளியை ஆட்டி அசைத்துப் பார்த்தான்.

அதன் வயிற்றுக்குள் அடைந்து கிடந்த காகிதக் கற்றைதான் அப்படியும் இப்படியும் அசையும் ஓசை கேட்டது. அது, 'ஆம் ஊம்' என்றுகூடக் கத்தாமல் அப்படியே விறைத்துக் கிடந்தது.

அந்த இளவேனிற்பொழுதில் வீசும் தென்றலில், இலைத் தளிர்கள் இதைக் கண்டு மெதுவாகப் பெருமூச்சு விடுவதுபோல் அசைந்தன. வானிலும் மலர் பூத்த கானகச் சோலை எங்கும் துன்பத்தின் சாயை படர்ந்தது!

**ஆழங் கண்ட விஞ்ஞானி**

சமீபத்தில் டாக்டர் ஓடிஸ் பார்டன் என்ற அறிஞர் பசிபிக் மகாசமுத்திரத்தில் நீர் மட்டத்துக்கு 4,500 அடி கீழே போய் வந்தார். இதுவரை யாருமே இவ்வளவு ஆழம் போனதில்லை.

—'ஸயின்ஸ் டைஜெஸ்ட்'

# உத்தமி

## தாமஸ் ஹார்டி

ஆங்கில நாவல்களுக்குள்ளே 'தெஸ்-அவ் தி டி' அர்பர்வில் - ஓர் உத்தமி' (*Tess of the D'Urbervilles - A pure woman*) என்ற இந்த நாவலை ஓர் அற்புதம் என்றே சொல்லவேண்டும். மகா சோகமான கதை இது; கவிதைச் சுவை நிரம்பியது. ஆங்கில பாஷையின் நிரந்தர இலக்கியங்களில் ஒன்ருகிவிட்ட இதன் மூலத்தின் அற்புத வர்ணனைகளையும் மனத்தை உருக்கும் நிகழ்ச்சிகளையும் முற்றும் ஒரு சுருக்கத்தில் தருவது சாத்தியமல்ல. ஆயினும் இந்தச சுருக்கத்திலுங்கூட, இந்தக் கதை எவர் மனமும் குழையச் செய்யக் கூடியது என்பதை நன்ருய்க் காணலாம்.

# உத்தமி

மே மாதத்தில் ஒரு நாள் மாலை நேரம். நடுத்தர வயது மனிதன் ஒருவன் மார்லாட் என்ற கிராமத்தை நோக்கிப் போய்க்கொண் டிருந்தான். அவன் கால்கள் முட்டி தட்டி யிருந்தன. சற்று இடது பக்கமாய்ச் சாய்ந்து கோணிக் கோணி அவன் நடந் தான். காவியான முட்டைக் கூடை ஒன்று அவன் தோளில் தொங்கியது. அவன் தொப்பி கிழிந்திருந்தது. அந்த நேரத்தில் உல்லாசமாய்ச் சிட்டி அடித்த வண்ணம் குதிரைமீது சவாரி செய்துகொண்டு வந்தார் வயது முதிர்ந்த ஒரு பாதிரி.

"வணக்கம்" என்றான் கூடைக் காரன்.

"வணக்கம், ஸர் ஜான்" என்றார் பாதிரி.

இரண்டடி நடந்த கூடைக் காரன் ஜாக் டர்பீபீல்டு, சற்றுத் தியங்கி நின்று திரும்பினான்.

"மன்னிக்க வேண்டும், பாதிரி யாரே. போன தடவை சந்தைக்கு வந்தபோதும் சரி, சுமார் ஒரு மாதத்துக்கு முன்பும் சரி, என்னை 'ஸர் ஜான்' என்றீர்கள். இன்றும் அப்படியே அழைக்கிறீர்கள். நானோ உள்ளூர்க் கூலிக்காரன். நீங்கள் என்னை 'ஸர்' என்று மரி யாதையாய் அழைப்பதற்கு என்ன காரணம்?" என்று கேட்டான்.

பாதிரியார் சிறிது கிட்ட வந்தார். "நான் புராதன சரித்திர விஷயங் களை ஆராய்ச்சி செய்துகொண் டிருப்பவன். இப்போது ஒரு புதிய ரகசியத்தைக் கண்டு பிடித்திருக் கிறேன். உம்முடைய பட்டப் பெயர் டர்பீபீல்டு. ஸர் பாகன் டி அர்பர்வில்ஸ் என்ற புராதன வீரரின் வம்சம் உம்முடையது என்று பழைய தஸ்தாவேஜி ஒன் றால் எனக்குத் தெரியவருகிறது. இதனால்தான் 'ஸர்' என்று உம்மை அழைத்தேன்" என்று சொல்லி நகர்ந்தார் பாதிரியார்.

கூடைக்காரனுக்குத் தலை கால் புரியவில்லை. வீட்டுக்குப் போன தும், தங்கள் குலப் பெருமையைப் பற்றி மனைவியிடம் எடுத்துச் சொன்னான். தான் ஒரு பிரபுவைப் போல் நடிக்கத் தொடங்கிவிட் டான். குடிப்பதில் அவன் மனம் சென்றதே ஒழிய வேலையில் கவன மில்லை.

இதற்கிடையில், கிராமத்து இளம் பெண்களெல்லாம் மைதா னத்துப் புல் தரையில் நாட்டிய மாடிக்கொண் டிருந்தார்கள். அங்கே ஜாக் டர்பீபீல்டின் மகள் தெஸ் என்ற கன்னியும் சென்றிருந் தாள். கூலிக்கார ஜாக்கின் மூத்த பெண் அவளே. அவள் நல்ல அழகி; சற்றும் சுயநலம் இல்லாத வள்.

நாட்டியம் நடக்கும்போது, நகரத்து வாலிபர் மூன்று பேர் அந்தப் பக்கம் வந்தார்கள். அவர் களில் ஒருவன் ஏஞ்சல் கிளேர் என்பவன். அவன் ஓர் உபதேசி யாரின் மகன். மாணவன். ஆண் கூட்டாளி இல்லாமல் இந்தப் பெண்கள் நாட்டியம் ஆடுவதைக் கண்டு, அவனுக்கு மனம் இரங் கியது. அவர்களுக்குக் கூட்டாளி யாகச் சேர மைதான கேட்டுக்குள் அவன் பிரவேசித்தான். மற்ற

இரண்டு பேரும், "இந்த நாட்டுப் புறக் குட்டிகளுடன் நாம் நாட்டிய மாடவாவது!" என்று ஆட்சேபித் தார்கள். "நீங்கள் போங்கள். நான் இரண்டே நிமிஷத்தில் வருகி றேன்" என்று சொல்லி, அவர்கள் இரண்டு பேரையும் அனுப்பிவிட்டு, ஏஞ்சல் கிளேர் அந்தப் பெண் களிடம் சென்றான்.

"ஏன் உங்களுக்கு ஆண் கூட்டா ளிகள் இல்லை?" என்று அவர் களைக் கேட்டான்.

துணிச்சல் உள்ள ஒருத்தி, "அவர்கள் இன்னும் வேலை விட்டு வரவில்லை. அவர்கள் வரும்வரை யில், நீங்கள் எங்கள் கூட்டாளியாக இருப்பீர்களா?" என்று கேட் டாள்.

"இத்தனை பெண்கள் இருக் கிறீர்களே; நான் ஒருவன் யாரோடு கூட்டாளியாக இருப் பது?"

"ஒருவருமே இல்லாததை விட இது மேல்தானே?" என்றாள் அந்தப் பெண்.

சரி என்று அந்தப் பெண்களை ஒரு கண்ணோட்டம் விட்டான் வாலி பன். தன்னோடு பேசியவளையோ, தெஸ்ஸையோ கவனியாமல், வேறொரு பெண்ணிடம் கையை நீட்டினான். அவளுடன் கூட் டாளியாகச் சேர்ந்து நாட்டியமாடி னான். கொஞ்ச நேரத்துக்கெல் லாம் கிராமத்து வாலிபரெல்லாரும் வந்து சேர்ந்தார்கள்.

"நேரமாகிவிட்டது. தோழர் களுடன் போய்ச் சேர வேண்டும்" என்று சொல்லி விடை பெற்றான் ஏஞ்சல் கிளேர். அவன் அப்போது தான் அழகி தெஸ்ஸைக் கவனித் தான். தான் அவளுடன் கூட்டாளி யாகச் சேராததுபற்றி, அவளுடைய விசாலமான விழிகள் தன்னைப் பழிப்பதை அவன் கண்டு கொண் டான். 'முன்னதாகவே இவளைக் கவனிக்காமற் போனேனே!' என்று வருந்தினான். என்றாலும், நேரமாகி விட்டதே; இனி என்ன செய்வது? அவன் போய் விட்டான்.

தன்னோடு அவன் நாட்டியம் ஆடவில்லையே என்ற அளவற்ற வருத்தத்தோடு தெஸ் வீடு போய்ச் சேர்ந்தாள்.

தங்கள் குலம் மிகப் பெருமை வாய்ந்தது என்ற செய்தியை அவளுக்கு அம்மா சொன்னாள்.

"இதனால் நமக்கு என்ன லாபம், அம்மா?" என்று கேட்டாள் தெஸ்.

அம்மா ஜோன் நல்ல சுபாவம் வாய்ந்தவள். ஆனால், புருஷனைப் போலவே ஊதாரி; பொறுப்புத் தெரியாதவள். தங்கள் குலப் பெரு மையைப் பயன்படுத்திக்கொள்ள அவள் திட்டம் போடத் தொடங்கி விட்டாள்.

"டிராண்ட்ரிட்ஜ் என்ற ஊரில் டி அர்பர்வில் என்ற ஒரு பணக்காரி இருக்கிறாள். அவளிடம் போ. அவள் நமக்கு உறவினள் என்று தெரிவி. நம் குடும்பத்துக்கு அவள் உதவி செய்வாள். உனக்கும் உயர் குலத்துப் பையனைப் பார்த்து மணம் புரிந்து வைப்பாள்" என்று மகளிடம் அவள் சொன்னாள்.

தாயின் சொல்லைத் தட்ட முடிய வில்லை. தவிர, தன் தங்கை, தம் பிக்கு உதவி கிடைக்கவும் இதனால் வழி பிறக்கலாம் என்று எண்ணி னாள் தெஸ். டிராண்ட்ரிட்ஜ் என்ற இடத்துக்குச் சென்றாள்.

**ஸை**மன் ஸ்டோக் என்ற ஒரு லேவாதேவிக்காரன் நல்ல பணம் சம்பாதித்தான். பிறகு, யாரும் அறியாமல் ஒரு கிராமத்துக்குப்

போய்ச் சுகமாய் வாழ விரும்பினான். பழமையான பிரபுகுலப் பட்டப் பெயர் ஏதாவது அகப்படுகிறதா பார்க்கலாம் என்று பிரிட்டிஷ் மியூஸியத்தில் தேடி, 'டி அர்பர்வில்' என்ற பெயரைக் கண்டுபிடித்தான். அதைத் தனக்குச் சூட்டிக்கொண்டு பணக்காரக் குடும்பத்தில் சம்பந்தம் செய்துகொண்டான். அந்த லேவாதேவிக்காரனின் வம்சந்தான் இப்போது டிராண்ட்ரிட்ஜ் என்ற கிராமத்தில் இருப்பது. குருட்டுக் கிழவி ஒருத்தி, அவளுடைய வாலிப மகன் அலெக் இந்த இரண்டு பேருந்தான் அந்த வம்சத்தினர்.

தெஸ் அங்கே போனபோது அந்தக் கிழவியைப் பார்க்கவேயில்லை; வாலிப மகனை மட்டுமே சந்தித்தாள். தெஸ்ஸைக் கண்டதுமே அவளிடம் அவனுக்கு இச்சை விழுந்துவிட்டது. தாயிடம் சொல்லி, கோழிப்பண்ணையின் காவல்காரியாக அவளுக்கு வேலை வாங்கிக் கொடுத்தான். "இதோ பார்: உன்னை டி அர்பர்வில் வம்சம் என்றெல்லாம் பிதற்றிக்கொண்டிராதே. டர்பீபீல்டுதான் உன் வம்சம். என்ன, தெரிந்ததா?" என்று அப்போது அவன் தெஸ்ஸிடம் சொன்னான்.

"எனக்கு இந்த வேலை போதும்" என்று கம்பீரமாகப் பதில் சொன்னாள் தெஸ்.

தெஸ் தன் வேலையை நாணயமாய்ச் செய்து வந்தாள். இந்த நாளில் எல்லாம் அவளிடம் அடிக்கடி வந்து அலெக் சரசம் செய்ய முயல்வான். தெஸ் எரிச்சலும் ஆத்திரமும் மூண்டு அவனை விரட்டிவிடுவாள். என்றாலும் இந்த வேலையை விட்டு வீட்டுக்குப் போனால் பெற்றோர் வருந்துவார்களே என்று எண்ணி, மேலும் அங்கேயே தங்கியிருந்தாள். அவனிடம் தனியே அகப்பட்டுக் கொள்ளாமல் எப்போதும் விலகி விலகி வெகு ஜாக்கிரதையாகத் தன் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவனும் விடவில்லை. தெஸ்ஸை வசியப்படுத்தப் பலவிதமான சூழ்ச்சிகளைச் செய்து வந்தான்.

செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள் மாலை நேரம். அலெக்குக்கு ஏற்ற தருணம் வாய்த்தது.

நகரத்துச் சந்தையிலிருந்து திரும்பிய நாட்டுப்புறப் பெண்கள் பலர் கிராமத்துப் பாதையிலே நடந்து வந்தார்கள். அவர்களில் ஒருத்தி தெஸ். வழியிலே பெண்களுக்குள் ஒரு சிறு சச்சரவு எழுந்தது. தெஸ்ஸை ஒருத்தி கைச் சண்டைக்கு அழைத்தாள்; பல பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு தெஸ்ஸைத் திட்டினார்கள். இன்னது செய்வது என்று தெரியாமல் தவித்தாள் தெஸ். இந்தச் சமயத்தில் அந்தப் பக்கமாகக் குதிரைமீது சவாரி செய்து கொண்டு வந்தான் அலெக்.

"இந்தா, எனக்குப் பின்னால் குதிரைமீது ஏறிக்கொள். இந்த மூதேவிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம்" என்று தெஸ்ஸின் காதோடு சொன்னான்.

வேறு எந்தச் சமயத்திலும் தெஸ் இதற்குச் சம்மதித்திருக்கமாட்டாள். இப்போதிருந்த கொதிப்புற்ற மனநிலையில் சட்டென்று அப்படியே தாவிக் குதிரைமீது ஏறி உட்கார்ந்தாள்.

குதிரையை அலெக், அதிவேகமாக விரட்டிச் சென்றான்.

"குதிரை சற்று மெதுவாக நடக்கட்டுமே" என்றாள் தெஸ்.

அப்படியே அதைக் கட்டுப்படுத்தினான் அலெக். "கச்சிதமாய்த் தப்பி விட்டோம்; இல்லையா, தெஸ்?" என்றான்.

"ஆமாம்; உங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்" என்றாள் தெஸ்.

"உண்மைதானா?"

பதில் இல்லை.

"தெஸ், உன்னை நான் எப்போது முத்தமிட வந்தாலும், நீ ஏன் வெறுக்கிறாய்?"

"உங்களிடம் என்னவோ எனக்கு ஆசையில்லை."

வார்த்தை சிறிது வளர்ந்தது. பிறகு தெஸ்ஸை அலெக் ஒருவிதமாகச் சமாதானப்படுத்தி, அவளை ஒரு நடுக் காட்டுக்குள் கொண்டு சென்றுவிட்டான்.

வழி தெரியாமல் எங்கேயோ வந்து விட்டதுபோல் பாசாங்கு செய்து, அவளைக் கீழே இறக்கி விட்டு, குதிரையை ஒரு புதரில் கட்டினான். வழியைக் கண்டு பிடித்து வருவதாகச் சொல்லிச் சற்று அப்பால் சென்றான்.

தெஸ் மிகவும் களைத்துச் சோர்ந்து அப்படியே கீழே படுத்தாள்.

சந்திராஸ்தமனம் ஆகிவிட்டது. எங்கும் இருள் சூழ்ந்தது. அங்கும் இங்கும் சுற்றிச் சுற்றி அலைந்தான் அலெக். கடைசியில் அருகே அவனுடைய குதிரை அசையும் சத்தம் கேட்டது. காலில் ஏதோ துணி தட்டுப்பட்டது.

"தெஸ்!" என்று அவன் அழைத்தான்.

பதில் இல்லை. அந்த இருளில் ஒன்றுமே கண்ணுக்குத் தெரியவில்லை. ஏதோ வெண்மையான புகைப்படலம் போல் ஓர் உருவம் மட்டும் மங்கலாக அவன் காலடியில் தென்பட்டது. உலர்ந்த இலைச் சருகுகளின்மீது அவன் இறக்கி விட்டுச் சென்ற மஸ்லின் துணி உடுத்த உருவந்தான் அது. மீதி எங்கும் ஏகமாய்க் கறுத்த இருட் கடலே கவிந்திருந்தது.

அலெக் குனிந்தான். மென்மையாக மூச்சுவிடும் ஒலி ஒன்று கேட்டது. அவன் மண்டியிட்டு மெல்ல மெல்லக் கவிழ்ந்து படுத்தான். அந்த மூச்சின் உஷ்ணம் அவன் முகத்திலே பட்டது. அடுத்த கணத்திலே அவள் முகமும் அவன் முகமும் ஸ்பரிசித்தன. அவள் ஆழ்ந்து தூங்கினாள். அவள் புருவத்திலே கண்ணீர் முத்துக்கள் அரும்பி நின்றன.

நாற்புறமும் இருளும் நிச்சப்தமும் சூழ்ந்தன. அவர்களுக்கு மேலே ஓங்கி உயர்ந்த புராதன தேவதாரு மரங்கள் நின்றன. அவைகளிலே பட்சிகள் உறங்கின. அவர்களைச் சுற்றிலும் குழி முயல்கள் துள்ளி ஓடின. ஆனால், தெஸ்ஸைப் பாதுகாக்க வேண்டிய அவளுடைய குல தெய்வம் எங்கே? அவள் வஞ்சமற்ற உள்ளத்தோடு நம்பியிருந்தாளே, அந்தத் தெய்வம் எங்கே? அது ஒருவேளை பேசிக்கொண்டிருக்கிறதோ, பிரயாணம் செய்துகொண்டிருக்கிறதோ, விளையாடிக்கொண்டிருக்கிறதோ, அல்லது யோக நித்திரைதான் புரிந்துகொண்டிருக்கிறதோ? பனிப்படலம் போல் மென்மையான, தூய்மையான இந்தச் சுந்தரப் பெண்ணுருவத்தின் மீது, ஏன் அந்த முரட்டுப் பிண்டத்தின் சுவடு பதிய வேண்டும்? ஆயிரக் கணக்கான வருஷங்களாக மென்மையை

வன்மை இப்படி அபகரித்து வருகிறதே, இது என்ன நியாயம்?

சில வாரங்கள் சென்றன. ஏமாற்றமும் துயரமும் ஆத்திரமும் நிறைந்தவளாய், தெஸ் தன் தாய் வீடு செல்ல ஒருவருக்கும் தெரியாமல் புறப்பட்டாள். அவளைத் தேடிக் கொண்டு ஒரு குதிரை வண்டியில் ஓடிவந்தான் அலெக்.

"எல்லாரும் தூங்கிக்கொண்டிருக்கும்போது அதிகாலையில் ஏன் இப்படிக் கள்ளத்தனமாய்ப் புறப்பட்டாய்? பித்தனைப் போல் உன்னைத் தேடி ஓடிவரச் செய்து விட்டாயே என்னை! நீ என் வீட்டுக்குத் திரும்பி வராவிட்டால், உன்னை வண்டியில் ஏற்றி உன் ஊரில் கொண்டு போய் விடவே நான் வந்தேன்" என்றான்.

"நான் உன்னுடன் திரும்பி வர மாட்டேன்."

"அப்படியானால் உன் கூடையை வண்டியில் வை. நீயும் ஏறிக்கொள். உன் ஊரில் கொண்டுபோய் விடுகிறேன்."

அவள் அலட்சியமாக அப்படியே தன் சுமையை வண்டியில் வைத்துத் தானும் ஏறிக்கொண்டாள். அவனிடம் அவளுக்கு இனி என்ன பயம்? அவளுக்கு எதனால் ஆறாத் துயரம் உண்டாயிற்றோ அதுவே இப்போது அவளுக்குத் தைரியம் அளித்தது.

வண்டி சிறிது தூரம் சென்றதும், அவளூர்த் தோப்புத் தெரிந்தது. அதைப் பார்த்ததும் அவளுக்குக் கண்ணீர் வந்தது.

"ஏன் அழுகிறாய்?"

"அதோ அங்கேதான் நான் பிறந்தேன்."

"எல்லாரும் எங்கேயாவது பிறக்க வேண்டியதுதானே?"

"ஆனால் நான் அங்கேயும் சரி, வேறு எங்கேயும் சரி, பிறக்காமலே இருந்திருக்கப்படாதா! இதை நினைத்துத்தான் அழுகிறேன்."

பேச்சு மேலும் சிறிது நேரம் தொடர்ந்தது.

"முதலில் உன் எண்ணத்தை நான் புரிந்துகொள்ளவில்லை" என்றாள் தெஸ்.

"எந்தப் பெண்ணும் இப்படித் தான் சொல்கிறாள்."

"என்ன பிதற்றுகிறாய்? உன்னை இப்படியே இந்த வண்டியிலிருந்து நெட்டித் தள்ளிவிடலாமா என்று எனக்கு ஆத்திரம் வருகிறது. எந்தப் பெண்ணும் சொல்லுவது சில பெண்களின் உள்ளத்தின் உள்ளே உணர்ச்சியாய்க் கொப்புளிக்கக் கூடும் என்று உனக்கு ஏன் தோன்றவில்லை?"

அவன் நகைத்து, "உன் மனம் புண்படச் செய்ததற்கு வருந்துகிறேன். நான் செய்தது தவறு தான். ஆனால் அதற்காக ஓயாமல் என்னை ஏன் திட்டுகிறாய்? என் குற்றத்துக்குப் பூர்ண அபராதம் செலுத்துகிறேன். உனக்கு வேண்டிய பணம் தருகிறேன். இனி நீ மெய் வருந்த உழைக்க வேண்டாம். நல்ல ஆடை அணியலாம். ரிப்பன் வாங்கக்கூடக் காசில்லையே என்று தவிக்க வேண்டாம்."

அவள் உதடு வெறுப்புடன் சிறிது சுளித்தது. "உன்னிடமிருந்து ஒரு சல்லியும் வாங்கிக் கொள்ள மாட்டேன். வாங்கிக் கொண்டால், உன் இச்சைப்படி நடக்கும் ஜந்துவாக அல்லவா நான் இருக்க நேரும்? நான் மாட்டேன்" என்றாள்.

"தெஸ், நீ அநாவசியமாய்த் துயரப்படுகிறாய். உனக்கு இவ்வளவு துக்கம் வேண்டியதில்லை. இந்தப்

பக்கத்திலே உள்ள எந்தப் பெண்ணும் அழகு, சாந்தம், நயம் இவைகளில் உனக்கு நிகராக மாட்டாள். நீ புத்திசாலியாயிருந்தால், உன் அழகு மங்குவதற்கு முன்பே அதை உலகத்தக்குக் காட்டு.....அதிருக்கட்டும், தெஸ். நீ மறுபடியும் என்னிடம் திரும்பி வருவாயா? நீ இப்படிப் போவது எனக்குப் பிடிக்கவில்லை.''

''மாட்டேன்; ஒரு நாளும் வரமாட்டேன்.''

''அப்படியானால், நீ போகலாம்; என் நாலு மாச அத்தங்காளே, போய்ச் சேர்.''

ஊருக்குச் சமீபத்தில் தெஸ்ஸை இறக்கிவிட்டு, தன் குதிரை வண்டியைத் திருப்பி ஓட்டிக்கொண்டு சென்றுவிட்டான் அலெக்.

வீடு போய்ச் சேர்ந்ததும், தெஸ்ஸின் தாய் கண்டித்த கண்டனம் பொறுக்க முடியவில்லை. ''அவனை வசப்படுத்தி மணந்துகொள்ள உனக்கு எண்ணம் இல்லையென்றால், நீ அவனிடம் ஜாக்கிரதையாக இருந்திருக்க வேண்டும்'' என்றாள் தாய்.

''அம்மா, நாலு மாசத்துக்கு முன் இந்த வீட்டை விட்டுச் சென்றபோது, நான் ஒரு குழந்தை. ஆண்களால் அபாயம் நேரக் கூடும் என்று நீ ஏன் எனக்குச் சொல்லவில்லை?'' என்று கேட்டுத் தெஸ் கண்ணீர் விட்டாள்.

தாய் தணிந்து மகளின் கண்ணீரைத் துடைத்தாள். ''நடந்தது நடந்துவிட்டது. எல்லாம் தெய்வத்தின் கூத்து'' என்று சமாதானப்படுத்தினாள்.

ருதுக்கள் மாறின. அடுத்த வருஷம் ஆகஸ்ட் மாதம் தெஸ் ஒரு தாய் ஆகிவிட்டாள்.

அவள் உடம்பு வெளிறிவிட்டது; உற்சாகம் குன்றியது. அதோடு வயல்களிலே வேலை செய்தாள். கோதுமை அரிக்கட்டுகளை வெகு ஒழுங்காகக் கட்டினாள். ஆனால் மற்றப் பெண்களுடன் அதிகமாகச் சேரவில்லை.

உச்சி நேரத்தில் அவளுடைய தங்கை அவள் குழந்தையைப் புலத்துக்குக் கொண்டு வருவாள். அப்போது அதற்கு அன்போடு தெஸ் பால் கொடுப்பாள். ''பார், அவள் ஆசையோடு குழந்தைக்குப் பால் கொடுப்பதை! அதை வெறுப்பது போல அவள் ஏனோ பாசாங்கு செய்கிறாள்?'' என்று மற்றப் பெண்கள் வம்பளப்பார்கள்.

மலரைப் போன்ற வாயும் விசாலமான விழிகளும் பெற்ற தெஸ், தன் குழந்தையை ஆரோக்கியமாய் வளர்ப்பது ஒன்றிலேதான் இப்போது ஈடுபட்டிருந்தாள். அதனிடம் அவள் பேரன்பு செலுத்தினாள்.

ஒரு நாள் மாலை வேலை விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்தபோது அந்தக் குழந்தை கடுமையாய் நோயுற்றிருக்கக் கண்டாள். அவள் அளவற்ற துயரம் அடைந்தாள். கடைசியில் குழந்தை இறந்தே போய்விட்டது.

அறியாப் பெண்ணாயிருந்த தெஸ், இப்போது உலகியல் அறிந்த மங்கையாகிவிட்டாள்.

வருஷங்கள் சென்றன. அவள் எப்போதும் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தாள். அதற்கிடையே பல தொழில்களையும் புரிவாள். தன் தங்கை தம்பிகளுக்கு வேண்டிய உடுப்பெல்லாம் தயாரித்துத் தருவாள்.

''ஒரு முறை விழுந்துவிட்டால், பிறகு மீட்சியே கிடையாதா?

இதுதான் கற்பின் லட்சணமா?'' என்று தன்னைத் தானே அவள் கேட்டுக்கொண்டாள்.

''சென்றதை மறைக்க முடியு மானால், இந்தக் கொள்கை தவறு என்று நான் நிரூபிப்பேன். உடம் பிலே காயமுண்டானால் அது தானு கவே குணமாகிறது; இது உயிர் வர்க்கத்தின் இயல்பு. கன்னிப் பரு வத்துக்கு ஏற்பட்ட களங்கம் மட்டும் ஏன் குணமே அடையாது?'' என்று சிந்தித்தாள்.

மே மாதத்தில் அவளுக்கேற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. அவள் தாய்க்குத் தெரிந்த ஒரு பால் காரன், தெஸ்ஸுக்கு வேலை கொடுப்பதாக ஒரு கடிதம் எழுதி ஞன்.

ஊரை விட்டு இரண்டாம் முறையாகப் புறப்பட்டாள் தெஸ். முதல் தடவை சென்ற திசைக்கு நேர் எதிர்த்திசையில் இப்போது சென்ருள். வெகுதூரத்தில் உள்ள டால்பத்தாய்ஸ் என்ற பால் பண்ணைக்குப் போய்ச் சேர்ந்தாள்.

அந்தப் பண்ணையில் எங்கே பார்த்தாலும் பச்சைப் பசேல் என்று புல் வளர்ந்திருந்தது. அந்தப் பசும் புல் வெளியெங்கும் வெள்ளை வெளேர் என்று பசுக்கள் மேய்ந் தன.

பால் கறக்கும் பால்காரியாக அங்கே வேலை பெற்ருள் தெஸ். பண்ணை ஜனங்களெல்லாரும் நல்ல உடலுரம் பெற்றிருந்தார்கள். ஒருவ ரிடம் ஒருவர் நட்புக்கொண் டிருந் தார்கள். மெல்ல மெல்லப் பேசினர் கள். படித்த வாலிபன் ஒருவனை அவர்களுக்கு நடுவிலே தெஸ் கண்டாள். சிறு வயதில் தெஸ் நாட்டியமாடியபோது வந்துவிட் டுப் போனுனே ஒரு மாணவன், அவன்தான் இவன்.

''ஏஞ்சல் கிளேர் என்பது இவன் பெயர்; ஒரு பாதிரியின் மகன். அவ ருடைய மற்றப் பிள்ளைகளெல்லாம் அவரைப் போலவே பாதிரிகளாகி விட்டார்கள். இவன் மட்டும் பாதிரி யாகவில்லை. நம் பண்ணை முதலா ளியிடம் தொழில் கற்க வந்திருக் கிருன்'' என்று ஒருத்தி தெரிவித் தாள்.

ஏஞ்சல் கிளேர் பாதிரி படிப்புப் படிக்காததில் அவன் தந்தைக்கு மிகுந்த வருத்தம். ஒரு பால் பண்ணை தொடங்க அவன் விரும்பி ஞன். கல்வியும் சங்கீதமும் சிந்த னைத் திறனும் உடைய ஒருவனுக்கு இப்படி ஓர் ஆசை விழுந்தது தெஸ் ஸுக்கு விநோதமாய்த் தோன்றி யது. முதலில் அவன் ஏதோ ஓர் அறிவின் உருவமாக அவளுக்குத் தோன்றினனேயொழிய, மனித ஞகவே தோன்றவில்லை. அவ னுக்கோ தெஸ்ஸைக் கண்டது ஒரு புதிய அநுபவமாயிருந்தது; கனவில் கண்ட லட்சியப் பெண்ணுக அவள் அவனுக்குத் தோன்றினுள்.

பண்ணையிலிருந்த மற்றப் பெண் களெல்லாம் அவனிடம் பெரிதும் மோகமுற்றுப் பேசும் பேச்செல் லாம் தெஸ்ஸின் காதில் விழுந்தது. என்ருலும், அவன் மிக்க ஒழுக்க மும் புலனடக்கமும் கொண்டு வாழ்வதை அவள் கண்டாள்.

கோடையில் ஒரு நாள் அவளுக் கும் சரி, கிளேருக்கும் சரி, உணர்ச்சி அளவு மீறியது. இரண்டு பேரும் ஒரே இடத்தில் வேலை செய்துகொண் டிருந்தார் கள்.

அவன் திடீரென்று அவள் உடம் பைத் தன் கைகளிலே அணைத்துக் கொண்டு, அவள் காதோடு மெல்லிய குரலில், ''கண்ணே தெஸ், என்னை மன்னி. உன்னிடம் என் இருதய

பூர்வமாய் நான் ஆசை கொள்கிறேன்'' என்றான்.

தெஸ் தன்னை மறந்து பரவசமானாள். அவள் இருதயம் படபட வென்று அடித்துக்கொண்டது.

"தெஸ்ஸி, என்னை நீ மணம் புரிந்துகொள்கிறாயா?"

"முடியாது. எனக்கும் உங்களிடம் ஆசைதான். ஆனால் உங்களை நான் மணந்துகொள்ள முடியாது."

காரணம் என்ன என்று அவன் வற்புறுத்திக் கேட்டான். அவளால் சொல்ல முடியவில்லை. இனி யாரையும் மணப்பதில்லை என்ற முடிவுடனேயே அவள் இங்கே வந்தாள். மணத்துக்கு அவள் சம்மதிக்க முடியாது. தன் பழைய வரலாற்றை அவனிடம் யாராவது சொல்ல மாட்டார்களா என்று ஏங்கினாள். அதைத் தெரிந்தவர் யாரும் இங்கில்லை.

கிளேரோ ஓயாமல் அவளைக் கெஞ்சிக்கொண்டிருக்கத் தொடங்கினான்.

அவளுக்கு அவன் தெய்வம் போல் தோன்றினான். 'மணத்துக்கு எங்கே இணங்கிவிடுவேனோ' என்று பயந்தாள். உண்மை வரலாற்றைச் சொல்லி விடலாமா என்று தவித்தாள். என்னவோ சொல்ல வந்தாள்.

"நான் மணம் புரிந்துகொள்ளாமலே சாவதென்று விரதம் பூண்டிருக்கிறேன்'' என்றாள்.

"தெஸ், என்னிடம் உனக்கு ஆசை என்கிறாயே, அதை நிரூபி, பார்க்கலாம்."

அவள் தன்னை மறந்து அவன் கழுத்தைக் கெட்டியாக அன்புறக் கட்டிக்கொண்டு, அவனை முத்தமிட்டாள்.

"இப்போது நம்புகிறீர்களா?"

இப்படியாக அவள் அவனை மணம் புரியச் சம்மதித்துவிட்டாள்.

புகைந்து கனிந்துகொண்டிருக்கும் அபாயமான கரித்துண்டை மிதித்துத் தள்ளுவது போல, தெஸ் தன் வாழ்க்கையின் சென்ற கால ஸம்பவத்தை அடியோடு மிதித்துத் தள்ளினாள்.

புது வருஷம் பிறப்பதற்கு முதல் நாள் மணமுகூர்த்தம்.

இந்த நிலையில் ஒரு நிகழ்ச்சியால் தெஸ்ஸுக்குப் பழைய ஞாபகம் மீண்டும் வந்தது. "நமது மணமுகூர்த்தத்தைச் சில நாளைக்கு ஒத்திப் போடலாமா?" என்று ஏஞ்சலை அவள் மங்கிய குரலில் கேட்டாள்.

கூடாது என்று அவன் சொல்லிவிட்டான்.

பழைய சம்பவத்தை நேரே அவனிடம் சொல்ல அவளுக்குத் தைரியமில்லை. அதனால் அன்றிரவே உட்கார்ந்து, அதை விளக்கி அவனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். அவன் படுத்துறங்கும் கதவிடுக்கால் உள்ளே போட்டுவிட்டாள். அதைப் படித்துப் பார்த்த பிறகும் அவன் தன்னை மன்னித்து மணம் புரிந்துகொள்வானோ என்பது அவளுக்குச் சந்தேகந்தான்.

அடுத்த நாள் காலையில் அவன் முகத்தை அவள் வெகு கவலையோடு கவனித்தாள். அதில் ஒன்றும் மாறுதல் இல்லை. முன்போலவே அவளை அவன் அன்புடன் முத்தமிட்டான்.

முகூர்த்த நாள் வந்தது. எல்லாம் நிச்சயமாகிவிட்டது. இனி ஒன்றும் செய்வதற்கில்லை. இந்த வேளையில் என்னவோ அவள் உள்ளத்தைத் தூண்ட, ஏஞ்சலின் அறைக்குள் தெஸ் புகுந்தாள். தான் போட்ட கடிதம் வாயிற்படி

யிலேயே கிடக்கக் கண்டாள்! அவள் அவசரத்தில், தரைவிரிப்பான பாய்க்கடியிலே அதைச் செருகி விட்டிருக்கிருள்! இதை அறிந்ததும் அவளுக்கு அப்படியே மூர்ச்சை போட்டுவிடும் போல் இருந்தது. கடிதத்தை எடுத்துச் சுக்குநூருய்க் கிழித்தெறிந்தாள்.

மணம் நடந்து முடிந்தது. தெஸ் இப்போது ஏஞ்சல் கிளேரின் மனைவியாகிவிட்டாள். ஆனல் தான் செய்தது நியாயந்தாஞ என்று எண்ணி அவள் மனம் வேதனைப்பட்டது.

அன்றிரவு இருவரும் உணவருந்தி விட்டு, தங்கள் அறையின் கும்மட்டியருகே குளிர்காய உட்கார்ந்தார்கள். 'எது வந்தாலும் சரி என்று இப்போது அவனிடம் பழைய விஷயத்தைத் தெரிவித்துவிடலாம்' என்று எண்ணிஞள் தெஸ்.

இதற்குள் அவனே, தன் குற்றமொன்றை அவளிடம் சொல்லி மன்னிப்புக் கேட்கத் தொடங்கிஞன். ஏதோ ஒரு கஷ்டமான நிலைமையில், லண்டனில் எவளோ ஒருத்தியுடன் 48-மணி நேரம் தான் நடத்தை தவறி நடந்து கொண்டதாகத் தெஸ்விடம் ஏஞ்சல் தெரிவித்தான்.

"இதற்கு என்னை நீ மன்னிப்பாயா?" என்று கேட்டான்.

அவள் அவனை மன்னித்தாள். பிறகு அவன் கையைக் கெட்டியாசப்பற்றிக்கொண்டாள். தன்னைப் பற்றிய பழைய சம்பவத்தைத் தெரிவித்தாள். "உங்களை நான் மன்னித்தது போல, என்னை நீங்களும் மன்னிக்க வேண்டும்" என்று கடைசியில் அவனைக் கெஞ்சிஞள்.

"தெஸ்!"

"ஏன்?"

"இது நிஜமா? இதை நான் நம்ப வேண்டுமா? உன் புத்தி பேதளித்துவிட்டதோ? என் மனைவி, என் பொக்கிஷமான தெஸ்ஸி! இதை நம்ப முடியவில்லையே."

"என் புத்தி பேதளிக்கவில்லை. நாம் பரஸ்பரம் வைத்திருக்கும் அன்பின் பெயரால் வேண்டுகிறேன்: என்னை மன்னியுங்கள்."

"ஊஹூம், அது சாத்தியமில்லை."

"நான் உங்களை மன்னித்தேனே."

"உண்மை."

"நீங்கள் என்னை மன்னிக்க மறுக்கிறீர்களே!"

"தெஸ், இது வேறு விஷயம். மன்னிப்பு என்பது இங்கே பிரயோகமாகாது."

கடைசியில் அவன் பேய்ச் சிரிப்புச் சிரித்தான். "இனி நான் இந்த அறைக்குள் இருக்க முடியாது" என்று சொல்லி வெளியேறிவிட்டான்.

மீண்டும் இருவரும் பேசிக் கொண்டபோது, "இனி வெகு நாள் வரை என்னேடு வசிக்க மாட்டீர்களோ, ஏஞ்சல்?" என்று தெஸ் கேட்டாள்.

"மனத்தை விட்டுச் சொல்கிறேன், தெஸ்: அவன் ஒருவன் உயிரோடிருக்கிறவரைக்கும் நாம் எப்படிச் சேர்ந்து வாழ்வது? இயற்கை நியதிப்படி அவன்தான் உன் கணவன்" என்ருன் ஏஞ்சல்.

அப்புறம் இரண்டு மூன்று நாள் அவர்கள் ஒரே வீட்டில் வசித்தும், முன்னைவிட மிகவும் விலகி வாழ்ந்தார்கள். தனித்தனி அறையில் படுத்துறங்கிஞர்கள்.

அன்றிரவு தெஸ் மாடி அறையில் தனியே படுத்து உறங்கிக்

கொண்டிருந்தாள். ஒரு மணி அடித்து சிறிது நேரத்துக்கெல்லாம் மாடி அறைக் கதவு கிரீச்சிடும் சத்தம் கேட்டது. தெஸ் விழித்துக்கொண்டாள். ஜன்னல் வழியே வீசும் நிலவொளியில் தன் புருஷன் தனது அறைக்குள் பிரவேசிப்பதைக் கண்டாள். அவன் நடை வெகு விசித்திரமாயிருந்தது. அவள் முதலில் சற்று ஆனந்தம் அடைந்தாள். ஆனால், அவன் விழிகள் எங்கேயோ சூன்ய வெளியை வெறிச்சென்று பார்ப்பதைக் கண்டதும், அவள் ஆனந்தம் குன்றி விட்டது.

நடு அறையில் வந்து அசையாமல் நின்றுகொண்டு, பரம துக்கம் தோய்ந்த குரலில், "செத்தாள்! செத்தாள்! செத்தாள்!" என்று அவன் முணுமுணுத்தான்.

ஏஞ்சலுக்குப் பெரிய மனக் கிளர்ச்சி ஏற்பட்டால், அவன் தூக்கத்திலே எழுந்து நடப்பது வழக்கம். இந்த விதமான நோய் அவனுக்கு உண்டு என்பது தெஸ்ஸுக்குத் தெரியும். அவனிடம் அவளுக்கு அளவற்ற அன்பு இருந்ததால், அவனைக் கண்டு சிறிதும் பயம் என்பது உண்டாகவில்லை. கைத் துப்பாக்கி ஒன்றைத் தூக்கிக் கொண்டு உள்ளே அவன் வந்திருந்தால்கூட அவள் பயந்திருக்க மாட்டாள்.

அவன் அவள் அருகே வந்து குனிந்து, "செத்தாள்! செத்தாள்! செத்தாள்!" என்று முணுமுணுத்தான்.

பிறகு அவளைத் தன் கைகளிலே தூக்கிக்கொண்டான். "என் கண்மணி தெஸ்! பாவம்! என் அருமைக் கண்ணுட்டி தெஸ்!" என்று முணுமுணுத்தபடி அறைக்கு வெளியே எடுத்துச் சென்றான். இதெல்லாம் அவளுக்கு இன்பமாகவே இருந்தது. என்னதான் செய்கிறான் பார்ப்போம் என்று அவள் பேசாதிருந்தாள். மச்சைச் சுற்றிப் போட்டிருந்த கம்பியிலே அவன் சாய்ந்துகொண்டான். மச்சிலேயிருந்து தன்னைக் கீழே தள்ளிவிடப் போகிறானோ என்று அவள் எண்ணினாள். இருந்தாலும் அதற்கு அவள் அஞ்சவில்லை. அவன் கையில் கிடப்பதே பேரின்பமாக இருந்தது அவளுக்கு.

அவன் அவளைக் கீழே ஒன்றும் தள்ளவில்லை. விழிப்பிலே வெறுத்து ஒதுக்கிய அவள் உதடுகளிலே ஒரு முத்தந்தான் கொடுத்தான்.

பிறகு, அபாயமான அந்த நள்ளிரவிலே நிர்மானுஷ்யமான எங்கேயோ அவளைத் தூக்கிச் சென்றான். சுழிந்து சுழிந்து வெள்ளமாய் ஓடிய ஆற்றிலே இறங்கினான். தண்ணீரிலே தன்னை முழுக்கி விடப் போகிறானோ என்று அவள் நினைத்தாள். ஆனால் அதற்கும் அவள் பயப்படவில்லை. அவனை விட்டுப் பிரிவதைவிட இப்படிச் சாவதே மேல் என்றுகூட அவள் மதித்தாள்.

எப்படியோ அந்த வெள்ளத்தைச் சமாளித்து, எதிர்க் கரைக்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே பாழடைந்த சந்நியாசி மடம் ஒன்று இருந்தது. அதில் ஒரு சாமியாரின் கல்லறை திறந்து கிடந்தது. அதில் இருந்த சவப் பெட்டியில் வழிப்போக்கரெல்லாம் வேடிக்கையாகப் படுத்துவிட்டுப் போவது வழக்கம்.

அந்தக் கல்லறையில் தெஸ்ஸை ஏஞ்சல் கிடத்தினான். இரண்டாம் முறை அவள் உதடுகளை முத்தமிட்டான். பிறகு அவள் பக்கத்திலே

தானும் படுத்து, மெய்ம்மறந்து மரக் கட்டைபோல் தூங்கத் தொடங்கி விட்டான்.

ஏஞ்சலின் மனத்தில் எழுந்த பரபரப்பினால் அவனுக்கு உண்டான ஊக்கம் இதோடு முடிவடைந்தது. தெஸ் எழுந்து உட்கார்ந்தாள். அவனை அங்கேயே அந்த நள்ளிரவில் விட்டுவிட்டால், குளிரிலே விறைத்துப் போத விடியுமுன் மாண்டு போவான். தூக்க வியாதி உள்ள பலர் இப்படி மாண்டதைத் தெஸ் கேள்விப்பட் டிருக்கிறாள். ஆனால் மனோவசியத்தைப் போல் பிறர் சொல்லும் யோசனைக்குச் சில சமயம் அவர்கள் கட்டுப்படுவதுண்டு. "என் கண்ணாளா, நாம் நடப்போம்" என்று அவன் காதோடு சொல்லி அவனைக் கைலாகு கொடுத்துத் தூக்கினாள். அவள் யோசனை பலித்தது. அவன் எழுந்து, பழையபடி கனவிலே நடக்கத் தொடங்கினான்.

இருவரும் பத்திரமாக வீடு வந்து சேர்ந்தார்கள்.

அடுத்த நாள் காலையில் எழுந்து ஏஞ்சலைப் பார்த்தபோது, துளிகூட முதல் நாள் இரவு நிகழ்ச்சி அவனுக்கு நினைவில்லை என்பதைத் தெஸ் உணர்ந்தாள். அவனிடம் அதைத் தெரிவிக்க அவள் விரும்பவுமில்லை.

அன்று அவன் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டான். தெஸ்ஸுக்குச் சிறிது பணம் கொடுத்தான். அவளை விட்டுப்பிரிந்து, கப்பலேறி, பிரேஜில் நாட்டுக்குப் போய்விட்டான்.

தெஸ் தாளாத் துயரத்துடன், தாய் வீடு சென்றாள். "என் அவனிடம் பழைய விஷயத்தைச் சொன்னாய்?" என்று அவளைத் தாய் பெரிதும் கோபித்துக்கொண்டாள்.

அடுத்த வருஷம் தெஸ்ஸின் நிலைமை பெரிதும் கஷ்டமாய்ப் போய்விட்டது. பெற்றோருடன் அவள் தங்கியிருக்க முடியவில்லை. விவசாயப் பண்ணைகளிலும் பால் பண்ணைகளிலும் மாறி மாறி அவள் வேலை தேடி, உழைத்துச் சம்பாதித்தாள்.

ஏஞ்சலுக்குக் கடிதத்தின்மேல் கடிதமாகப் போட்டாள். கெஞ்சினாள். ஒன்றுக்கும் பதில் இல்லை.

அவள் தவிப்புடன் எங்கேயோ சென்றுகொண் டிருந்தபோது, ஓரிடத்தில் ஒரு பாதிரியின் பிரசங்கம் நடந்துகொண்டிருந்தது. மிகவும் உருக்கமாக இருந்தது பிரசங்கம்: "மூடர்களே! சத்தியத்துக்குக் கட்டுப்படாமல் உங்கள் உள்ளத்தைக் கெடுத்தவர் யார்? ஒரு நாள் நானுந்தான் கொடும் பாவம் புரிந்து, துன்மார்க்கத்தில் கழித்தேன். கடைசியில் எனக்கு விழிப்பு ஏற்பட்டது..."

பாதிரியின் குரலைக் கேட்டதும் தெஸ் திடுக்கிட்டுப் போனாள். அது அவளைக் கெடுத்த அலெக்கின் குரல்தான். இப்போது அவன் முகம் மாறியிருந்தது. அதில் விரக தாபம் இல்லை; தெய்வ பக்தி ததும்பியது.

அலெக்கும் தெஸ்ஸைப் பார்த்து விட்டான். உடனே அவன் உதடுகள் நடுங்கின. அவனால் பேச முடியவில்லை. அவள் இருந்த திசையைப் பார்க்கவே அவன் கண்கள் கூசின.

ஆனால், சிறிது நேரம் திகைத்து நின்ற தெஸ், அதிவேகமாக ஒரு திசையில் நடந்து சென்றாள்.

பின்னால் அவளை ஓடிப் பிடித்து விட்டான் அலெக். பழையபடி அவளைத் தொல்லை செய்யத் தொடங்கினான். தான் புரிந்த

குற்றத்துக்குப் பரிகாரம் செய்வதாகச் சொன்னான். அவளை முறைப்படி மணம் புரிந்துகொண்டு ஆப்பிரிக்காவுக்கு அழைத்துச் சென்றுவிடுவதாகக் கூறினான்.

"நான் வேறு மனிதரை மணம் புரிந்துவிட்டேன். அவர் தேசாந்தரம் போயிருக்கிறார். உன்னால் தான் அவர் இப்படிப் போனார். அவருக்கு அந்த விஷயம் எட்டி விட்டது..." என்றாள் தெஸ்.

தெஸ்ஸிடம் அலெக் கொண்ட ஆசை கட்டுக்கடங்காமல் போயிற்று. அவன் புகழுடன் பிரசங்கம் புரிவதையெல்லாம் விட்டுவிட்டு அவளே ஞாபகமாகத் திரிந்தான். அவளை அவன் சில சமயம் மிரட்டினான்; சில சமயம் கெஞ்சினான்.

"என் தெய்வ பக்தியை நீ வந்து கெடுத்தாய். இனி என் திருட்டு வாழ்க்கைக்கு நீயும் துணை வா. உன் புருஷன் என்கிறாயே, ஏதோ ஒரு கழுதையை; அதை விட்டுவிட்டு என்னிடம் வந்துவிடு!" என்று ஒரு சமயம் அலெக் சொன்னான்.

தெஸ் மகா கோபங் கொண்டவளாய்த் தன் கையில் போட்டிருந்த தோல் உறையைக் கழற்றி அவன் முகத்திலே அறைந்தாள். அவன் வாயிலிருந்து ரத்தம் பெருகியது.

அவன் ஆத்திர மூண்டான். "ஞாபகமிருக்கட்டும், பெண்ணரசியே! ஒரு சமயம் நான் உன் எஜமானாக இருந்தேன்! மீண்டும் எஜமானாகிறேனா இல்லையா, பார்" என்று கறுவினான்.

தெஸ்ஸின் சங்கடமான நிலையில், ஏஞ்சலுக்கு மிக்க பரிதாபமான ஒரு கடிதம் எழுதினாள். "ரொம்ப அபாயத்தில் இருக்கிறேன். என்னைக் காப்பாற்றுங்கள்! தங்களிடம் விசுவாசம் மாறாத, மனமுடைந்து போன தெஸ்." அவளுக்குப் பிரேஜில் விலாசம் தெரியாது. மாமனார் வீட்டு விலாசத்துக்கே போட்டாள். அவர்கள் அதைத் தன் கணவனுக்குத் திருப்பி அனுப்பட்டும் என்று எண்ணினாள்.

ஏஞ்சலிடமிருந்து ஒரு தகவலும் இல்லை. தன் மாமன் வீட்டில் தன்னை ஒரு பால்காரி என்று மிக இழிவாய்ப் பேசுகிறார்கள் என்று அறிந்து, அங்கே செல்லவும் தெஸ்ஸுக்கு இஷ்டமில்லை. தெஸ்ஸின் நம்பிக்கை சிறிது சிறிதாய் நலிந்து மாய்ந்தது. புதிய தொல்லைகள் தோன்றின. அவளுடைய தந்தை இறந்தார். அவர்கள் வசித்த குடிசையிலிருந்து அவளுடைய தாயையும் குடும்பத்தையும் நில முதலாளி வெளியேறச் சொல்லி விட்டார். தான் தாய் வீட்டுக்கு வந்து சேர்ந்ததால் இப்படித் தொல்லைகள் அதிகரித்தது கண்டு தெஸ் மனம் வெதும்பினாள். தனக்குக் கெட்ட பெயர் வந்திராவிட்டால் நிலமுதலாளி தன் தாயையும் குடும்பத்தையும் குந்த இடமின்றி விரட்டியிருக்க மாட்டார் என்பதை எண்ணியபோது, அவள் உள்ளம் சாம்பிற்று.

எப்படியோ இதை அறிந்து இந்தச் சமயம் பார்த்து அலெக் அங்கே வந்தான். "என் தாய் இறந்து போய்விட்டாள். டிராண்டிரிட்ஜில் உள்ள எங்கள் வீடு காலியாயிருக்கிறது. நீயும் உன் குடும்பமும் அங்கே வந்து வசிக்கலாம், நான் காப்பாற்றுகிறேன்" என்று சொல்லித் தெஸ்ஸின் மனத்தைக் கரைக்க முயன்றான்.

"இன்னும் சில நாள் காத்துப் பார்க்கிறேன்."

"யாருக்காக? அந்த அருமை

யான புருஷனுக்காகவா! இங்கே பார், தெஸ்; ஆண்களின் மனசு எனக்குத் தெரியும். அவன் உன்னிடம் இனி வர மாட்டான். இது உறுதி."

"நீ மட்டும் எங்களைக் காப்பாற்றுவாய் என்பது என்ன நிச்சயம்? உன் மனசும் மாறலாம்."

"இல்லை; இல்லை; இல்லை. அவசியமானால் உனக்கு நான் எழுத்து மூலம் உத்தரவாதம் தருகிறேன். யோசித்துப் பார்."

தெஸ் மறுக்கும் பாவனையில் தலையை அசைத்தாள். அலெக் மேலும் வற்புறுத்தினான். அவள் கடைசி வரையில் சம்மதிக்காமலே அவனைப் போகச் சொல்லிவிட்டாள்.

ஆனால், அவள் மனம் திடீரென்று கொதிப்புற்றது. தன் புருஷன் கிளேரும் மற்றவரைப் போலத்தான் தனக்கு அநீதி இழைத்துவிட்டான். தான் வேண்டுமென்றே தவறு செய்யவில்லை. அப்படி இருக்க, தனக்கு ஏன் இந்தக் கொடிய தண்டனை?

அன்றிரவே ஏஞ்சலுக்கு அவள் ஆத்திரத்தோடு ஒரு கடிதம் எழுதினாள்: "ஏஞ்சல், ஏன் என்னை இவ்வளவு அரக்கத்தனமாய் நடத்துகிறீர்கள்? நான் இதற்குப் பாத்திரமானவள் அல்ல; மிகக் கொடியவர் நீங்கள். எனக்கு நீங்கள் செய்ததெல்லாம் அநீதி. இனி உங்களை நான் மறந்து விடப் போகிறேன்.-தே."

ஒரு நாள் மாலை நேரத்தில் ஏஞ்சல் தன் தகப்பன் வீட்டுக்குத் திரும்பி வந்து சேர்ந்தான். பிரேஜில் நாட்டிலிருந்து வந்த தங்கள் மகனைக் கண்ட பெற்றோர் திடுக்கிட்டுப் போனார்கள். அவன் இளைத்துத் துரும்பாயிருந்தான். கண்கள் குழிந்து பஞ்சடைந்திருந்தன. கால்கள் தள்ளாடின.

"எனக்கு ஏதாவது கடிதம் சமீபத்தில் வந்ததா? முந்தி நீங்கள் திருப்பி அனுப்பிய தபால் மிகவும் தாமதித்தே கிடைத்தது. இல்லாவிட்டால், நான் இன்னும் சற்று முன்னதாகவே வந்திருப்பேன்" என்றான் ஏஞ்சல்.

"அது உன் மனைவியிடமிருந்து வந்த கடிதந்தானே?"

"ஆமாம்."

சில தினங்களுக்கு முன் இன்றென்று வந்தது. ஏஞ்சல்தான் வந்துவிடப் போகிறானே என்று நினைத்து அதை வீட்டிலேயே வைத்திருந்தார்கள்.

ஏஞ்சல் அதை வாங்கிப் பிரித்து வாசித்தான்: "ஏஞ்சல், எனக்கு நீங்கள் செய்ததெல்லாம் அநீதி..."

"முற்றும் உண்மை! அவள் இனி என்னுடன் ராஜியாக மாட்டாள்" என்று சொல்லிக்கொண்டே அந்தக் கடிதத்தை ஏஞ்சல் விட்டெறிந்தான்.

மனைவியைத் தேடிப் புறப்பட்டான். தெஸ்ஸின் தாய் வசித்த புதிய விலாசத்தில் போய், "தெஸ் எங்கே?" என்று அவளை விசாரித்தான்.

அவள் சரியாகப் பதில் சொல்லவில்லை.

"அவளை நான் தேடிக் கண்டுபிடித்தால், அவளுக்குச் சந்தோஷமாக இருக்குமா?"

"அது சந்தேகந்தான்."

"அவள் விலாசத்தை எனக்குச் சொல்லுங்கள்" என்று மறுபடியும் மாமியை ஏஞ்சல் கெஞ்சினான்.

கடைசியாக அவள் மெல்லிய குரலில், "ஸாண்ட்போர்ன் என்

னும் இடத்தில் தெஸ் வசிக்கிறாள்'' என்றாள்.

அது ஒரு சுக வாசஸ்தலம். அங்கே பெரும் பணக்காரர்கள் தங்கக் கூடிய ஒரு விடுதியின் முன் மண்டபத்தில் தெஸ் தோன்றினாள். காஷ்மீர் தேசத்துச் சால்வையால் தயாரித்த மதிப்புயர்ந்த உடுப் புடுத்து, அதற்கேற்ற ஜோடணிந்து மிக்க எழிலுடன் அவள் தென்பட் டாள். அவளை வரவேற்றுத் தழுவக் கைகளை நீட்டினான் ஏஞ்சல். அவள் முன் வரவில்லை. தான் இளைத்து விகாரமாயிருப்பதையும் அவள் இருக்கும் நிலையையும் மனத்துக் குள் ஒப்பிட்டுப் பார்த்தான். தன்னை அவளுக்கு இந்த நிலையில் பிடிக்க வில்லை என்று எண்ணினான்.

''தெஸ்ஸீ! நான் போனதற்கு என்னை மன்னிப்பாயா? என்னிடம் திரும்பி வருவாயா? உனக்கு இதெல்லாம் எப்படிக் கிடைத் தது?''

தெஸ்ஸின் கண்கள் என்னவோ போல் ஜொலித்தன: ''காலம் கடந்துவிட்டது. உங்களுக்காக நான் காத்துக் காத்துப் பார்த்தேன். அது மூடத்தனம் என்று அவன் என்னைப் பழித்தான். என்னிடம், என் தாயிடம், எங்கள் குடும்பத்தி டமே மிக்க அன்பு காட்டினான். அவன் இதோ மாடியில் இருக்கி றான். இப்போது அவனிடம் எனக்கு மகா வெறுப்பாயிருக்கிறது. ஐயோ! நீங்கள் போய்விடுங்கள்; தயை செய்து போய்விடுங்கள்!''

ஏஞ்சலின் முகம் சுண்டிப் போ யிற்று. தான் யாருமற்ற ஏகாங்கி யானது போல் அவனுக்கு உணர்ச்சி உண்டாயிற்று. விடுதியை விட்டு வெளியேறினான். ஒரு குறியுமற் றுக் கால் போன போக்கில் நடந் தான்.

சற்றுநேரத்துக்கெல்லாம் இப்படி அவன் போய்க்கொண்டேயிருக்கை யில், தெஸ் இரைக்க இரைக்க ஓட் டமாய் ஓடி வந்து அவனை எட்டிப் பிடித்தாள். அவள் உடம்பு நடுங் கிக்கொண்டே யிருந்தது.

''ஏஞ்சல், எதற்காக இப்படி ஓடிவருகிறேன், தெரியுமா? அவனை நான் கத்தியால் குத்திக் கொன்று விட்டேன். இதைச் சொல்லத் தான்'' என்றாள்.

''நிஜமாகவா?''

''ஆமாம். நீங்கள் வெளியேறிய பிறகு, உங்களை எண்ணி நான் கத றிக்கொண் டிருந்தேன். அவன் என்னை அதட்டினான். உங்களைக் கேவலமாகத் திட்டினான். அதை என்னால் சகிக்க முடியவில்லை. அவனாலேயே முதல் தடவை உங்களை இழந்தேன். இப்போது இரண்டாந் தடவையும் இழந்து விட்டேன். அவனை இப்போது கொன்றுவிட்டேன். இனி உங்க ளுக்கு நான் செய்த துரோகத்தை மன்னியுங்கள். உங்களைத் திரும்பி அடைய அவனைக் கொல்வதுதான் வழி என்று இதைச் செய்தேன். இனியும் உங்களை நான் இழந்திருக்க முடியாது, ஏஞ்சல். உங்கள் அன் பில்லாமல் நான் வாழ முடியாது. என் அருமைக் கணவர் நீங்கள். என்னிடம் இப்போது உங்களுக்கு அன்புதானே?''

ஏஞ்சல் மனம் உருகிவிட்டான். உலர்ந்து வெளுத்திருந்த அவள் உதடுகளில் திரும்பத் திரும்ப ஓயா மல் முத்தமிட்டான். ''உன்னைக் கைவிட மாட்டேன், என் ஆசைக் கண்மணியே. உன்னை நான் பாது காப்பேன். நீ என்ன செய்திருந்தா லும் பரவாயில்லை'' என்றான்.

இருவரும் நடந்தார்கள். அதிகா ரிகள் தேடி வருவார்களாதலால்,

சிலகாலம் எங்கேயாவது ஒளிந்து திரிந்துவிட்டு, பிறகு கப்பலேறி வெளிநாட்டுக்குப் போய்விடலாம் என்பது ஏஞ்சலின் எண்ணம்.

நியூபாரஸ்ட் என்ற காட்டுப் பிரதேசத்தில், கிராமவாச மாளிகை ஒன்று இருந்தது. 'இதை வாடகைக்கு வேண்டுவோர் லண்டனுக்கு எழுதுக' என்று விளம்பரம் போட்டிருந்தது. யாரும் குடியிராத அந்த மாளிகைக்குள் ஒரு ஜன்னல் வழியாக ஏஞ்சலும் தெஸ்ஸும் புகுந்தார்கள். ஒரு நாள் இரவு இன்பமாய்க் கழிந்தது. அதிகாலையில் பனி மூட்டத்தில் ஏஞ்சல் மட்டும் வெளியேறினான். இரண்டு மைல் தூரத்தில் உள்ள நகரத்தில் ரொட்டி முதலியவை வாங்கிவந்தான். இப்படியே ஐந்து நாள் ஏகாந்த ஆனந்தத்தில் சென்றது. ஆறாவது நாள் வீட்டுக்கார மானேஜர் பார்வையிட வருவான் என்றறிந்து இருவரும் வெளியேறினார்கள்.

"ஆனந்தமான வீடே, உன்னிடம் விடை பெறுகிறேன்!" என்றாள் தெஸ். ஏஞ்சலை நோக்கி, "என் வாழ்வெல்லாம் இன்னும் சில நாள் தான். இப்போது நீங்கள் என்னிடம் வைத்திருக்கும் அன்பு குறையு முன்பே நான் போய்விட ஆசைப்படுகிறேன். நீங்கள் வெறுத்த பின் வாழும் வாழ்வைவிட நான் செத்துப் புதைந்து போவதே மேல்" என்றாள்.

"என் அருமைக் கண்மணி, உன்னை நான் ஒரு நாளும் வெறுக்க மாட்டேன்."

பிறகு அவர்கள் ஸ்டோனெஞ்சு என்ற இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். பூர்விகக் குடிகள் கட்டியதும் இப்போது பாழடைந்தது மான ஒரு கோயிலின் பிரம்மாண்டமான தூண்கள் அங்கே தென்பட்டன.

தெஸ் மிகவும் களைத்துப் போனாள்.

"எனக்குத் தூக்கம் வருகிறது" என்று சொல்லி, அங்கே கிடந்த ஒரு கல்லின்மீது படுத்தாள்.

"பலி பீடத்தின்மீது நீ படுத்திருக்கிறாய்" என்றான் ஏஞ்சல். மண்டியிட்டு, அவள் உதடுகளில் முத்தமிட்டான்.

"ஏஞ்சல், எனக்கு ஏதாவது கெடுதல் நேரிட்டால், நீங்கள் என் தங்கை லிஸா லூ என்பவளை எனக்காகக் காப்பாற்றுவீர்களா? அவளையே மணந்துகொள்வீர்களா?"

"எனக்கு நீ போனால் சகலமும் போச்சு. தவிர, லிஸா லூ என் மைத்துனி ஆச்சே."

"பரவாயில்லை, ஏஞ்சல். மைத்துனியை மணப்பது எங்கள் பக்கத்தில் வழக்கந்தான். அவளிடம் என்னுடைய நற்குணமெல்லாம் இருக்கிறது; என் கெட்ட குணம் மட்டுமே இல்லை. அவளை நீங்கள் மணப்பதானால் சாவும் நம்மைப் பிரிக்காது என்றே எனக்குத் தோன்றுகிறது."

அவன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

"செத்த பிறகு நாம் மீண்டும் சந்திப்போம் என்று நீங்கள் நம்புகிறீர்களா, ஏஞ்சல்?"

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் தப்பித்துக்கொள்வதற்காக அவளை அவன் முத்தமிட்டான்.

"அப்படியானால், சந்திக்கமாட்டோமா? மீண்டும் உங்களைச் சந்திக்க எனக்கு மிக ஆசையாயிருக்கிறது; மிக மிக ஆசையாயிருக்

கிறது. ஒருவர்மீதொருவர் இவ்வளவு பிரீதி வைத்திருக்கிறோமே, நாம்கூடவா மீண்டும் சந்திக்க மாட்டோம், ஏஞ்சல்?"

சிக்கலான இந்த வேளையில், சிக்கலான இந்தக் கேள்விக்கு, அவனைவிடப் பெரியவர்களே பதிலளித்திருக்க மாட்டார்கள். அவனும் அப்படியே பேசாதிருந்தான்.

இரண்டொரு நிமிஷத்தில் தெஸ் ஒழுங்காக மூச்சு விட்டுக்கொண்டு தூங்கத் தொடங்கினாள். அவனைப் பிடித்திருந்த அவள் பிடி நழுவியது.

கிழக்கே அடிவானம் மங்கிய வெள்ளி போல் வெளுத்தது. பொழுது விடியுமுன் சூழும் இருள் சமவெளியெங்கும் பரந்தது. தூங்கும் தெஸ்ஸையே கவனித்துக் கொண்டிருந்தான் ஏஞ்சல்.

அப்போது அவனுக்குப் பின்புறம் புதரில் ஏதோ காலடிச் சத்தம் கேட்டது. ஏஞ்சல் திடுக்கிட்டுத் திரும்பினான். அங்கே ஒரு மனிதன் தோன்றினான். அவனுக்குப் பின் இன்னொருவன் தோன்றினான். இப்படியே பலர் தோன்றினார்கள்.

துள்ளி எழுந்தான் ஏஞ்சல். ஏதாவது ஆயுதம் கிடைக்குமா, தப்ப வழியுண்டா என்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

"பயனில்லை, ஐயா. நாங்கள் பதினறு பேர் வந்திருக்கிறோம்" என்றான் வந்த அதிகாரிகளில் ஒருவன்.

தெஸ் விழிப்புற்று, "இதென்ன, ஏஞ்சல்? என்னைப் பிடிக்க வந்து விட்டார்களா?" என்று கேட்டாள்.

"ஆம், என் கண்ணே!"

"நடக்கவேண்டியது நடக்கிறது. ஏஞ்சல், எனக்குச் சந்தோஷந்தான். இந்தச் சந்தோஷம் அளவு மிஞ்சியது..." என்றாள் தெஸ்.

பிறகு எழுந்து, தன் உடுப்பை உதறிக்கொண்டு, முன்னே வந்தாள். அதிகாரிகள் அவளைத் தொட நெருங்காமல் நின்றுகொண்டிருந்தார்கள்.

"நான் தயார்" என்று அவள் மிக அமைதியாகச் சொன்னாள்.

ஜூலை மாதச் சூரியன் வானத்தில் பிரகாசித்துக்கொண்டிருந்தது. காலையில் மணி எட்டு.

இளமை வாய்ந்த இருவர், ஒருவருடன் ஒருவர் கைகோத்துக் கொண்டு, ஒரு குன்றின்மீது ஏறினார்கள். அந்தக் குன்றின் உச்சியிலே விகாரமான ஒரு கோபுரம் இருந்தது. ஏஞ்சல், லிஸா லூ இருவர் கண்களுக்கும் அந்த நேரத்தில் நகரத்துக்கே திருஷ்டி பரிகாரம் போன்ற இந்தக் கோபுரத்தைத் தவிர வேறு ஒன்றுமே தென்படவில்லை. தெஸ்ஸைவிட இவள் சிறிது ஒல்லி. ஆனால், அதே அழகிய விழிகள். ஏஞ்சலிடம் லிஸா லூ கெட்டியாக ஒட்டிக்கொண்டாள்.

கோபுரத்தின் பால்கனியில் நீண்ட கம்பம் ஒன்று நிறுத்தியிருந்தது. இந்த இளம் பெண், வாலிபன் இருவர் கண்களும் அதன் மீதே பதிந்திருந்தன. மணி அடித்த சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு கறுப்புக் கொடி அந்தக் கம்பத்தின்மீது ஏறிப் பறந்தது.

'நீதி' நிறைவேறிவிட்டது. தெஸ்ஸிடம் தேவாதி தேவனான பரமனின் திருக்கூத்து முடிவெய்தியது.

கறுப்புக் கொடியையே மௌனமாக வெறித்து நோக்கிக்கொண்டிருந்த வாலிபனும் இளம் பெண்

ணும் மண்டியிட்டுத் தலை பணிந்து ஏதோ பிரார்த்தித்தார்கள். கொடி நிச்சப்தமாக அசைந்தாடிக் கொண் டிருந்தது. அந்த இருவருக்கும் மனத்திலே தெம்பு உண்டான பின்பு அவர்கள் எழுந்து, மீண்டும் கைகோத்து, நடந்து சென்றார் கள்.

## வெற்றிக்குக் காரணம்

153 வருஷங்களுக்கு முன்பு இங்கிலாந்திலுள்ள வேல்ஸ் மாகாணத்தின் மேற்குப் பிரதேசத்தில் நடந்த ரசமான சம்ப வம் இது:

அப்பொழுது உலகத்தையே ஜயித்துவிடுவதென்று திட்ட மிட்டிருந்தான் நெப்போலியன். ஏராளமான படைவீரர் களுக்குப் பயிற்சி அளித்து வந்தான். இதைக் கண்டு ஐரோப்பா முழுவதுமே கதிகலங்கி நின்றது. ஆங்கிலேயர்களும் நெப்போலி யன் நம் நாட்டின்மீது படையெடுத்துவிடுவானோ என்று அஞ்சிக்கொண் டிருந்தார்கள்.

வேல்ஸ் பிரான்ஸுக்கு நேராக அமையாததால் அங்கே படையெடுப்பு அபாயம் அதிகம் இல்லை. அதனால் அந்தப் பகுதி யில் குறைந்த படைகளையே நிறுத்தியிருந்தார்கள். அயர் லாந்தை நோக்கிப் புறப்பட்ட ஒரு பிரெஞ்சுப் படை தவறி வேல்ஸ் கடற்கரையோரத்தில் வந்து இறங்கிவிட்டது. பிரெஞ்சு வீரர்களைக் கண்ட கிராமவாசிகள் உடனே இந்தச் செய்தியை எங்கும் பரப்பிவிட்டார்கள். உள்ளூரில் இருந்த காவற்படை திரண்டது. பிரெஞ்சு வீரர்களை மூச்சுள்ள வரை எதிர்ப்ப தென்று உறுதியாக இருந்தது அந்தப் படை.

அந்தப் பிரதேசத்துப் பெண்களும் பிரெஞ்சு வீரர்களை முறியடிக்கத் தம்மால் ஆன உதவி செய்வதென்று தீர்மானித் தார்கள். எல்லாரும் கூடி யோசித்தார்கள். உடனே வீட் டுக்குச் சென்று ஒவ்வொருவரும் சிவப்பு ரவிக்கை அணிந்து கொண்டு வரிசையாக அணிவகுத்துப் புறப்பட்டார்கள். அருகே இருந்த ஒரு குன்றின்மேல் ஏறிப் பேரிகை முழங்கியபடி சுற்றிச் சுற்றி வந்தார்கள். பிரிட்டிஷ் வீரர் களுக்கும் சிவப்பு உடுப்பு உண்டு. ஆகவே, ஏராளமான பிரிட்டிஷ் வீரர்கள் தயாராக மலையின்மேல் இருப்பதாக எண்ணிப் பயந்து விட்டார்கள் பிரெஞ்சு வீரர்கள். உடனே அவர்கள் வேல்ஸ் காவற்படையிடம் சரணடைந்தார்கள்.

சிவப்பு ரவிக்கையோடு வந்து தோன்றிய 400 பெண் களின் துணிச்சல்தான் இந்த வெற்றிக்குக் காரணம். இல்லா விட்டால் இங்கிலாந்தின் சரித்திரமே மாறியிருக்கும்.

—பார்னி ஸ்குவார்ட்ஸ்

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

# இன்றைக் கல்வி

கோடை நாளில் பள்ளிக்கூடங்களில் தொடர்ந்து இரண்டு மாதம் விடுமுறை விடுகிறார்கள். குடியானவன் வெயிலில் வேலை செய்கிறான்; நாமோ பள்ளிக்கூடங்களில் உட்கார்ந்து படிக்க முடிவதில்லை! இந்தமாதிரி, வருஷத்தில் 4 அல்லது 6 மர்தம் விடுமுறை விட்டுக்கொண்டு பன்னிரண்டு அல்லது பதினைந்து வருஷங்கள்வரை படித்துக்கொண்டே இருக்கிறோம். குழந்தைகளின் தாய்தந்தையர் அவர்களுடைய கல்விக்காகப் பணம் செலவழிக்கிறார்கள். குழந்தைகள் வேலை செய்யாமல், தங்கள் வாழ்நாளை எப்படிக் கழிப்பது என்று யோசிப்பதிலேயே நேரம் கழிக்கிறார்கள். இதில் குழந்தைகளின்மேல் குற்றம் ஒன்றுமில்லை. அவர்களுக்குக் கிடைத்திருக்கும் கல்வி சக்தியற்றது. அதனால் குழந்தைகளின் சரீரம் நாசுக்காகிவிடுகிறது. அவர்களுக்கு ஆத்மபலம் ஏற்படுவதில்லை. வேலை செய்யும் பழக்கம் உண்டாவதில்லை. எந்தவிதமான கைத்தொழிலும் அவர்களுக்கு யாரும் கற்பிப்பதில்லை.

தேசத்துக்காக ஏதாவது கொஞ்சம் உற்பத்தி செய்வது ஒவ்வொருவரின் கடமையென்று உபதேசம் செய்கிறார்கள். கேட்பவர்களும் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் இருவரும் சேர்ந்து ஒரு பொருளையும் உற்பத்தி செய்வதில்லை. யாராவது வேலை செய்தால்தானே பொருள் உற்பத்தியாகும்? உற்பத்தி செய்ய உதவும் கல்வி பள்ளிக்கூடங்களில் இல்லை. இந்த நிலையில் நகரக் கல்வி தேசத்துக்கு ஒரு நன்மையும் செய்ய முடியாது. இந்தக் கல்வியினால் வேலையில்லாத் திண்டாட்டந்தான் பெருகுகிறது. மேலும், மனிதனின் மனத்தில் ஒருவித அதிருப்தியும் உண்டாகிறது. ஆகையினால்தான் நகரங்களில் இத்தனை பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் இருந்துங்கூட, தேசத்துக்கு நன்மை ஏற்படவில்லை. மனிதத்தன்மை உயரவோ, எளியவர்களின் துன்பத்தை நீக்கவோ, பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிக்கவோ, எல்லாரையும் வீரியவான்களாக்கவோ, பலவான்களாக்கவோ நாம் ஒன்றும் செய்ய முடிவதில்லை. இன்றுள்ள நிலையில் நகரங்களே ஒருவிதத்தில் தேசத்துக்குப் பாரமாக இருக்கின்றன என்றுதான் சொல்லவேண்டும்.

—விநோபா பாவே

September '51 Regd. No. M. 4975

# மஞ்சரி

கர - புரட்டாசி


| | | |
|---|---|---|
| ஊரும் உலகமும் | | 1 |
| சைகிளின் கதை | | 3 |
| சீதையின் தருமோபதேசம் | | 6 |
| க்விஸ் | | 9 |
| குடியரசு | ரா. ஸ்ரீ. தேசிகன் | 10 |
| புராதனச் சவம் | | 16 |
| க்விஸ் விடை | | 17 |
| பாபுராவ் பதில் சொல்லுகிறார் | பிலிமிண்டியா | 18 |
| லஞ்ச ஊழல் | | 20 |
| குழந்தைகள் குறும்பு | | 22 |
| தெனாலி ராமகிருஷ்ண கவி | பாரதி | 24 |
| தாம்பூல இன்பம் | சௌபாக்ய | 27 |
| கார்ட்டூன் கதம்பம் | | 30 |
| குரைக்காத நாய் | | 32 |
| டான்ஸில் பயம் | | 33 |
| எங்கள் உலகம் | ஸ்திரீ | 36 |
| விவேகானந்தர்: வாழ்வும் வாக்கும் | | 40 |
| சிலைக்கு வர்ணமா? | அமெரிக்கன் ரிப்போர்ட்டர் | 43 |
| பர்மாவில் கம்யூனிஸ அபாயம் | இந்தியன் ரெவ்யூ | 46 |
| தென் இந்திய பஸ்கள் | ப்ரீ இந்தியா | 51 |
| உலகத்தில் பெரியவர் யார்? | | 54 |
| வழி வழி வந்த வசனநடை: அன்புடைமை | | 57 |
| பாடம் கேட்ட கிளி (சிறுகதை) | ரவீந்திரநாத் டாகுர் | 59 |
| உத்தமி (நாவல் சுருக்கம்) | தாமஸ் ஹார்டி | 63 |
| இன்றைக் கல்வி | வினோபா பாவே | 3-ஆம் அட்டை |